பெப்ரவரி 11, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

வார மலர்



## முஸ்லிம் காங்கிரஸில் தொடர்ந்து பிரச்சினை

## மக்கள் சக்தி பொங்கி எழுந்தால்...



# சமாதான முயற்சியில் மீண்டும் சிக்கல் எனினும் நோர்வே நம்பிக்கை





## மட்டக்களப்பில் தமிழ் மண்ணை அபகரிக்க திட்டமா?

## வடக்கில் தங்க நகை மோசடி!

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நூலகத்துறைப் படிப்பகம்

# வடக்கில் தங்க நகை மோசடி!
# அத்திவாரமிட்டதே அரசுதான்!!

'தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ...' என்ற பிரபல பாடல் அடியை யாழ். தங்க நகைத் தொழிலாளர்கள் பொய்ப்பித்து விட்டார்களா?

யாழ்ப்பாணத்தில் இருந்து 'சுடர் ஒளி' கட்டுரையாளர் தரும் தகவல்கள் இப்படி எண்ண வைக்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தங்கநகை வியாபாரம் இன்னமும் ஓஹோ என்றே நடக்கிறது. தொடரும் போர் வர்த்தக நடவடிக்கைகளில் அடிக்கடி மந்த நிலையை ஏற்படுத்தி வந்துள்ள போதிலும் தங்க நகை வியாபாரம் பெரிய அளவில் தாக்கப்படவில்லை என்றே கூறவேண்டும்.

யாழ். நகரில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட நகைக் கடைகள் உள்ளன. நகரை உள்ளடக்கிய யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவில் மட்டும் இந்த எண்ணிக்கை இருநூறைத் தாண்டும் என்கிறது வணிகர் கழகம். இந்தக் கடைகள் தங்க நகைகளை வாங்கி பின்னர் விற்கும் மையங்கள் ஆகும். இவற்றைவிட தங்க ஆபரணங்களைத் தயாரிக்கும் தொழிலில் பல நூற்றுக் கணக்கான ஆபரணத் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

போரின் உச்சக்கட்டம் மற்றும் இடப் பெயர்வுகளுக்கு மத்தியிலும் நகைக் கடைகள் சுறுசுறுப்பாக இயங்குவதுண்டு. இதற்குக் காரணம் தங்கத்தின் மதிப்பு மட்டுமல்ல தங்கத்தின் மீதான யாழ். மக்களின் அதீத மதிப்பும் தான்.

ஒரு சமயம் வீடுவாசல்களை விட்டு வெளியேறி ஒட்டுமொத்தமாக இடம் பெயர்ந்தபோது அநேகமாக எல்லோருக்கும் கைகொடுத்தவை இந்தத் தங்க நகைகள் தான். ஒரு பவுண் சுமார் ஐந்நூறு ரூபாவரை வீழ்ச்சி கண்டிருந்த போதும் அதனை விற்று சீவியத்தை ஓட்ட முடிந்தது.

போரின் கொடுமைகளுக்கு மத்தியிலும் தமிழ் மக்கள் - குறிப்பாக யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் - பொருளாதார ரீதியில் துவண்டுவிடவில்லை. அவர்கள் ஓரளவு தாக்குப் பிடிப்பதற்கு அவர்களது முதுசங்களில் ஒன்றான தங்க நகை சேமிப்பும் ஒரு பிரதான காரணம் என்கிறார்கள்.

தென்மராட்சியில் வீடுகளில் புதைத்து வைத்து விட்டு வந்த தங்க நகைகளை மீட்டு வருவதற்காகப் பலரும் முண்டியடிக்கின்றனர். வீடுகள் தரைமட்டமாகி விட்டபோதும் இந்தப் புதையல்களே அவர்களது எதிர்காலத்துக்கான ஒரே நம்பிக்கையாக உள்ளன.

போரின் பாதிப்புகளுக்கு மத்தியிலும் வளர்ந்து வரும் தங்க நகை கலாசாரம் யாழ்ப்பாணத்தில் இன்று என்ன நிலையில் இருக்கிறது?

வெளிநாடுகளில் இருந்து உறவினர்களால் அனுப்பப்படும் பணம் சமூக அமைப்பில் பலமான தாக்கங்களை உண்டு பண்ணும் காரணியாக மாறி உள்ளது. வெளிநாட்டுக்காசை தங்க நகைகளாக மாற்றிக் கொள்ளும் போக்கு வளர்ந்து வருகிறது. யாழ்ப்பாணத்தில் சீதனமாக வழங்கப்படும் நகைகளுக்கு ஒரு அளவே கிடையாது எனச் சொல்லும் அளவுக்கு நிலைமை இருக்கிறது.

தங்க நகைக் கலாசாரம் இப்படியாக இருக்க, தங்க நகை வியாபாரத்தின் பின்னணி வேறு விதமாக - தங்க நகைப் பிரியர்களுக்கு அதிர்ச்சியூட்டுவதாக இருக்கிறது.

வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களைத் தீர்மானித்து அறிவிக்கும் பொறுப்பில் இருந்து மத்திய வங்கி விலகியதை அடுத்து இலங்கை ரூபாவின் பெறுமதி 'மளமள' வெனச் சரிந்து வருகிறது. இதன் தாக்கம் நாட்டில் பட்டி தொட்டி எங்கும் எதிரொலிக்கத் தொடங்கி விட்டது.

யாழ்ப்பாணத்திலும் அதன் தாக்கம் உடனடியாக உணரப்பட்டு விட்டது. அத்தியாவசியப் பொருள்கள் உட்பட அனைத்துப் பொருள்களும் நிச்சயமற்ற விலைக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைகள் யாழ்ப்பாணத்தில் என்றைக்குமே இருந்ததில்லை என்பது வேறு விடயம் உயர்ந்துள்ளன.

தங்கத்தின் விலையிலும் இது அதிரடி உயர்வை ஏற்படுத்தியிருக்கிறது. தங்கத்தின் விலை ஆறாயிரத்து 200 ரூபாவில் இருந்து 7 ஆயிரம் ரூபாவுக்கு உயர்ந்தது. மறுநாள் சற்றுக் குறைந்து கூடியது.

தங்கத்தின் விலை திடீரெனக் கூடிக் குறைவதால் நகை வியாபாரிகள் நிதான விலையில் அதனை விற்க முடியவில்லை. அவர்கள் திண்டாடும் நிலை ஏற்பட்டிருப்பதாக நகை வியாபாரிகள் வட்டாரத்தில் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலைமை பற்றி யாழ். நகரில் உள்ள சில பிரபல நகை வியாபாரிகளை அணுகி விசாரித்த போது வெளியே தெரியாத பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தன.

கடந்த சுமார் 15 வருடகாலமாக யாழ்ப்பாணத்துக்கு சட்ட விரோதமான வழிகள் ஊடாகவே தங்கம் கிடைத்து வருகிறது என்பது அவற்றில் ஒரு தகவல்.

தங்கத்தை விநியோகிக்கும் பொறுப்பில் இருந்து அரசும் அதன் வங்கிகளும் விலகிக் கொண்டதை அடுத்து சட்ட பூர்வமாகத் தங்கத்தை வாங்கும் சகல வழிகளும் அடைக்கப்பட்டு விட்டன. 1980 களின் தொடக்கத்திலேயே இந்த நிலைமை ஏற்பட்டு விட்டது என்றார் ஒரு நகை வியாபாரி. அதுவரை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நகை உற்பத்தியாளர்களுக்கு மட்டும் வங்கி ஊடாக தங்கம் விநியோகிக்கப்பட்டு வந்தது. அதுவும் அற்ப சொற்ப அளவிலேயே.

தங்கத்தை எடுத்து வந்து சட்டபூர்வமாக விநியோகிக்க முடியாமல் போனது ஏன்? அதற்கு அதிகாரிகள் தொடர்ந்து கூறி வரும் காரணம் 'பாதுகாப்புப் பிரச்சினை' என்பது தான்.

**கடந்த சுமார் 15 வருடகாலமாக யாழ்ப்பாணத்துக்கு சட்ட விரோதமான வழிகள் ஊடாகவே தங்கம் கிடைத்து வருகிறது**

***

**யாழ்ப்பாணத்துக்கு சட்டபூர்வமாக தங்கத்தை விநியோகிக்கும் பொறுப்பில் இருந்து அரசு விலகியதன் மூலம் சட்டவிரோத தங்கக் கடத்தல்களை ஊக்குவித்திருக்கிறது அரசு.**

***

**22 கரட் நகைகள் என்று கூறி 16, 18 கரட் நகைகளே விற்பனை செய்யப்படுகின்றன. யாழ். நகரில் உள்ள பல நகை வர்த்தகர்கள் இதனை ஒப்புக் கொண்டனர்.**

பெருமளவில் தங்கத்தை எடுத்து வருவது ஆபத்தானது. அது அபகரிக்கப்பட - கொள்ளையிடப்பட - வாய்ப்பு உள்ளது என்கின்றனர் அதிகாரிகள்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் அத்தகைய நிலைமை இருக்கவில்லை. கடந்த ஐந்து ஆண்டுகளாக குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது கடந்த ஒரு தசாப்தத்துக்கும் கூடிய காலப்பகுதியில் குடாநாட்டில் வங்கிக் கொள்ளைச் சம்பவங்கள் எதுவும் நடந்ததே இல்லை. எனினும் இன்னமும் சட்டபூர்வமான தங்க விநியோகம் அங்கு ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தப் பின்னணியில் தான் சட்ட விரோதமான - கறுப்புச் சந்தை தங்க விநியோகம் - சூடுபிடிக்கத் தொடங்கியது.

வெளிநாடுகளில் இருந்தும், நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் பிஸ்கட்டுகளாகவும், நகைகளாகவும் தங்கம் வந்து சேர்கின்றது. கப்பல்களிலும், விமானங்களிலும் பயணம் செய்வோர் திரும்பி வரும் போது நகைகளை அடுக்கிக் கொண்டு வருகிறார்கள். அல்லது பிஸ்கட்டுகளை ஒளித்து மறைத்து எடுத்துக் கொண்டு வந்து சேர்கின்றனர். பயணச் செலவைவிட பலமடங்கு லாபம் இதனால் கிடைக்கிறது.



யாழ்ப்பாணத்துக்கு சட்டபூர்வமாக தங்கத்தை விநியோகிக்கும் பொறுப்பில் இருந்து விலகியதன் மூலம் இத்தகைய - சட்டவிரோத - தங்கக் கடத்தல்களை ஊக்குவித்திருக்கிறது அரசு.

ஆனால் சட்டபூர்வமான வழிகளில் பெறும் தங்கத்தை விட கறுப்புச் சந்தையில் வாங்குவதே லாபம் என்பதால் நகை வியாபாரிகளும் இந்தக் குறுக்கு வழியையே நாடுகின்றனர்.

புதிதாகத் தங்கத்தை வாங்கும் நிலைமை இப்படி இருக்கும் போது அதிகரித்து வரும் வாடிக்கையாளர்களை நகை வியாபாரிகள் எப்படிச் சமாளிக்கிறார்கள்?

அதிகரித்து வரும் வாடிக்கையாளர்களைச் சமாளிக்க பழைய பவுண் கொள்வனவு உதவுகிறது.

பழைய நகைகளே உருக்கப்பட்டு புதிய புதிய டிசைன்களில் வருகின்றன. சுழற்சி முறையில் இது நடக்கிறது.

புதிய டிசைன்கள் மீதான மக்களின் மோகம் பழைய நகைகளை வாங்குவோரை கோடீஸ்வரர்களாக்கி வருகிறது.

"சுமார் ஒருவருடத்துக்குள் தங்களுடைய நகைகளை விற்றுப் புதிய டிசைன்களை மாற்றிக் கொள்ளாத பெண்களே கிராமப் புறங்களில் இல்லை" என்கிறார் ஒரு நகை வியாபாரி.

"புதிய புதிய டிசைன்களில் மயங்கும் பெண்கள் நகரப் புறங்களை விட கிராமங்களிலேயே அதிகம். தற்போதைய யுத்த நெருக்கடிகள் இடம் பெயர்வுகள் கிராமப்புற மக்களுக்கு ஏற்படுத்திவிட்ட பாதிப்பு நகை வியாபாரத்தையும் பாதித்து விட்டது" என்று கவலை வெளியிட்டார் ஒரு நகை வர்த்தகர்.

ஆனாலும் பழைய நகைகளை விற்றுப் புதிய நகைகளாக்கிக் கொள்ளும் மோகம் அதிகரித்த அளவுக்கு தரம் குறைந்த நகைகளின் விற்பனையும் அதிகரித்துள்ளது.

'தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ'' என்ற பிரபல பாடல் வரியை யாழ். நகைத் தொழிலாளர்கள் பொய்ப்பித்து விட்டார்கள். அந்தளவுக்கு தங்கத்தின் தரம் யாழ்ப்பாணத்தில் வீழ்ச்சி கண்டிருக்கிறது.

தூய்மையான தங்கத்துடன் கலப்பு உலோகங்கள் சேர்க்கப்பட்டு மிகவும் தரம் குறைந்த காட்டில் நகைகள் உருவாக்கப்படுகின்றன.

புழுப்பிடித்த அரிசி, பழுதடைந்த பால்மா என்று தரங்குறைந்த பொருள்கள் விற்கப்படுவது பற்றிய செய்திகளால் சாதாரண மக்கள் ஏய்க்கப்படுகிறார்கள். ஆனால் தாங்கள் சுத்தத் தங்கம் என்ற பெயரில் கலப்பு உலோகத்தையே நகைகளாக அணிந்துள்ளோம் என்பதை எண்ணிப்பார்ப்பதில்லை. தங்கத்தின் மீதான அவர்களின் மதிப்பு அப்படி எண்ணிப்பார்க்க விடுவதே இல்லை.

தரம் குறைந்த உணவுப் பொருள்களை விற்பதைத் தடுக்க திடீர் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. ஆனால் தங்கத்தில் கலப்படத்தைத் தடுக்க எந்த நடவடிக்கையும் இல்லை.

22 கரட் நகைகள் என்று கூறி 16, 18 கரட் நகைகளே விற்பனை செய்யப்படுகின்றன. யாழ். நகரில் உள்ள பல நகை வர்த்தகர்கள் இதனை ஒப்புக் கொண்டனர். ஆனால் அவர்கள் அனைவருமே 'தாங்கள் அவ்வாறு செய்வதில்லை' எனக் கூறிக்கொள்ளத் தவறவில்லை.

தரமான நகை என எண்ணி வாங்கியவற்றை பின்னர் விற்கும் போதே அதன் உண்மையான தரம் தெரிய வருகிறது. விற்போருக்கு ஏமாற்றம், வாங்குவோருக்கு கொண்டாட்டம்.

22 கரட் தங்கம் என எண்ணி வாங்கிய நகைகள் 16 கரட் கூட இல்லாது இருப்பது கண்டு வருந்தியவர்கள் பலர்.

இந்த மோசடியான வியாபாரம் அதிகரித்து வருவது குறித்து தங்க நகைப் பிரியர்கள் விசனமடைந்துள்ளனர்.

தங்கம் மீதான 'மோகம்' தீவிரமாக உள்ளவரை இதுபோன்ற மோசடிகளைத் தடுக்க முடியாது என்ற கருத்தும் உள்ளது.

உள்ளூர் தங்க நகைகள் தரம் குன்றிப் போவதால் கொழும்பு மற்றும் வெளிநாடுகளில் இருந்து வரும் தங்க நகைகளுக்கு கிராக்கி அதிகரிக்கிறது.

அதேவேளை உள்ளூரில் பாரம்பரியமாக தரமான தங்க நகைகளை விற்பனை செய்துவரும் நேர்மையான நகை உற்பத்தியாளர்களின் வர்த்தகமும் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது.

—யாழ்ப்பாணத்திலிருந்து
ஆதர்ஷா.ரதாஸ்

# முஸ்லிம் காங்கிரஸில் இன்று எல்லாம் நீறு பூத்த நெருப்பு!

முஸ்லிம் காங்கிரஸில் இப்போது இணைத் தலைமைத்துவ நிலைக்கு முடிவு காணப்பட்டுவிட்டது.

மு. கா வின் தனித் தலைவராக அமைச்சர் ரஊப் ஹக்கீமும், தேசிய ஐக்கிய முன்னணியின் (நுஆ) தலைவராக அமைச்சர் பேரியல் அஷ்ரப்பும் இயங்குகின்றனர்.



ரஊப் ஹக்கீம்

அதே நேரம் அமைச்சர் ரஊப் ஹக்கீமுக்கு தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ) யின் செயலாளர் பதவியும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த 5ஆம் திகதி 'தாருஸ்ஸலாம்' (சாந்தி இல்லம்) என்ற பெயரிலான மு.கா தலைமையகத்தில் இடம் பெற்ற மு.கா அதியுயர் பீடக் கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டது.

காலஞ்சென்ற அமைச்சர் அஷ்ரப்பின் நண்பரும், கட்சியின் அனுதாபியுமான ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவின் தலைமையில் இடம் பெற்ற கூட்டத்தில் தலைமைத்துவப் போட்டியில் இருந்தவர்கள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தனர். இது பக்க சார்பற்ற மு.கா ஆதரவாளர்கள் அனுதாபிகளுக்கு நிச்சயம் மகிழ்ச்சி அளித்திருக்கும்.

எதிரும் புதிருமான இரு தலைவர்களும் நேரில் பேசி ஓர் இணக்கத்துக்கு வந்துள்ளனர். அது



நிந்தவூரில் பேரியலுக்கு வரவேற்பு. அருகில் (தொப்பியுடன்) யு.எல்.எம். முகைதீன் எம்.பி. படங்கள்: ஏ.எல்.எம்.சலீம்

பற்றி இருவருமே திருப்தியும் அடைந்துள்ளனர். எனினும் இப்போது எட்டப்பட்டுள்ள முடிவு அமைச்சர் ஹக்கீமின் கையை ஓங்க வைத்துவிட்டதாக ஒரு தரப்பினர் கருதுகின்றனர். அதனால் அங்கே புகைச்சல் ஆரம்பமாகி விட்டது.

பேரியலுக்கு தேசிய ஐக்கிய முன்னணியில் மட்டும் தலைவர் பதவி கிடைத்திருக்கிறது. ஆனால் அமைச்சர் ஹக்கீமுக்கோ மு.கா தலைவர் பதவியுடன் தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளர் பதவியும் கிடைத்திருப்பதே இந்தப் புகைச்சலுக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

இந்த தலைமைத்துவ போட்டியில் பக்கம் சாராமல் நடு நிலையில் செயற்பட்டவர்கள் இப்படிக் கருதவில்லை.

"ஒரு கட்சிக்குள் தலைமைத்துவப் பதவிக்காக இரண்டு பேர் சண்டை பிடிப்பதைத் தடுக்கும் முகமாக, இருக்கின்ற இரண்டு கட்சிகளுக்கும் இருவரையும் தனித்தனியே தலைவர்களாக்கியது வரவேற்கத்தக்கது.

இம்மாதிரியான சூழ்நிலை ஏற்படும் போது அதற்கு செய்ய வேண்டிய ஏற்பாட்டையும் கூட மறைந்த தலைவர் அஷ்ரப் செய்து வைத்துவிட்டே போயிருக்கிறார்.

இரண்டு கட்சிகள் இருக்கின்றன. இரண்டு கட்சிகளுக்குமே 'பவர்' (அதிகாரம், சக்தி) இருக்கிறது. முஸ்லிம் காங்கிரஸுக்கு முஸ்லிம் மக்கள் மத்தியிலும், தேசிய ஐக்கிய முன்னணிக்கு நாடாளுமன்றத்திலும் செல்வாக்கு இருக்கிறது.

ஒரு கட்சியை முஸ்லிம் ஐக்கியத்துக்கும், மற்றக் கட்சியை தேசிய ஐக்கியத்துக்கும் என்று அஷ்ரப் உருவாக்கியதன் நன்மை இப்போதுதான் வெளிச்சமாகியிருக்கிறது" என்று நடு நிலையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதே நேரம் பெப்ரவரி 11 இல் நடைபெறவிருந்த மு. கா பேராளர்கள் மகாநாடு காலவரையின்றி பின் போடப்பட்டுள்ளது. இதற்கான தீர்மானமும் பேரியல்-ஹக்கீம் சந்திப்பின் போது மேற்கொள்ளப்பட்டது.

இணைத் தலைமைத்துவம் நிலவிய போது தனித் தலைமைத்துவத்தை ஏற்படுத்த முனைபவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர இணைத் தலைமைத்துவத்தையும் பேரியலையும் ஆதரிப்பவர்கள் இரகசியமாக கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டனர். பெப்ரவரி 11 ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியிருந்த மாநாட்டை பின் போடச் செய்வதே இவர்களின் நோக்கமாக இருந்தது. இதற்காக அரசியல் பீடத்தை சேர்ந்தவர்களில் 40 பேரின் கையெழுத்துப் பெறப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்நிலையில் தான் கடந்த 5 ஆம் திகதி ஹக்கீம்-பேரியல் உடன்பாடு நிகழ்ந்தது. இச்சந்திப்பில் தலைமைத் துவப் போட்டியால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா விளக்கிக் கூறினார் என்றும் பெண் தலைமைத்துவத்தின் நன்மை தீமைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஹக்கீம்-பேரியல் இருவருக்குமிடையே இணக்கம் ஏற்பட்ட பின்னும் ஆதரவாளர்கள் மத்தியில் நல்லுறவும் மன அமைதியும் ஏற்படவில்லை. ஆதரவாளர்கள் இன்னும் இரண்டு அணிகளாகவே செயற்படுகின்றனர்.

ஆதரவாளர்கள் மத்தியில் கட்சித் தலைவர்கள் தொடர்பான சுமுக, வழமை நிலை படிப்படியாகத் தோன்ற இடமளிக்க வேண்டும். தலைமைத்துவப் போட்டியால் ஏற்பட்ட பதற்றம் தனிந்த பின்பு பேராளர் மாநாடு கூட்டப்படுவதே நல்லது என இரு தலைவர்களும் கருதியதாலேயே வருடாந்த பேராளர் மாநாடு கால வரையறை இன்றிப் பின்போடப்பட்டது என்று கட்சி முக்கியஸ்தர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

முஸ்லிம் காங்கிரஸில் பேரியல் அஷ்ரப் இப்போது எந்தப் பதவியையும் வகிக்கவில்லை. அவருக்கு எத்தகைய பதவியை வழங்குவது என்பது குறித்து ஹக்கீமும்-பேரியலும் இணைந்து பேசித் தீர்மானம் எடுக்க விடப்பட்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

போஷகர் தரத்திலான ஓர் உயர் பதவி



மாமியாருக்கு மருமகள் பேரியல் மாலை சூட்டி ஆசிர்வாதம் பெறுகிறார்.

உருவாக்கப்பட்டு அது பேரியலுக்கு வழங்கப்படலாம். அதற்கு மு.காவின் யாப்பில் திருத்தம் செய்ய வேண்டும் அது பற்றி இப்போது ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்று அந்த முக்கியஸ்தர் சொன்னார்.

பேரியலுக்கு உயர் பதவி வழங்குவதற்கு மட்டுமன்றி முஸ்லிம் காங்கிரஸின் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கும் காங்கிரஸ் யாப்பைத் திருத்த வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது. இந்தக் கோரிக்கையை எழுப்புபவர்களில் ஒரு தரப்பினர் மு.கா சார்பான அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள். மற்றொரு தரப்பினர் சர்வாதிகாரப் போக்கிற்கு எதிரானவர்கள்.

மு.காவின் அரசியல் பீடத்தில் 50 பேர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களில் 23 பேர் அதியுயர் பீடத்திலும் அங்கம் வகிக்கின்றனர். வேறு எவரும் இல்லை. கட்சியின் அதியுயர் பீடத்தில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்கள், பிரதியமைச்சர்களாக இருப்பவர்களுக்கும் இடமளிக்கப்பட வேண்டும் என்பது எம்.பிமாரின் பொதுவான கருத்தாக இருக்கிறது.

அதே நேரம் இன்னுமொரு சாரார் கட்சியின் யாப்பானது கட்சித் தலைவரை சர்வாதிகாரப் போக்குக்கு இட்டுச் செல்ல இடமளிப்பதாகவும் , தலைவரின் தனித்தீர்மானம் எடுக்கும் அதிகாரம் குறைக்கப்பட வேண்டும் என்றும், யாப்பே சர்வாதிகார யாப்பு என்றும் தெரிவிக்கின்றனர்.

மக்கள் குரலுக்கு அதிக இடமளிக்கும் வகையில் யாப்பு திருத்தப்பட வேண்டும் என்றும் இவர்கள் முனைந்து செயற்படுகின்றனர்.

மொத்தத்தில் முஸ்லிம் காங்கிரஸில் எல்லாம் நீறுபூத்த நெருப்பாகவே இருக்கிறது. வெளியே நீறு தான் தெரிகிறது. கிளறினால் உள்ளே நெருப்பு கனன்று கொண்டிருக்கிறது.

- பாத்திமா ஷாதிரா

# கண்டி அமைச்சர்கள் இருவர் குடுமிப்பிடிச் சண்டை!

கண்டியைச் சேர்ந்த முக்கிய அமைச்சர்கள் இருவருக்கிடையே கடந்த பொதுத் தேர்தலின்போது முளைத்த குரோதம் இப்போது குடுமிப்பிடிச் சண்டையாக உருவெடுத்துவிட்டது.

மின்சக்தி அமைச்சரும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான அனுருத்த ரத்வத்தையும் விவசாய அமைச்சரும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளருமான டி.எம் ஜெயரத்னவுமே அந்த இரு அமைச்சர்களுமாவர்.

கண்டி மாவட்டத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பொ.ஐ.முன்னணிக்கு ஏற்பட்ட பின்னடைவுக்குக் காரணம் அதன் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜயரத்னவின் செயற்பாடுகளாக இருப்பதால் இது குறித்து உடனடியாக அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க விசாரணை அவசியம் எனக் கண்டியில் கூடிய மாவட்ட ஸ்ரீ.ல.சு.கட்சி அமைப்பு தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கண்டி செய்தியாளர்களுக்கு விசேட விளக்கம் அளிக்கப்பட்டது.

கண்டி மாவட்ட ஸ்ரீ.ல.சு. கட்சியின் முன்னணித் தலைவராக இருந்தவர் டி.எம். ஜயரத்ன. கடந்த மாதம் கூடிய இந்த அமைப்பின் பொதுக்கூட்டத்தின் போது புதிய தலைவராக பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும் நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்தை ஏகமனதாக நியமிக்கப்பட்டார். அதன் செயலாளராக மகிந்த அபயகோனும் பொருளாளராக ரஊப் ஹாஜியாரும் தெரிவாகினர்.

கடந்த 10.10.2000 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் வன்செயல்களும் தேர்தல் மோசடிகளும் இடம் பெற்றதாக தேசிய ஐக்கிய முன்னணியில் போட்டியிட்ட கண்டி மாவட்ட முதன்மை வேட்பாளர் ரஊப் ஹக்கீம் (தற்பொழுது அமைச்சர்) ஜனாதிபதிக்கு 10.10.2000 இல் பக்ஸ் மூலம் அவசர செய்தி அனுப்பியிருந்தார்.

இந்த வன்செயல் விவகாரத்தைப் பூதாகரமாக வெளியில் காட்டியதால் கண்டி மாவட்டத்தில் பொ.ஐ.முன்னணிக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டது. அமைச்சர் ஜயரத்னவின் இத்தகைய கட்சிவிரோத செயல்களினாலே இந்நிலைமை உருவாகியது.



இதனால் பொலிஸாரின் கெடுபிடிகள் மேலும் அதிகரித்தன என்று ஸ்ரீ.ல.சு கட்சியின் கண்டி மாவட்ட அமைப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஜெனரல் ரத்வத்தையின் தலைமையில் கூடிய கட்சியின் கூட்டத்தில் கட்சிக்கு முரணாக அமைச்சர் ஜயரத்ன வெளியிட்ட கருத்துக்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதால் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தீர்மானம் அடங்கிய கடிதத்தை கட்சியின் தலைவரான ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவுக்கு அமைச்சர் ரத்வத்தையும் மாவட்ட செயலாளரான மகிந்த அபயகோனும் கைச்சாத்திட்டு அனுப்பி வைத்துள்ளனர்.

கடந்த 02.02.2001 ஆம் திகதி ஹோட்டல் மகாவலி பீச்சில் நடைபெற்ற இக் கூட்டத்தின் போது கண்டி மாவட்ட ஸ்ரீ.ல.சு. கட்சி அமைப்பாளர்களான அமைச்சர்கள் டி.எம்.ஜயரத்ன லக்ஷ்மன் கிரியெல்ல, பிரதி அமைச்சர் எதிரிவீர வீரவர்தன ஆகியோர் சமுகமளித்திருக்கவில்லை. கண்டி மாவட்ட எம்.பியும் பிரதி அமைச்சருமான மஹிந்தானந்த அலுத்கமகே உட்பட ஏனைய அமைப்பாளர்கள் கூட்டத்தின்போது பிரசன்னமாகி இருந்தனர்.

—கண்டியூர்க் காவலன்.

சுடர் ஒளி

11 பெப்ரவரி, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834

## முஸ்லிம் காங்கிரஸ் தலைமை

அரசியல் கட்சியில் பிரச்சினைகள் எழுவது சகஜம்.

அந்த வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் தனித் தலைமையா, இணைத்தலைமையா என்ற வாதப் பிரதிவாதங்களுடன் பிரச்சினை எழுந்ததில் வியப்பில்லை.

கட்சியை ஆரம்பித்து அதைப் பெரும் செல்வாக்கு உள்ளதாக வளர்த்து எடுத்து கேள்விக்கு அப்பாற்பட்ட தனிப்பெரும் தலைவராக இருந்த அமைச்சர் அஷ்ரப் அகால மரணமடைந்ததும் ரஊப் ஹக்கீம், அஷ்ரப்பின் பாரியார் பேரியல் ஆகிய இருவரும் இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.

யார் அடுத்த தலைவர் என்ற கேள்வி எழுந்த கட்டத்தில் ஒருவரைத் தனித் தலைவராக நியமிப்பதை விட இருவரை இணைத்தலைவர்களாக நியமிப்பதே கட்சிக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் நல்லது என்ற எண்ணத்தில் அப்படிச் செய்யப்பட்டது.

அது சரியாக வேலை செய்யவில்லை. ரஊப் ஹக்கீம் இணைத்தலைமைக்குப் பதிலாகச் தனித் தலைமையே இருக்க வேண்டும், அதுதான் கட்சியின் செயற்பாட்டுக்கு உகந்தது என்று வற்புறுத்தினார்.

பேரியல் அஷ்ரப் இணைத் தலைமையை வரவேற்றார்.

கட்சியின் உறுப்பினர்களும் இரண்டாகப் பிரிந்து ஒருசாரார் ஹக்கீமையும் மறு சாரார் பேரியல் அஷ்ரப்பையும் ஆதரித்தார்கள்.

இரு சாராருக்குமிடையே போட்டி, பொறாமை, பூசல் எல்லாம் எழுந்தன.

கணவரின் மறைவு குறித்து பேரியல் வெளியில் வராமல் வீட்டில் இருந்து "இத்தா" அனுஷ்டித்து வந்த காலத்தில் இருதரப்பினருக்குமிடையே போட்டி வலுத்தது.

தலைவர் யார்? ரஊப் ஹக்கீமா பேரியலா? எங்கும் இதே கேள்வியாகி விட்டது.

இந்தப் பிரச்சினையில் முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட்டுப் போகும் நிலைமை வந்தது.

அப்போது பேரியலின் இத்தா முடிந்து அவர் வெளியில் வந்து விட்டார்.

இரு தலைவர்களும் அஷ்ரப்பின் நெருங்கிய நண்பரான பாயிஸ் முஸ்தபாவின் இல்லத்தில் சந்தித்துப் பேசினார்கள். முடிவில் ஓர் இணக்கத்துக்கு வந்தார்கள்.

முஸ்லிம் காங்கிரஸுக்கு தனித்தலைவராக ரஊப் ஹக்கீம் நியமனம்.

முஸ்லிம் காங்கிரஸின் சகோதரக் கட்சியான தேசிய ஐக்கிய முன்னணியின் (நு ஆ) தலைவியாக பேரியல் அஷ்ரப் நியமனம்.

இதற்கு இரு தலைவர்களும் இணங்கினார்கள்.

ரஊப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பதவியோடு தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளராகவும் பணியாற்றுவார்.

இதற்கும் பேரியல் அஷ்ரப் இணக்கம் தெரிவித்தார்.

ரஊப் ஹக்கீமுக்கு இரண்டு கட்சிகளிலும் இரண்டு பதவிகள். பேரியலுக்கு ஒரு கட்சியில் மட்டும் ஒரு பதவி. இந்த மட்டில் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப் பிரச்சினைக்குச் சுமுக தீர்வு காணப்பட்டுவிட்டது, முஸ்லிம் காங்கிரஸுக்கு நேர இருந்த ஆபத்து நீங்கிவிட்டது, இனிப்பிரச்சினை இல்லை என்றவாறாகக் கூறப்பட்டது.

ஆனால் பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ள கருத்துகளின் படி முஸ்லிம் காங்கிரஸின் எதிர்காலம் பற்றிச் சந்தேகங்கள் எழுகின்றன.

தனித் தலைமைத்துவத்துக்குத் தாம் இணக்கம் தெரிவித்ததைத் தனது ஆதரவாளர்கள் விரும்பமாட்டார்கள் என்பது தனக்குத் தெரியும் என்கிறார். அப்படியிருந்தும் இன்றைய நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபடாமல் இருக்க வேண்டும். நீதிமன்றம் செல்லும் நிலை வரக்கூடாது' என்ற காரணங்களுக்காவே தாம் விட்டுக்கொடுத்ததாக அவர் கூறினார்.

இன்றைய தனித் தலைமை ஏற்பாடு நிரந்தரமானது அல்ல. தற்காலிகமானது என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் அர்த்தம் என்ன? வருங்காலத்தில் நிலைமை மாறும் என்பது தானே!

மூன்றாம் பக்கக் கட்டுரையில் கூறப்பட்டிருப்பது போல முஸ்லிம் காங்கிரஸ் விடயம் நீறுபூத்த நெருப்பாகவே இருக்கிறது.

எது எப்படியிருந்த போதிலும் பதவிப்பித்துக் கொண்டு பிடிவாதமாக இருக்காமல் தமது கணவர் ஆரம்பித்துக் கட்டிக் காத்து வளர்த்தெடுத்த கட்சியின் நலனுக்காக விட்டுக்கொடுத்து, இப்போது ஏற்பட இருந்த ஒரு பேராபத்தைத் தவிர்த்தாரே பேரியல், அதனால் அவர் உயர்ந்து நிற்கிறார். பாராட்டுக்கு உரியவராகிறார்.

# பிரிட்டிஷ் தடை வருகிறது! பேச்சு விடை பெறுகிறது!

## புலிகளின் அறிவிப்பால் சொல்ஹெய்ம் நம்பிக்கை சிதறித் தடுமாற்றம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கம் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் முத்திரை குத்தித்தடை செய்வது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது.

எதிர்வரும் 18ஆம் அல்லது 19ஆம் திகதி தடை உத்தரவு வெளியிடப்படலாம் என்று நம்பப்படுகிறது.

அதற்கிடையில் தமது இயக்கத்தைத் தடை செய்தால் இலங்கை அரசுடன் சமாதானப் பேச்சுக்கு விடை கொடுக்க வேண்டியதுதான். பேச்சு நடக்கவே நடக்காது என்று லண்டனில் உள்ள புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் நோர்வே நாட்டு சமாதானத்தூதுவர் (அனுசரணையாளர்) எரிக் சொல்ஹெய்முக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

பிரிட்டனுடன் பேசித் தடையைத் தடுத்து நிறுத்தப்பாருங்கள் அல்லது சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறச் செய்யும் கைங்கரியத்தை ஒரேயடியாக மறந்துவிடுங்கள் என்று சொல்ஹெய்மிடம் பாலசிங்கம் சொல்லிவிட்டார்.

சொல்ஹெய்முக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சிக்கல் இருந்தாலும் முயற்சி செய்து பேச்சுவார்த்தை மேசைக்கு இரு தரப்பையும் கொண்டு வந்து விடலாம் என்று அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். அந்த நம்பிக்கை இப்போது தகர்ந்துவிட்டது. தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்.

புலிகளைத் தடைசெய்வதும் தடை செய்யாமல் விடுவதும் பிரிட்டனின் உள்நாட்டு விஷயம். அதில் நோர்வே அரசு எப்படித் தலையிட முடியும்?

அதற்குப் புலிகளிடம் பதில் இருக்கிறது.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலே பேச்சுவார்த்தை நடைபெறவேண்டும். யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். நிரந்திர சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று தானே நோர்வே அரசு விரும்புகிறது. பிரித்தானிய அரசும் விரும்புகிறது, உலக நாடுகள் அனைத்தும் விரும்புகின்றன. அப்படியானால் எல்லாவற்றிற்கும் முதற்படியான பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு வசதியாகப் புலிகள் மீது இப்போது தடைவிதிக்காதீர்கள் என்று நோர்வே ஏன் பிரிட்டனைக் கேட்கக் கூடாது?

இப்படி அன்டன் பாலசிங்கம் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

நாங்கள் தமிழ் மக்களுக்காக விடுதலைப்போர் நடத்துகிறோம். எங்களை எப்படி பயங்கரவாதிகள் என்று கூறமுடியும்.

போர் நடக்கும்போது போரில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினரின் நடவடிக்கைகளினாலும் பயங்கரவாதச் சம்பவம் என்று வகைபடுத்தக் கூடிய சம்பவங்கள் இடம் பெறுவது வழக்கம். அவற்றில் அரசு தரப்பில் நடைபெறும் சம்பவங்கள் பயங்கரவாதச் சம்பவங்கள் என்று கொள்ளப்படுவதில்லை. அரசை எதிர்த்துப் போராடும் தரப்புச் சம்பவங்கள் தான் பயங்கரவாதச் சம்பவங்கள் என்று தூக்கிப் பிடித்து வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகின்றன.

அந்தத் தரப்பினர் பயங்கரவாதிகள் என்று வர்ணிக்கப்படுகின்றனர் அவர்களின் நடவடிக்கைகளைத் தடை செய்வதற்கும் அவர்களின் இயக்கங்களை முடக்கி வைக்கவும் பயங்கரவாதச் சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன.

அனேகமாக எல்லா நாடுகளிலும் அந்தந்த நாடுகள் செய்யும் அநீதிகளை எதிர்த்துப் போராடும் இயக்கங்கள் இருக்கின்றன.

ஆகவே எல்லா அரசுகளும் இந்த விடயத்தில் நியாயம் நீதி என்பனவற்றைப் பாராமல் ஒன்றுபட்டுச் செயலாற்ற விழைகின்றன. பயங்கரவாதச் சட்டத்தை இயற்றுகின்றன.

இது விடுதலை இயக்கங்களுக்கு எதிரான சர்வதேசச் சதி என்று பாலசிங்கம் வர்ணித்தார்.

பிரிட்டிஷ் அரச தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஒரு சலுகை காட்டலாம் என்று சொல்லப்படுகிறது. அதாவது இப்போது விடுதலைப்புலிகள் இயக்கத்தை பிரிட்டனில் தடை செய்துவிட்டு பின்னர் அங்குள்ள புலிகள் நல்லபிள்ளைகளாக நடந்தால் தடையை நீக்கி விடலாம் என்று கூறப்படுகிறது.

இது வேடிக்கை. செருப்பால் அடித்துவிட்டு குடை பிடிப்பது போன்ற கதை என்று அதைத் தட்டிக் கழித்தார் அன்டன் பாலசிங்கம். பிரிட்டன் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்தால் சமாதானப் பேச்சுக்குப் புலிகள் போகமாட்டார்கள் என்று அவர் அடித்துக் கூறினார்.



அன்டன் பாலசிங்கம்

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடக்கப் போகிறது என்றும் அரசு தரப்பில் அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸும், லயனல் பெர்னான்டோவும் புலிகள் தரப்பில் அன்டன் பாலசிங்கமும் உருத்திர குமாரும் கலந்து கொள்கிறார்கள் என்றும் இலங்கைப் பத்திரிகைகள் சிலவற்றில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

அந்தச் செய்திகளை அன்டன் பாலசிங்கம் நிராகரித்தார். என்ன பேசுவது எங்கே பேசுவது, யார் யார் பேசுவது என்றெல்லாம் தலைவர் பிரபாகரனுடன் கலந்து ஆலோசனை

### காண்டீபம்

நடத்த வேண்டும். அது இதுவரை நடைபெறவில்லை. பேச்சே நடக்க முடியாத சூழ்நிலை தோன்றியுள்ள போது இந்த ஆலோசனை அவசியமற்றது என்று அன்டன் பாலசிங்கம் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தைக்கான திகதியோடு சொல்ஹெய்ம் இலங்கை வர இருக்கிறார் என்று அமைச்சர் ஜெயரத்ன தகவல் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் சொல்ஹெய்மோ எதோடு எப்படி கொழும்புக்குச் செல்வது, எதற்குச் செல்வது என்று ஒன்றுமே புரியாமல் இப்போது விழித்துக் கொண்டு இருக்கிறார் என்றார் அன்டன் பாலசிங்கம்.

கடந்த முறை சொல்ஹெய்ம் லண்டனில் அன்டன் பாலசிங்கத்தைச் சந்தித்து விட்டுக் கொழும்புக்குப் புரிந்துணர்வு உடன்படிக்கையுடன் வந்தார். முக்கியமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்துப் பேசினார்.

அவர் இலங்கையைவிட்டுச் சென்ற பின்னர் ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில் பேச்சுவார்த்தை நடத்தும் விடயத்தில் முன்னேற்றம் கண்டிருப்பதாக மட்டும் குறிப்பிட்டார்.

எது எப்படி இருந்த போதிலும் யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை தொடங்கிய பிறகு ஆலோசித்துத்தான் செய்யப்படும் என்றார்.

ஆனால் ஜனாதிபதி தமது சுதந்திரதின உரையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் நல்ல அறிகுறியாக ஒரு ஒளி கீற்றுத் தெரிகிறது என்று குறிப்பிட்டார்.

புலிகள் அரசபடையினரால் அடக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அரசின் அழைப்பை ஏற்றுப் பேச்சுவார்த்தைக்கு வரத்தயாராகி விட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

இது பலருக்கும் பேச்சுவார்த்தை விரைவில் நடக்கும், யுத்தம் நின்று விடும், நிரந்தர சமாதானம் ஏற்படும், பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது.

ஜனாதிபதியின் பேச்சுக்கு அவ்வளவு மதிப்புக் கொடுக்கக் கூடாது என்பது அன்டன் பாலசிங்கத்தின் கருத்து.

ஜனாதிபதி முக்கியமாக சர்வதேச சமூகத்துக்கு நல்ல செய்திகளை இனிப்பாக வழங்கி கொள்ளையாகக் கடன் வாங்குவதில் கவனம் செலுத்திவருகிறார்.

பேச்சுவார்த்தை நடக்க வேண்டும், அதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற ஆர்வமும் அக்கறையும் ஜனாதிபதிக்கு அறவே இல்லை.

அமைச்சரவையில் உள்ள தனது சில சகாக்களையும் மகா சங்கத்தினரையும், சிங்களப்பேரினவாத சக்திகளையும் திருப்திப்படுத்த வேண்டிய நிலையில் அவர் இருக்கிறார். அவர்களைத் திருப்திப்படுத்தினால்தான் ஜனாதிபதிப் பதவி முடிந்த பின்னர் அவர் பிரதம மந்திரியாக வரலாம்.

எனவே அவர் யுத்த முனைப்பிலேயே இருக்கிறார். புலிகள் யுத்த நிறுத்தம் செய்து வரும்வேளையிலும் அவர் தனது படைகளை ஏவிவிட்டுக்கடல் தாக்குதல்களையும் வான்தாக்குதல்களையும் நடத்திவருகிறார் என்றார் பாலசிங்கம்.

பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு வேண்டிய நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு நோர்வே அரசின் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைத் தூக்கிக்கொண்டு லண்டனுக்கும் கொழும்புக்குமாக ஓடித்திரிந்தாரே! அது என்னவாயிற்று தெரியுமா?

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முக்கியமாக மூன்று அம்சங்கள்.

**ஒன்று** - புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கான பொருளாதாரத்தடையை அரசாங்கம் நீக்க வேண்டும்.

**இரண்டு** - தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தாக்குதல்களை நடத்தக்கூடாது.

**மூன்று** - இரு தரப்பினரும் இவற்றைச் சரிவர கடைப்பிடிக்கிறார்களா என்பதைக் கண்காணிக்கச் சர்வதேசக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இவற்றிற்குச் சம்மதம் தெரிவித்துவிட்டனர்.

அரசாங்கத் தரப்பில் தயக்கம் காட்டப்படுகிறது. பொருளாதாரத் தடை இப்போது இல்லை என்பது அரசின் வாதம்.

அது தவிர சர்வதேசக் கண்காணிப்புக் குழுவை நியமிப்பதிலும் சிக்கல். எந்தெந்த நாடுகள் குழுவில் இடம்பெற வேண்டும் என்பதில் இன்னும் இணக்கம் காணப்படவில்லை.

இந்த விடயத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் திருவிளையாடல் செய்து வருகிறார்.

பிரிட்டிஷ் அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்பவரும் அவர்தான்.

வேறு என்ன இருந்தாலும் இல்லாவிட்டாலும் பிரிட்டன் புலிகள் இயக்கத்தைத் தடை செய்தால் அரசுடன் பேச்சுவார்த்தைக்குப் பிரியாவிடைதான் என்றார் அன்டன் பாலசிங்கம்.

பேச்சுவார்த்தை தடைப்பட்டால் விடுதலைப்போர் தீவிரமடையும். அதற்கான பொறுப்பை அரசே ஏற்க வேண்டும் என்றும் அன்டன் பாலசிங்கம் சொன்னார்.

## இரங்கநாதன் நினைவு விழா

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் காப்பாளர், சட்டவல்லுநர் அமரர் செ.இரங்கநாதன் கியூ.சி நினைவு விழா ஞாயிற்றுக் கிழமை (11-02-2001) மாலை நடைபெறுகிறது.

கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் சங்கத்தின் துணைத்தலைவர் இ.சிவகுருநாதன் தலைமையில் விழா நடைபெறுகிறது. நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முன்னாள் நீதியரசர்கள் எஸ்.சர்வானந்தா, கி.பாலகிட்ணர், சட்டவல்லுநர் கனக ஈஸ்வரன் மற்றும் இ.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். செ.இரங்கநாதன் நினைவு மலரை தமிழ்ச்சங்கத் தலைவர் சோ.தேவராசா வெளியிட்டு வைப்பார்.

# மட்டக்களப்பில் தமிழ் மண்ணை அபகரிக்கச் சூழ்ச்சித் திட்டமா?



மேடையில் உண்ணா விரதம் இருந்தோர்

புதிய பிரதேச செயலகப் பிரிவுகள் அமைப்பு என்ற பெயரில் தமிழ் மண்ணை அபகரிக்கும் சூழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது என்று அரசின் மீது குற்றம் சாட்டப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்ட வட முனையில் உள்ள வாகரை மக்கள் தமது பகுதியில் உள்ள புனானை கிழக்குத் தமிழ்க் கிராமசேவகர் பிரிவு தம்மிடமிருந்து பறிபோக இருக்கிறதே என்று கவலை தெரிவிக்கின்றனர். ஆட்சேபனைக் குரலும் எழுப்புகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பன்னிரண்டு பிரதேச செயலகப்பிரிவுகள் உள்ளன.

புதிதாகக் கல்குடாத் தொகுதியில் இரு பிரதேச செயலகங்களை அமைக்க வர்த்தமானியில் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது.

அவற்றில் ஒன்று கோரளைப்பற்று மத்தி, ஓட்டமாவடி முஸ்லிம் பிரதேசங்களைப் பிரித்து அமைக்கப்படவிருக்கும் ஒரு முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவு.

இப்பிரிவுடனேயே புனானை கிழக்கு கிராமசேவகர் பிரிவும் உள்ளடக்கப்படுகிறது. புனானை கிழக்கு கிராம சேவகர் பிரிவு இப்போது வாகரைப் பிரதேச சபைக்கு உட்பட்டதாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வாகரை பிரதேச சபைப் பகுதிக்குள் உள்ள புனானை கிழக்குக் கிராமசேவகர் பிரிவை அங்கிருந்து எடுத்து வேறு பிரதேச சபையுடன் சேர்ப்பதை வாகரை வாழ் தமிழ் மக்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

கல்குடா தொகுதியில் அமையவிருக்கும் இரு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் கோறளைப்பற்று தெற்கு, கோறளைப்பற்று மத்தி எனப் பெயரிடப்படவுள்ளது.

கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் முறக்கொட்டான்சேனை, சந்திவெளி, கோரகல்லிமடு, தேவாபுரம், கிரான் கிழக்கு, கிரான் மேற்கு, குறுபுறு மூலை, கோராவளி, திகிலிவட்டை, பேரிலாவளி, குடும்பி மலை, பெண்டுகள் சேனை ஆகிய கிராமசேவகர் பிரிவுகள் அடங்குகின்றன.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவு முஸ்லிம்களை பிரதிநிதித்துவப் படுத்தும் பிரதேச செயலாளர் பிரிவாக அமையவுள்ளது.

வாழைச்சேனை பிரதேச சபையின் கீழ் வரும் செம்மண்ஓடை, மாவடிச்சேனை, பிறைந்துறைச் சேனை தெற்கு, பிறைந்துறைச்சேனைவடக்கு, வாழைச்சேனை முஸ்லிம் பிரிவு–05, தெற்கு, வாழைச்சேனை முஸ்லிம் பிரிவு 04 ஆகிய பிரதேசங்களுடன் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புனானை கிழக்கு தமிழ் கிராமசேவகர் பிரிவும் இணைக்கப்படுகின்றது.

கடந்த வருடம் தேர்தலுக்கு முன்னரும் இந்த இணைப்பு விவகாரம் எழுந்தது . அப்போது வாகரை மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தி எதிர்ப்பு தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைப்பைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்தனர். அதனால் இணைப்பு முயற்சி அப்போது கைவிடப்பட்டது.

இப்போதும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.செல்வராசா நிலைமையை விளக்கியும் எதிர்ப்புத் தெரிவித்தும் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

–சத்துருக்கன்



கீழே கூடி இருந்தவர்கள்

## கிழக்குப் பல்கலையில் தொடரும் பொங்கு தமிழ் உணர்வலைகள்!

தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்படி அரசைக் கோரிப் பல்கலைக்கழக சமூகத்தால் நடத்தப்படும் எழுச்சிப் போராட்டங்களின் ஒரு அங்கமாக கிழக்குப் பல்கலைக்கழகம் பெப்ரவரி முதலாம் திகதி ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை நடத்தியது.

* சமூகமே பேரினவாத அரசின் மாய பிரசாரங்களுக்குத் தலைசாய்க்காதே!
* அங்கவீனமுற்ற ஒரு தலைமுறையும், பாதாள உலக பரம்பரையும் உருவாக வழிசெய்யும் நீயே பயங்கரவாதி.
* கடந்த ஆண்டின் தலை சிறந்த ஜோக்

''சமாதானத்திற்கான போர்''

– உபயம் சந்திரிக்கா அரச

* தமிழர்களின் அபிலாஷை சுயநிர்ணய உரிமையே

இவை போன்ற சுலோகங்கள் தாங்கிய பதாகைகள் அங்கு காணப்பட்டன.

பிற்பகல் 2.30 மணிக்கு மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் உரை நிகழ்த்தினர். இறுதியாக துணை வேந்தர் மா.செ.மூக்கையா உண்ணாவிரதத்தை குளிர்பானம் வழங்கி முடித்து வைத்தார்.

இவ்வாறான அகிம்சை வழிப் போராட்டங்களுக்குத் தனது பூரண ஆதரவை அவர் தெரிவித்தார்.

## பிச்சை அரிசியும் பிடிச் சீனியும் வெள்ள நிவாரணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மழைக்குமேல் மழை பெய்து வெள்ளம் ஏற்பட்டு பின்னர் வெயில் எறிக்கின்ற வேளையில்தான் வெள்ள நிவாரணம் வழங்கப்படுவது வழக்கமாகிவிட்டது.

இதில் இன்னொரு வேடிக்கை. வெள்ள நிவாரணம் எவ்வளவு என்று அளவினைச் சொன்னால் வாயில் விரலை வைப்பீர்கள்.

அரைக் கிலோ சீனி, இரண்டு கிலோ அரிசி, ஐந்துபேருக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு. அதற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு ஒரு கிலோ சீனியும் அரிசியும்தான்.

இந்தப் பிச்சை அரிசிக்கும் பிடிச் சீனிக்கும் நாய் அலைச்சல் போடவேண்டும் என்று பொதுமக்கள் அலுத்துச் சலித்துக்கொள்கிறார்கள்.

## பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படுகின்றன

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை இறுக்கமடையச் செய்யும் முயற்சிகளைப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா தொகுதியிலுள்ள கோறளைப் பற்று, வாகரை, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வதியும் குடும்பங்களின் விபரங்கள் படையினரால் திரட்டப்படவுள்ளன.

வாழைச்சேனை காகித ஆலைப் படை முகாம் பொறுப்பதிகாரி சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களை அழைத்து இது தொடர்பாகப் பணித்துள்ளார். இதற்கமைய சம்பந்தப்பட்ட கிராமங்களில் கிராமசேவையாளர்கள் இந்த விபரங்களைத் திரட்டி வருகின்றனர்.

படையதிகாரியின் இந்தப் புதிய நடவடிக்கையினால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். கிராம சேவையாளர்களுக்குப் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு நகரில் வதியும் குடும்பங்களின் விபரங்கள் கிராமசேவையாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வப்பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் அவை பதியப்பட்டுள்ளன.

அதே சமயம் புதிதாக ஒருவர் வீட்டில் தங்க வேண்டி ஏற்பட்டால் அவரது வதிவிடம் கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்டு பொலிஸ் நிலையத்தில் பதியப்பட வேண்டும். சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது ஒரு நடைமுறை தற்போது கல்குடா தொகுதியில் உள்ள கோறளைப்பற்று, வாகரை, ஓட்டமாவடி முதலான பிரதேச செயலாளர்பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதே நடைமுறை மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று, ஏறாவூர் மற்றும் பட்டிருப்பு, வவுணதீவுப் பிரதேசங்களுக்கும் விரிவுபடுத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு பிள்ளையாரடி அதிரடிப்படை முகாமில் அம் முகாம் சுற்றாடலில் உள்ள ஆண்கள் ஞாயிறு தோறும் கையொப்பமிடும் நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய ஒவ்வொரு வாரமும் ஆண்கள் கொப்பியுடன் சென்று பிள்ளையாரடி முகாமில் கையொப்பமிட்டு வருகின்றனர்.

இவ்வாறான நடைமுறைகள் ஏனைய முகாம்களிலும் அமுல்படுத்தப்படலாம் என்று நம்பப்படுகிறது.

இந்த நடவடிக்கைகளால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். மட்டக்களப்பு மாவட்டம் முற்று முழுதாகப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தால் ஏன் இந்த நடவடிக்கை என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

## செயலகக் கட்டடம் அமைக்கத் தடை

வாழைச்சேனை பிரதேச செயலகத்திற்காகக் கட்டப்படும் புதிய கட்டட வேலைகளை இடைநிறுத்திவைக்குமாறு வாழைச்சேனை சுற்றுலா நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

மேற்படி பிரதேச செயலகக்கட்டடம் அமைக்கப் படும் காணி தமக்கு உரியது எனப் பொதுமக்கள் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர். வழக்கு விசாரணை ஜனவரி 29 ஆம் திகதி நடைபெற்ற போதே மேற்படி தடை உத்தரவு விடுக்கப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு வாழைச்சேனை பிரதேச செயலாளரும் அழைக்கப்பட்டிருந்தார். தென்னை அபிவிருத்திச் சங்கத்திற்கு மேற்படி காணி உரியது என்றும் பின்னர் அக்காணியை பிரதேச செயலகத்திற்கு விற்றுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வழக்கு கடந்த 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

5 ஆம் திகதி நீதிமன்றம் கூடியபோது வழக்குத் தீர்ப்பு இம்மாதம் 12 ஆம் திகதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.



இருக்கிறார்கள். நிக்கி புறொவோஸ்ட் பிரெஞ்சு நாட்டின் சிறந்த மருத்துவர். அதிலும் தடவிக்கொடுத்து நோய் தீர்க்கும் நிபுணர். ஆறு மாத செம்மறி ஆட்டுக்குட்டி ஒன்றின் வயிற்றில் கட்டி ஒன்று வளர்ந்திருந்தது. அதனால் நடக்க முடியாமல் பரிதவித்தது ஆட்டுக்குட்டி. நிக்கி தடவிக் கொடுத்ததும்

# தடவிக் கொடுத்தால் பறந்து விடும் நோய்


மருந்து மாயம் ஏதும் இன்றி தடவிக்கொடுத்தாலே நோயைக் குணப்படுத்தும் வல்லமையுள்ள டாக்டர்கள் உலகில்

24 மணிநேரத்தில் ஆட்டுக்குட்டிக்கு சிறிது உடல் நலம் தேறியது.



# மரத்தில் வடித்தெடுத்த புராதன தேவாலயம்

நோர்வே நாட்டுக் கட்டடக்கலையில் மரத்துக்கு முக்கிய இடம் இருக்கிறது. காரணம் மரத்தில் உருவாக்கப்பட்ட கட்டடங்கள் அங்கு நீடித்து நிலைத்து நின்று புகழ் பரப்பிக் கொண்டிருக்கின்றன. டெவிமார்க் நகரிலுள்ள ஹெட்டல் ஸ்டேவ் தேவாலயம் மரத்தில் வடித்தெடுக்கப்பட்டது. நூற்றாண்டு கண்ட மேற்படி மரத்தேவாலயம் இன்னும் உறுதி குலையாமல் இருக்கும் காட்சியை இங்கு காணலாம்.



# நடப்பது எல்லாம் தலை கீழ் பாடம்

விலங்குகளைப் பொருத்த மட்டில் வௌவாலின் வாழ்க்கை முறைவிசித்திர மானது. வௌவால் தலைகீழாகவே நிற்கும். அதன் பழக்க வழக்கங்களும் தலைகீழான முறையிலேயே இருக்கும். வௌவாலுக்குக்கண் தெரியாது. இறக்கைகளை அடித்துப் பறக்கும் போது அந்த ஓசையின் எதிரொலியைக்கொண்டு வழியைத் தெரிந்து கொள்ளும் சக்தி அதற்கு உண்டு. எல்லாம் தலைகீழ் பாடம்தான்.

# ஆழ் கடலின் கீழ் ஓர் உலகம் இருக்கிறது

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் ஆழ் கடலின் கீழ் ஓர் உலகம் நிறுவப்பட்டிருக்கிறது. கடல் மட்டத்தில் நிறுவப்பட்ட கண்ணாடிக் குகைக்குள் சென்றால் கடல் வாழ் உயிரினங்கள் சுதந்திரமான முறையில் கடல் பரப்பில் நடமாடித்திரியும் காட்சிகளைக் கண்டு ரசிக்கலாம். குழந்தைகளுக்கு ஏற்படும் குதூகலத்திற்கு அளவே இல்லை.



# ஒளிந்திருக்கும் முகம் எது?



ஜனவரி 28ஆம் திகதி சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை மனோரமாவினுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து "சுடர் ஒளி"க்கு எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. பீற்றர் ஜோன் தாஸ், மன்னார்
2. எஸ்.ரீ. சந்திர வாணி, பொல்காஹவெல
3. எஸ்.எம்.எம். நஸீர் ஹான், மினுவான்கொடை

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களைப் பாராட்டுகிறோம். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துகள்.

கடந்த வாரம் (04-02-2001) மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகை யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் பெயர் விவரம் அடுத்தவாரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.



இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் படத்தில் ஒளிந்திருக்கும் நடிகர் யார்? ரஜினியின் நடமாட்டம் இல்லாததால் தமிழ் சினிமாவை ஆளும் நிலைக்கு வந்து விட்டவர். "அடிச்சால் மொட்டை சிரைச்சால் குடுமி" இவரது லட்சியம். யார் இவர்?

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டு பிடித்து அவர் பெயரை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

"சுடர் ஒளி"
36/2, பிரெட்றிகா வீதி,
கொழும்பு -06

கடல் ஆமை இனம் உலகில் அருகி வருகிறது. அதற்குக் காரணம் இயற்கை அனர்த்தங்களை எதிர்த்து நின்று உயிர் வாழும் ஆற்றல் அந்த இனத்திற்குக் குறைவு என்பது தான். கடற்கரைக்கு வந்து குழி தோண்டி முட்டைகளை இட்டு பின் மண்ணால் மூடிவிட்டு கடல் ஆமை கடலுக்குள் சென்று விடும்.

சூரிய வெப்பத்துக்கு முட்டைகள் பொரித்து குஞ்சுகள் வெளிவரும். அவற்றில் எத்தனை குஞ்சுகள் உயிர் தப்பி கடலுக்குச் செல்லுமோ தெரியாது. அருகி வரும் கடல் ஆமை இனத்தைப் பாதுகாக்க உலக இயக்கங்கள் பாடு படுகின்றன.

# கடல் ஆமைக்கு இடர் வந்துவிடக் கூடாதே!





ஆர்ப்பாட்டக்காரர்கள் மகிழ்ச்சி ஆரவாரம்



புதிய ஜனாதிபதி ஆரோயோ வெற்றிக்களிப்பு

# மக்கள் சக்தி பொங்கினால் ஊழல் அரசு பொசுங்கிவிடும்!

## பிலிப்பைன்ஸ் அரசியலில் இருந்து பாடம் கற்கிறார் ஐ.தே.க. தலைவர் ரணில்

மக்கள் சக்தி மகத்தானது. அது எத்துணை பலம் வாய்ந்தது என்பதைப் பிலிப்பைன்ஸ் நாடு உலகம் முழுவதற்கும் எடுத்துக் காட்டிவிட்டது.

ஊழல், வீண்விரயம், பொருளாதாரச் சீர் குலைவு, அடக்குமுறை எந்த ஆட்சியில் இருந்தாலும் அந்த ஆட்சிக்கு மக்கள் சக்தியால் எப்பொழுதும் ஆபத்துதான்.

இலங்கையில் அதை நினைவூட்டுகிறது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி. அரசாங்கத்தின் மீது பல குற்றச்சாட்டுகளைச் சுமத்தி கடந்த 4 ஆம் திகதி (சுதந்திரதினத்தன்று) கண்டியிலிருந்து கொழும்புக்கு பெருந்திரளான பொது மக்கள் சகிதம் மக்கள் சக்தி பாத யாத்திரை ஒன்றை ஆரம்பித்தது. அதற்குக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கினார் அதையே இங்கு குறிப்பிடுகிறோம். பிலிப்பைன்ஸில் மக்கள் சக்தி சாதித்தது என்ன?

அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு விட்டது.

பிலிப்பைன்ஸில் மீண்டும் ஊழல்களற்ற நல்லாட்சி அமைந்துவிட்டது என்று இப்பொழுது ஒருவித திருப்தி வெளியிடப்படுகிறது.

1998 ஆம் ஆண்டிலிருந்து ஜோசப் எஸ்ராடா நடாத்தி வந்த ஊழல் ஆட்சி மக்களின் ஆர்ப்பாட்டங்களினால் வீழ்த்தப்பட்டு, 53 வயதான குளோறியா மக்காபகல் அரோயோ என்ற பெண்மணியின் கையில் ஆட்சி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

15 ஆண்டுகளுக்கு முன் சர்வாதிகாரியாகவிருந்து ஆட்சி புரிந்த பேர்டினண்ட் மார்க்கோஸ் மக்களின் தீவிர ஆர்ப்பாட்டங்களால் பதவி கவிழ்க்கப்படவே கொறோஸோன் அக்கினோ பதவிக்கு வந்தார்.

அவரை அடுத்து 1998 இல் ஜோசப் எஸ்ராடா பதவிக்கு வந்தார்.

ஆனால், 60 மில்லியன் அமெரிக்க டொலர்களை இரகசிய வங்கிக் கணக்குகளில் வைத்திருக்கிறார் என்பது உட்பட பெருமளவு பண ஊழல் குற்றச்சாட்டுக்கள் இவர் மீது தெரிவிக்கப்பட்டன.



ரணில் விக்கிரமசிங்க

முன்னைநாள் பிரபல சினிமா நடிகரும் 'ஏழைகள் தோழருமான' எஸ்ராடா மீதான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு விசேட செனேட் விசாரணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகளும் தீவிரமாக நடைபெற்றன.

கடந்த டிசம்பர் 07 ஆம் திகதியன்று விசாரணைக்குழுவின் ஆயுள் காலம் முடிந்து விட்டது. அதாவது எஸ்ராடாவுக்கு ஆதரவான செனேட்டர்கள் விசாரணைகளிலிருந்து பின்வாங்கிச் சென்று விட்டனர். "இந்த விசாரணை மேலும் தொடர்வது மக்களைக் குழப்புவதாகும் என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டனர்.

விசாரணைகள் இவ்விதம் இடைநடுவில் நிறுத்தப்படவே மக்கள் தமது ஆத்திரத்தைக்காட்டும் நடவடிக்கைகளில் இறங்கினர். வீதி ஆர்ப்பாட்டங்கள் தலையெடுத்தன.

திடீர் திடீரென ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவான திருப்பங்கள் ஏற்பட்டன. வீதிகள் ஆர்ப்பாட்டக் களங்களாகின. ஜனநாயக அமைப்புக்களில் மக்கள் நம்பிக்கையிழந்துவிட்டதை பத்திரிகைகள் சுட்டிக் காட்டின. அஹிம்சைப் போராட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கில் சட்ட மறுப்பு போராட்டம் பற்றி ஆராயப்பட்டது. இறுதியில் ஆர்ப்பாட்டக் காரர்களின் எண்ணிக்கை பத்து இலட்சத்தைத் தாண்டியது.

அரசின் பொருளாதார ஆலோசகர் ஒருவரும் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இணைந்து சுலோகங்களை எழுப்பத் தொடங்கியதும் ஆர்ப்பாட்டம் சூடு பிடித்தது.

மேற்கு நாடுகளில் கல்வி கற்று பொருளாதாரப்பட்டம் பெற்று அமைச்சராகவும் பின்னர், உபஜனாதிபதியாகவும் இருந்த அரோயோ அம்மையாரும் ஆர்ப்பாட்டக் காரர்களுக்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்டார்.

எஸ்ராடா இதுவரையும் கொண்டிருந்த இறுக்கமான பிடிவாதத்தை ஓரளவு கைவிட்டு, தனக்குச் சாதகமான நிலை தோன்றும்வரை காலம் கடத்தும் உத்திகளில் ஈடுபடத்தொடங்கினார்.

அவர் தொலைக்காட்சியில் தோன்றி, தான் உடனடியாக ஜனாதிபதித் தேர்தலொன்றை நடத்த உத்தேசித்துள்ளதாகவும் கூறினார். அதில் தான் பங்குபற்றப் போவதில்லையென்றும் கூறினார். வெல்லும் ஒருவரிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு வீடு செல்வதாகவும் அறிவித்தார்.

அதுவரையும் அவருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் மற்றும் ஆதரவு தெரிவித்து உற்சாகப்படுத்தியவர்கள் எல்லாம் கைவிட்ட நிலையில் தான் இந்தத் தொலைக்காட்சியுரை இடம் பெற்றது.

மறுநாள் விடியற்காலை மனம்குழம்பிய நிலையில் அவர் பிதற்றத் தொடங்கினார். தொலைபேசியில் படைத்தளபதிகளை அழைத்து "நீங்கள் எனது பிரேதத்தைத்தான் இங்கிருந்து வெளியேற்ற முடியும்" என்று கத்தினார். ஆர்ப்பாட்டக்காரர்கள் இதற்கெல்லாம் மசியவில்லை.

பதவியைவிட்டுச் செல்லவேண்டிய தருணம் வந்துவிட்ட நிலையில் தனது தனிப்பட்ட கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டு முறைப்படியாக – சம்பிரதாய பூர்வமாக வெளியேறுவதற்காக மேலும் ஐந்து தினங்கள் அவகாசமளிக்குமாறு அவர் கோரினார்.

அதனையும் எதிர்த்தரப்பு நிராகரித்து விடவே அவரது ஹீரோ பாத்திரம் முடிவுபெற்ற நிலையில் மனைவி, மகன் சகிதம் படகொன்றில் ஏறி புறநகர்பகுதியிலுள்ள தனது சொந்த வீட்டிற்குத் தப்பியோடினார்.

மறுநாள் அரோயோ பதவியேற்றார்.

எஸ்ராடாவுக்கெதிராக வீதி ஆர்ப்பாட்டங்களில் ஒரு மில்லியன் வரையான மக்கள் பங்குபற்றியிருந்தனர்.

– தர்மலிங்கம்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்









# வடக்கு முஸ்லிம் அகதிகளின் இரண்டும் கெட்டான் நிலை!

## சொந்த இடத்திலும் சுகம் இல்லை; வந்த இடத்திலும் கவனிப்பு இல்லை

வடக்கிலிருந்து 10 ஆண்டுகளுக்கு முன் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் இன்று அகதிகளாக இரண்டு மாகாண சபைகளுக்கு இடையில் இரண்டும் கெட்டான் நிலையில் இருந்து தவிக்கிறார்கள். சென்ற இடம் அவர்களுக்கு எதையும் செய்ய மறுக்கிறது. வந்த இடமும் அவர்களை அந்நியராக எண்ணிப் புறக்கணிக்கிறது.

தேர்தல் வந்து விட்டால் போதும். வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்கள் எங்கிருந்தாலும் அவர்கள் மீது வடக்கு அரசியல் வாதிகளின் கண்கள் திரும்பி விடும். வாக்குகளைப் பெற்று வெற்றி ஈட்டிவிட்டால் அவ்வளவோடு சரி. பின்னர் அடுத்த தேர்தல் வரும் வரை முஸ்லிம் அகதிகளின் நினைவே அவர்களுக்கு வராது.

மற்ற மாகாணங்களைப் போல வடக்கு கிழக்கிலும் வடக்கு - கிழக்கு மாகாண சபை நிர்வாகம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதனால் முஸ்லிம் அகதிகள் பெற்ற நன்மை எதுவும் இல்லை.

இவர்களின் நலன்புரி சேவைகளுக்காக வடக்கு - கிழக்கு மாகாண சபையில் இருந்து ஒரு சதமேனும் இதுவரை செலவிடப்படவில்லை. இது குறித்து இப்போது பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு வெளியே வாழ்பவர்களுக்கு எம்மால் சேவையாற்ற முடியாது. எல்லைக்குள் வாழும் மக்களிடம் மட்டுமே எமது அதிகாரம், பணம் செயற்பாடுகள்'' என்று வடக்கு - கிழக்கு மாகாண சபை அதிகாரிகள் கைவிரித்து பல வருடங்களாகிறது.

வடக்கு முஸ்லிம் அகதிகள் பெரும் எண்ணிக்கையில் புத்தளம் மாவட்டத்திலேயே வாழ்கிறார்கள். இந்த மாவட்டத்தை உள்ளடக்கிய வடமேல் மாகாண சபையிடமிருந்து இவர்களுக்கு எதுவித நன்மையும் சேவையும் கிடைப்பதில்லை.

''வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் மீது எமக்கு எதுவித கடப்பாடும் இல்லை. இவர்களின் விடயங்கள் எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை'' என்று கூறி வடமேல் மாகாணசபையும் இவர்களை உதாசீனம் செய்து வருகிறது.

அண்மையில் வீசிய சூறாவளியினால் பாதிக்கப்பட்ட புத்தளம் மாவட்ட வடக்கு முஸ்லிம் அகதிகளுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை. இதற்குக் காரணம் இரண்டு மாகாண சபைகளுக்கும் இடையில் இவர்கள் இருப்பது தான்.

வடக்கு முஸ்லிம்களின் நலன்களையும் மீள் குடியேற்றத்தையும் பற்றி அதிகமாகப் பேசுபவர் பிரதியமைச்சர் நூர்டீன் மசூர். அவரிடம் இது பற்றி கேட்ட போது ''சூறாவளி நிவாரணத்தை வழங்கும் சமூக சேவைகள் அமைச்சு இந்த அகதிகளுக்கு நிவாரணம் வழங்க மறுத்துவிட்டது. ஜனாதிபதி நிதியத்தில் இருந்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரூடாக இந்த நிவாரணத்தைத் தருவதாக உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. இதனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்'' என்றார் அவர்.

அத்தோடு வடக்கு முஸ்லிம் அகதிகளின் இரண்டும் கெட்டான் நிலைக்கு முடிவு காண எடுக்கப்படும் முயற்சி பற்றியும் அவர் தகவல் தந்தார்.

''புத்தளம் மாவட்டத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் வசிக்கும் வடக்கு முஸ்லிம் அகதிகளின் நலன்களை கவனிக்க வடக்கு - கிழக்கு மாகாண சபையுடன் இணைந்ததாகப் பிரதேச செயலக அமைப்பு ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறோம். இது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது'' என்றார் அவர்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையுடன் இணைந்ததாகப் புத்தளம் மாவட்டத்தில் வசிக்கும் முஸ்லிம் மக்களின் நலன்களைக் கவனிக்க நீண்ட காலத்துக்கு முன்னர், அதாவது 1999 இலேயே ஒரு திட்டம் தீட்டப்பட்டது.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள வடக்கு முஸ்லிம்களுக்காக 'பிரதேச செயலக அமைப்பை' ஏற்படுத்தி அதனூடாக வடக்கு முஸ்லிம் அகதிகளை வடக்கு - கிழக்கு மாகாண சபையுடன் தொடர்புபடுத்துவதன் மூலம் நிர்மாண, நலன்புரிசேவை, புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஆகியவற்றைத் துரிதமாக மேற்கொள்வதே திட்டத்தின் நோக்கமாக இருந்தது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜயவர்தனா இந்தத் திட்டத்தை முன்வைத்தார். ஆனால் அப்போதிருந்த பொது நிர்வாக அமைச்சர் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போது எடுக்கப்படும் முயற்சியும் அவ்வாறே நிராகரிக்கப்படுமா? இதற்கான பதில் ஜனாதிபதியிடமே இருக்கிறது.

அரசியல்வாதிகள் இனிமேலும் தங்களை (அகதிகளை) பகடைக் காய்களாகப் பயன்படுத்த அனுமதிப்பதில்லை என்று முஸ்லிம் அகதிகள் முடிவு செய்திருக்கிறார்கள். புது உத்வேகத்துடன் அவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறார்கள்.

- அகதிகளில் தகுதியானவர்களுக்கு ஆசிரியர் நியமனம், கிராம சேவகர் நியமனம் ஆகியவற்றை வழங்க வேண்டும்.
- வடக்கு அகதிகளுக்கான புத்தளப் பகுதி பாடசாலைகளில் நிறைய ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. அவற்றை நிரப்பக் கல்வி அமைச்சர் இணக்கம் தெரிவித்திருந்தும் இன்னும் அவை நிரப்பப்படவில்லை. இது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- வடக்கு முஸ்லிம் அகதிகளுக்கு சமுர்த்தி வழங்கப்பட வேண்டும்.
- 1990ஆம் ஆண்டு தொடக்கம் வடக்கு முஸ்லிம் அகதிகளுக்கான உலர் உணவு 500 - 1250 ரூபா வரையானதாகவே இருப்பது இன்றைய காலகட்டத்தில் போதுமானதாக இல்லை. அதுவும் நேரகாலத்துடன் கிடைப்பதில்லை. இதற்கு ஜனாதிபதியே நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- கிராமிய வீடமைப்புக்கான நிதியையும், வடக்கு முஸ்லிம் புனர்வாழ்வுக்குரிய நிதியையும் இணைத்து வடக்கு முஸ்லிம் அகதிகளுக்கான வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். வீடமைப்புத் திட்டங்களை ஏற்படுத்தி வடக்கு முஸ்லிம்களை மீள் குடியேற்றும் போது புத்தளம் மாவட்ட அகதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் பணிப்புரைகளுக்கு எதிராக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் சில அதிகாரிகள் செயற்பட முயற்சி செய்வதாகத் தெரிகிறது. இது நிறுத்தப்பட வேண்டும்.

இப்படி முஸ்லிம் அகதிகள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

# இயற்கை முறை விவசாயத்தில் இளவரசர் சார்ள்ஸ் சாதனை

இயற்கை முறை விவசாயம் செய்து இளவரசர் சார்ள்ஸ் சாதனை நிலைநாட்டியிருக்கிறார்.

''வேண்டாம் ரசாயன உரங்களும் பூச்சி மருந்துகளும் ; இன்றைய தேவை சுற்றுப்புறச் சூழலைக் காப்பாற்றக்கூடிய இயற்கை உரங்களைப் பயன்படுத்தும் விவசாய முறைதான்'' என்ற முழக்கம் உலகம் முழுவதும் உரக்கக் கேட்கிறது.



இயற்கை முறையில் கிருமி ஒழிப்பில் இளவரசர் நாட்டம்

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ், ஹைகுரோவ் என்ற இடத்தில் முற்றிலும் இயற்கை உரங்களையே பயன்படுத்தி உற்பத்தி செய்யும் விவசாய முறையைக் கடந்த 16 ஆண்டுகளாக 400 ஹெக்டர் நிலப்பரப்பில் செயல்படுத்தி வருகிறார்.

1980 களில் பிரிட்டனில் இயற்கை உரங்களைப் பயன்படுத்த விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்த வேளையில் துணிச்சலாக இதைத் தொடங்கினார் இளவரசர் சார்ள்ஸ்.

இன்று லாபம் கொழிக்கும் நவீன தொழிலாக உருமாறி உள்ளது இயற்கை உரங்களைப் பயன்படுத்தும் விவசாய முறை.

400 ஹெக்டர் நிலப்பரப்பில் நிறையப் பறவைகள் வந்து போகின்றன. 120 வகைப் பூக்கள் பூக்கின்றன. 30 வகையான புற்கள் வளர்ந்து செழித்துள்ளன.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுப் பொருள் குறித்த அச்சம் மேலை நாடுகளில் அதிகமாக உள்ளது. குறிப்பாக பிரிட்டனில், ''நாம் எதைச் சாப்பிடுகிறோம் ; அதற்குள் என்னவெல்லாம் இருக்கின்றன என்று தெரியவில்லையே?'' என்ற அச்சம் பரவலாக உள்ளது.

இச் சூழலில் இயற்கை உரங்களைப் பயன்படுத்தும் இயற்கை விவசாய முறையில் உற்பத்தியாகும் விவசாய விளைபொருட்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. இது நம்பகமான விளைபொருள் என்ற பெயரும் உள்ளது.

உலகம் முழுவதும் இயற்கை விவசாய முறைக்குத் திரும்ப வேண்டும் என்பதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கம் ஆகும்.

## சிரிப்பு



''அந்த நடிகை மறுபடியும் நடிக்க வர்றாங்களாமே?''

''இனியாவது 'நடிச்சா' சரி!''



''டைரக்டர் ஸார், ஷூட்டிங்குக்காக லொறியில் கொண்டுவந்துக்கிட்டிருந்த கொரில்லா வழியில தப்பி ஓடிட்டுது!''

''அதுக்கு ஏன் வீணா டென்ஷன் ஆவுறே மேன்? நம் புரொட்யூஸரை நடிக்க வைச்சுக்கிட்டா ஆச்சு!''

# தெரு நாய்களைப் போல் பிடிக்கப்படும் பிள்ளைகள்!

## யுத்தத்தின் கொடுமையால் வவுனியாவில் சிறுவர்கள் சீரழிவு
## பிச்சை எடுக்க 50 ரூபா வாடகைக்கு புனர்வாழ்வு முகாமில் பிள்ளை

**யு**த்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களில் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகம். ஆயுதத் தாக்குதல்களில் பெற்றோரை இழந்தும் சில சிறுவர்கள் அனாதைகளாக இருக்கிறார்கள். இன்னும் சிலர் குடும்பத் தலைவனை இழந்த நிலையில் 15 வயது நிரம்ப முன்னரே கடைகளிலும் வீடுகளிலும் வேலை செய்து தமது குடும்பத்தைக் காப்பாற்றுகிறார்கள்.

இன்னும் சிலர் இடம்பெயர்ந்த நிலையில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரமின்றியும் பாடசாலை அத்தாட்சிப்பத்திரமின்றியும் இருக்கிறார்கள். கல்வியைத் தொடர முடியாத நிலையில் வீதிகளில் அலைகிறார்கள்.

போதைப்பொருள் விற்பனை, பாலியல் துஷ்பிரயோகம் என்பனவற்றில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவதும் அதிகரித்துக் காணப்படுகிறது.

சிறுவர்கள் கராஜ்களிலும் ஹோட்டல்களிலும் வேலை செய்வதுடன் பிச்சை எடுப்பதிலும் ஈடுபட்டு தமது எதிர்காலத்தையே சூனியமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

வவுனியாவைப் பொறுத்த வரையில் இது அதிகமாகவே காணப்படுகிறது. இடம் பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களும் நலன்புரி நிலையங்களிலிருக்கும் சிறுவர்களும் சிறுவயதில் உழைக்கவும் பிச்சை எடுக்கவும் பயன்படுத்தப்படுகிறார்கள்.

வவுனியா பஸ் நிலையப் பகுதிகளில் கையிலே குழந்தைகளுடன் பிச்சை எடுக்கிறார்கள். போவோர் வருவோரை எல்லாம் சுரண்டிச் சுரண்டி குழந்தையைக் காட்டி அழுதபடி கையேந்தி நிற்கிறார்கள்.


"பிச்சை எடுக்கப் பிள்ளையை முகாமிலிருந்து கொண்டுபோவதென்றால் வாடகை கொடுக்க வேண்டும். ஒரு பிள்ளைக்கு ஒரு நாள் வாடகை 50ரூபா முதல் 100 ரூபா வரையாகும். சிலர் வருமானத்தில் பாதி கேட்பதுமுண்டு. ஆனால் பல நாட்களுக்கு முன்பே புக் பண்ணி வைத்துவிட வேண்டும்''.

கல்வி கற்க வேண்டிய காலப்பகுதியில் அலைந்து திரியும் சிறுவர்கள் திருத்தப்பட வேண்டியவர்களே. ஆனால் அதற்காக உண்மையில் கஷ்டத்தில் அவதியுறும் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது.


பொதுமக்களுக்கு இது பெரும் இம்சையாகவே இருக்கிறது.

குடும்பக் கஷ்டங்களைச் சொல்லி வேலை கேட்டு வரும் சிறுவர்களும் இருக்கிறார்கள். அவர்களை விரட்டி அடிக்க முடியாது.

சிறுவர்களை வேலைக்கமர்த்துவது தண்டனைக்குரிய குற்றம். இருந்த போதிலும் இரக்கம் காட்டி வேலைக்கு வைத்திருப்பது தர்மசங்கடமாக – இருக்கிறது.

வவுனியாவிலுள்ள நல்லொழுக்க விசாரணை சிறுவர் பரிபாலன அதிகாரிகளும் வவுனியா பிரதேச சபையின் சமுர்த்தி அதிகாரிகளும் அண்மையில் – அதிரடி நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டனர்.

வீதிகளிலே திரிந்து பிச்சையெடுக்கும் சிறார்களையும் கடைகளிலே வேலை செய்யும் சிறுவர்களையும் விரட்டிப் பிடித்து வாகனமொன்றில் அள்ளிப் போட்டனர். வவுனியா ஹொரவப்பொத்தான வீதியில் உள்ள நல்லொழுக்க விசாரணை சிறுவர் பரிபாலன அலுவலகத்தில் அவர்களைத் தடுத்து வைத்தனர்.

அதிகாரிகள் விரட்ட சிறுவர்கள் ஓடி ஒழிய அவர்களைத் தேடி அதிகாரிகள் பதுங்கிப்பதுங்கிப் போய்ப்பிடித்தனர். அழுத சிறுவர்களையும் அடம் பிடித்த சிறுவர்களையும் அதட்டி வாகனத்திலேற்றினர். சிறுவர்கள் அழுது புலம்பிய படி இருந்தனர்.

நகரசபையினர் நாய் வண்டியில் வரும் சம்பவத்தை இது நினைவு படுத்தியது. வவுனியா மக்களுக்கு இந்தச் சம்பவம் மனக்குழப்பத்தைத் தந்துவிட்டது.

சுற்றிப் பிடிக்கப்பட்ட 92 சிறுவர்களும் மாலையில் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இருப்பினும் இந்த சம்பவம் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்திவிட்டிருக்கிறது.

சிறுவர்களை வேலைக்கமர்த்தியவர்கள் இந்த சம்பவத்தின்பின் அவர்களை வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள். பிச்சையெடுக்கும் சிறுவர்கள் பிச்சை எடுக்கவே அஞ்சுகிறார்கள். இதனால் அவர்கள் வீடுகளில் அடுப்பெரிவதே நின்றுவிட்டது.

சிறுவர்களின் கல்விக்கோ அவர்களது குடும்பத்தவரின் வருமானத்திற்கோ மாற்று வழி இல்லை. இந்த நிலையில் திடீரென அதிகாரிகளின் இந்த நடவடிக்கை பல்வேறு விமர்சனங்களை ஏற்படுத்திவிட்டது.

அதேவேளை அன்று பிடிக்கப்பட்டுப் பின் விடப்பட்ட சிறுவர்களில் பலர் அன்று மாலையே வீதிக்கு வந்து பிச்சை எடுக்கத் தொடங்கி விட்டார்கள். அன்றைய தினத்திலே ஒரு பரபரப்பையும் சிறுவர்களுக்கு பயத்தையும் ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தால் கிடைத்த பயன் என்ன?

இது பற்றி வவுனியாவிலுள்ள சிறுவர் நன்னடத்தை அதிகாரி கூறியதாவது:–

"வவுனியாவில் சிறுவர்கள் கல்வி கற்க வேண்டிய வயதில் வேலை செய்தும் பிச்சை எடுத்தும் காலத்தைப்போக்கி வருவது நீண்டகாலமாக எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுவந்தது.

இவர்களை இப்படியே விட்டால் சிறுவர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டு தவறான சமூகமொன்று உருவாகக் காரணமாகிவிடும். எனவே இவர்களை இந்தப் பாதையிலிருந்து மாற்ற வேண்டுமென்று திட்டம் வைத்திருந்தோம்.

"ஆனால் அதனை செயல்படுத்த எமக்கு ஆள்வசதியோ, அதிகாரிகள் வசதியோ இருக்கவில்லை. அந்த வேளையில் வவுனியா பிரதேச சமுர்த்தி அதிகாரிகள் ஒத்துழைப்புத் தர முன்வந்தார்கள். அதனையடுத்து வவுனியா மாவட்ட நீதிமன்றத்திற்கு எழுத்துமூலமான அறிவிப்பொன்றை விடுத்தோம். இவ்வாறான சிறுவர்களை பிடித்துவரத் திட்டமிட்டோம்.

"அதற்கு ஒரு வெள்ளிக்கிழமையையே தெரிவு செய்தோம். ஏனென்றால் வெள்ளிக் கிழமைகளிலேயே சிறுவர்கள் பிச்சைக்காக அலைவதுவழக்கம். இதன்படி கடந்த 2ஆம் திகதி 92 சிறுவர்களைப் பிடித்துவந்து எச்சரித்து அவர்களது பெற்றோருடன் அனுப்பிவைத்தோம்.

ஆனால் அவர்களில் பலரின் கதை பரிதாபகரமானது. தகப்பனை இழந்த நிலையில் சிறுவனின் வருமானத்தில் மட்டுமே தங்கியிருக்கும் குடும்பம், வீட்டுக்குப் பணம் கொடுக்காமல் குடித்துக் கும்மாளம் இடும் தகப்பனை நம்பிப் பயனில்லாத நிலையில் தானே சம்பாதிக்கச் செல்லும் சிறுவனைக் கொண்ட குடும்பம்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், பாடசாலை அத்தாட்சிப் பத்திரம், விலகல் பத்திரம் எதுவுமில்லாததால் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளப்படாமல் நிர்க்கதியாக நிற்கும் சிறுவர்கள்.

இவை எல்லாவற்றையும் விட ஒரே வகுப்பில் 2–3 வருடங்கள் இருந்து படிப்பே வராத நிலையில் இது தேறாது என்று ஆசிரியர்களால் கைவிடப்பட்டவர்கள் என்று ஏராளமான சிறுவர்கள்.

"இவர்களைப் பிடித்து வைத்தும் எதுவும் செய்ய முடியாத நிலை. அவர்களைப் பராமரிக்கக்கூடிய வசதிகளும் எம்மிடம் இல்லை. எனவே அவர்களுக்குப் புத்திமதி கூறி வீட்டுக்கு அனுப்பிவிட்டோம்" இவ்வாறு கூறினார் அந்த அதிகாரி.

சிறுவர்களை வேலைக்கமர்த்தியுள்ள கராஜ் உரிமையாளர் ஒருவர் கூறியதாவது:

"மிகவும் கஷ்டம். வருமானமில்லை. படிக்க அனுப்ப வசதியில்லை. வீட்டிலே சும்மா இருக்கிறான். உங்களது கராஜ்ஜில் வேலைக்குப் போடுங்கள், எமக்கு வருமானமும் கிடைக்கும் அவன் ஒரு தொழில் பழகியதாகவும் இருக்கும் என்றுதான் பலரும் வந்து கெஞ்சிக் கூத்தாடி தமது பிள்ளைகளை வேலைக்குச் சேர்க்கிறார்கள்

"நாமும் பரிதாபப்பட்டு ஏதோ இருக்கட்டுமே என்று வேலைக்கு வைத்திருக்கிறோம். ஆனால் தற்போது சிறுவர்களை வேலைக்கு வைத்திருப்போர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார்கள். அதனால் என்னிடம் இருந்த சிறுவர்களை விரட்டி விட்டேன். ஆனால் ஒவ்வொரு நாளும் வந்து கெஞ்சுகிறார்கள். நான் என்ன செய்ய முடியும்" இவ்வாறு கூறினார் அந்த கராஜ் முதலாளி.

இது தவிர சிலர் கஷ்டத்தின் மத்தியில் பிச்சை எடுக்க இன்னும் சிலர் பிச்சை எடுப்பதை குடும்பத் தொழிலாகவே செய்து வருகிறார்கள். காலையில் நலன்புரி நிலையங்களிலிருந்து புறப்படுகிறார்கள். அப்பா ஓரிடம் அம்மா ஓரிடம். பிள்ளைகள் ஓரிடம் எனப்பகுதி பிரித்து பிச்சை எடுக்கிறார்கள்.

கையிலே குழந்தையுடன் போவோர் வருவோரைச் சுரண்டி பிச்சை எடுத்துக்கொண்டிருந்த சிறுவர்கள் தென்பட்டனர்.

கையிலே இருந்த குழந்தைகள் அவர்களுடன் சேராமல் அழுதுகொண்டேயிருந்தன.

"பிள்ளை ஏன் அழுகிறது?" என்று கேட்டபோது "பசி நேற்றிரவிலிருந்து ஒன்றும் சாப்பிடவில்லை." என்றார்கள். "யாருடைய பிள்ளை?" என்று கேட்டபோது "தம்பி" என்றார்கள்.

சந்தேகத்துடன் மிரட்டிய போது "முகாமிலே வாங்கிக்கொண்டு வந்தோம்" என்றார்கள். எப்படி என்று கேட்டபோது உண்மையைப் போட்டு உடைத்தார்கள்.

"பிச்சை எடுக்கப் பிள்ளையை முகாமிலிருந்து கொண்டுபோவதென்றால் வாடகை கொடுக்க வேண்டும். ஒரு பிள்ளைக்கு ஒரு நாள் வாடகை 50 ரூபா முதல் 100 ரூபா வரையாகும். சிலர் வருமானத்தில் பாதி கேட்பதுமுண்டு. ஆனால் பல நாட்களுக்கு முன்பே புக் பண்ணி வைத்துவிட வேண்டும்" என்றார்கள்.

கல்வி கற்க வேண்டிய காலப்பகுதியில் அலைந்து திரியும் சிறுவர்கள் திருத்தப்பட வேண்டியவர்களே. ஆனால் அதற்காக உண்மையில் கஷ்டத்தில் அவதியுறும் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது.

– வன்னிமைந்தன்

# திருமலை பிரமுகர்கள் பிரிட்டனுக்கு மகஜர்

இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாண எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஆபத்தை உண்டாக்கும் எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாம்.

இப்படி திருகோணமலை நகரிலுள்ள பல்வேறு அரசியல் சமூக பொருளாதார அமைப்புகளையும் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பிரிட்டிஷ் பிரதம மந்திரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தமிழ் மக்களின் நீண்டகால அவலங்களுக்கு நிரந்தரத் தீர்வைத் தரக்கூடிய சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசாங்கத்தை ஈடுபட வைப்பதற்கான முயற்சிகளை பிரிட்டிஷ் அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

திருகோணமலை சிவானந்த தபோவனம், திருகோணமலை அரச சார்பற்ற அமைப்புகளின் கூட்டமைப்பு, கிழக்கு புனரமைப்பு நிறுவனம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் திருகோணமலைக்கிளை, உப்புவெளி சமாதானக் கமிட்டி, திருகோணமலை அகதிகள் நலன்புரி சங்கம், வட - கிழக்கு தமிழ் ஆசிரியர் ஒன்றியம், ரோட்டறிக் கழகம், அன்பு இல்லம் முதலானவற்றின் முக்கியஸ்தர்களும், மற்றும் பல சமூகப் பெரியவர்களும் கூட்டாகக் கைச்சாத்திட்டு மகஜர் ஒன்றை பிரிட்டிஷ் பிரதமருக்கு அனுப்பியுள்ளனர். அம்மகஜரிலேயே இவ்வாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் குறிப்பிட்டிருந்ததாவது:-

சமாதானத்தீர்வில் நம்பிக்கை கொண்டுள்ள இரண்டாவது, பெரிய சமூகமான இலங்கைத் தமிழர்கள் ஒரு முக்கியமான காலகட்டத்தில் இன்று இருக்கின்றனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு வரவில்லை என்று இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டிவருகிறது.

ஆனால் பேச்சுவார்த்தைக்கு வேண்டிய நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தவென்று ஒருதலைப்பட்சமாக ஒருமாத யுத்த நிறுத்தம் செய்து, பின்பு மேலும் ஒரு மாதத்துக்கு அதைப் புலிகள் நீடித்துள்ளனர். அரசாங்கம் பல்வேறு காரணங்களைக் காட்டி யுத்தநிறுத்தத்தை நிராகரிக்கிறது.

நோர்வே நாடு சமாதானத் தீர்வு தொடர்பாக முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகங்கள், சகலவழிகளிலும் ஆதரவளிப்பது கடமையாகும்.

இலங்கையை ஒரு காலத்தில் ஆட்சி செய்த நாடு என்ற வகையிலும், தமிழர்களின் இன்றைய சூழ்நிலைக்கு குற்றம் சாட்டப்படும் நாடு என்ற வகையிலும் பிரச்சினைக்குச் சமாதானமாகத் தீர்வுகாண உதவும் கடப்பாடு பிரிட்டனுக்கு இருக்கிறது.

இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கில் ரெலோவுடன் ஈ.பி.டி.பி அறிக்கை மோதல்

## வர்த்தகர்களிடம் கப்பம் வசூல் தொடர்பாகக் கண்டனங்கள்

ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்டதாகக் கூறிக் கொள்ளும் அரசியல் கட்சிகள் யாழ் வர்த்தகர்களிடம் கப்பம் கோரி வருவது குறித்து ஏற்கனவே இப்பத்தியில் தகவல் வெளியாகி இருந்தது.

யாழ்ப்பாணத்தில் செயற்படும் ரெலோ, புளொட் ஆகிய இரு கட்சிகளின் உறுப்பினர்களே கப்பம் தருமாறு தங்களை வற்புறுத்தி வருவதாக யாழ் வணிகர் கழகம் ஒப்புக்கொண்டுள்ளது.

யாழ் நகரில் உள்ள வர்த்தகர்கள் எந்தவொரு கட்சிக்கும் இயக்கத்துக்கும் நிதி உதவியோ அன்றி கப்பமோ செலுத்தக்கூடாது என்று நகரில் உள்ள 512 ஆவது பிரிகேட் தளபதி வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியிருப்பதாகவும் வணிகர் கழகப் பிரதிநிதிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இரு கட்சிகளின் உறுப்பினர்கள் கப்பம் கோரியதாகத் தகவல் வெளியானதை அடுத்து முறையற்ற பண வசூல்களில் ஈடுபட்டு மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று கோரி ஈ.பி.டி:பி கட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அதில் ரெலோ அமைப்பின் பெயரைக் குறிப்பிட்டு அதன் ஜனநாயக விரோத செயல்களைக் கண்டித்திருந்தது ஈ.பி.டி.பி.

முறையற்ற விதத்தில் மக்களைத் தொந்தரவு செய்யும் இத்தகைய சக்திகளை அம்பலப்படுத்தாமல் ''ஆயுதக் குழுக்கள்'', ''துணைப் படையினர்'' என்பது போன்ற அடைமொழிகளால் பூடகமாகக் குறிப்பிடுவது குறித்தும் ஈ.பி.டி.பி கண்டனம் தெரிவித்திருந்தது.

ஜனநாயக விரோத சக்திகளைப் பெயர் குறிப்பிட்டு அம்பலப்படுத்த வேண்டும் என்று கோரியுள்ள ஈ.பி.டி.பி தனது அறிக்கையில் ரெலோவின் பெயரை மட்டும் வெளியிட்டுவிட்டு மற்றும் சில கட்சிகளின் உறுப்பினர்களும் என பூடகமாகக் குறிப்பிட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் செயற்படும் ஜனநாயக விரோத சக்திகளைப் பெயர் குறிப்பிட்டு அம்பலப்படுத்த வேண்டும் என்று ஈ.பி.டி.பி. கோரியிருப்பது வரவேற்க வேண்டியதுதான். ஆனால் கட்சிகளின் செயற்பாடுகளைப் பெயர் குறிப்பிட்டு விமர்சிக்கும் அளவுக்கு ஜனநாயகச் சூழல் - கருத்துச் சுதந்திரம் - யாழ்ப்பாணத்தில் நிலவுகிறதா?

ஈ.பி.டி.பியின் அறிக்கை வெளியானதை அடுத்து அதற்குப் பதிலளிக்கும் வகையில் காரசாரமான மற்றொரு அறிக்கையை ரெலோ அமைப்பு வெளியிட்டது. அந்த அறிக்கையில் ஈ.பி.டி.பி யின் நடவடிக்கைகளைக் கடுமையாகக் கண்டித்துள்ள ரெலோ, வர்த்தகரை வருத்தி பணம் வசூலிக்கும் செயலில் தனது அமைப்பு ஒரு போதும் ஈடுபட்டதில்லை என்று தெரிவித்துள்ளது.

முன்னர் கட்சிக்கு நிதி நெருக்கடி ஏற்பட்ட சமயங்களில் கட்சியினருக்கு நன்கு அறிமுகமான சில வர்த்தகப் பிரமுகர்களிடம் நன்கொடை அடிப்படையில் ஒரு புரிந்துணர்வான விளக்கத்தின் ஊடாக - தமது கட்சி உறுப்பினர்கள் நிதி வசூலித்தனர் என்பதையும் அந்த அறிக்கையின் மூலம் ஒப்புக் கொண்டிருக்கிறது ரெலோ.

ஈ.பி.டி.பியின் செயற்பாடுகள் குறித்து தனது அறிக்கையில் ரெலோ பல குற்றச்சாட்டுக்களை வெளியிட்டதை அடுத்து ரெலோவின் குற்றச் சாட்டுக்களைக் கண்டிக்கும் பதில் அறிக்கைகளை ஈ.பி.டி.பியின் பொறுப்பில் உள்ள பிரதேச சபைகளும் சில அமைப்புகளும் வெளியிட்டிருக்கின்றன.

ஈ.பி.டி.பியினால் நிர்வகிக்கப்படும் சில பிரதேச சபைகளின் செயலாளர்கள் ஒப்பமிட்டு யாழ். பத்திரிகைக்கு அறிக்கைகளை அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

அரசியல் கட்சிகள் சம்பந்தப்பட்ட இந்த அறிக்கை - மோதலில் அரச சிவில் நிர்வாக அதிகாரிகள் தலையிடுவதை - அரசியல் வாதிகளின் தூண்டுதலினால் அவர்கள் பலிக்கடாக்கள் ஆக்கப்படுவதைத் தவிர்க்கும் நோக்குடன் பிரஸ்தாப அறிக்கைகளைப் பிரசுரிப்பதை யாழ். பத்திரிகைகள் தவிர்த்துக் கொண்டதாகவும் தெரியவருகிறது.

வேண்டாத அரசியல் சிக்கலில் மாட்டிக் கொள்ளும் ஆபத்தை உணர்ந்த ஒரு சில பிரதேச சபை செயலாளர்கள் தாங்கள் அனுப்பிய அறிக்கைகளைப் பின்னர் விழுந்தடித்துக் கொண்டு வாபஸ் பெற்றுக் கொண்டதாகவும் தெரியவருகிறது.

கப்பம் வசூலிக்கும் விவகாரம் தொடர்பான அறிக்கை மோதல் இப்படித் தொடர்ந்து கொண்டிருக்க பணம் கேட்டு வற்புறுத்தல்களும் தொடர்ந்து வந்தபடி இருப்பதாக யாழ். நகர வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

### கைமாறும் வாழ்விடங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்விடங்கள் அடிக்கடி யுத்தப் பிரதேசங்களாக மாறுவதும் அப்பகுதிகளில் இருந்து வெளியேறியோர் பின்னர் மீண்டும் திரும்பிச் சென்று குடியமர்வதும் மாறி மாறி நிகழ்கின்றன.

மக்கள் வாழ்கின்ற பகுதிகள் சண்டையில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பாரிடமும் அடுத்தடுத்துக் கைமாறுகின்றன. இந்த நிலைமை சுழற்சி முறையில் தொடர்கிறது அதனால்அப் பிரதேசங்கள் பொதுமக்களுக்கு ஆபத்தான வலயங்களாக மாறுகின்றன.

அண்மைக் காலங்களில் நீடித்த சண்டைக்குப் பின்னர் இராணுவம் மீட்டெடுத்த புதிய பிரதேசங்களில் மக்களைக் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்துகொண்டிருக்கின்றன. தங்கள் வாழ்விடங்களுக்குத் திரும்பிவிட வேண்டும் என்ற உந்துதல் காரணமாக ஆபத்துகளை உணரத் தவறிவிடுகின்றனர் மக்கள்.

தீவிர சண்டை நடந்த பகுதிகள் பெருமளவு நிலக்கண்ணிகள் உட்பட வெடிக்கக்கூடிய ஆபத்தான பொருள்களின் விளைநிலங்களாக மாறியுள்ளன.

மிதி வெடிகளில் சிக்கி அப்பாவி மக்கள் தினமும் அங்கவீனமடைந்து வரும் சம்பவங்கள் ஒரு புறம் தொடர்ந்தபடி இருக்கின்றன. இந்த நிலைமை புதிய ஆயுத கலாசாரம் ஒன்றை உள்ளூரில் உருவாக்கிவிடுமோ என்ற கவலை புதிதாக ஏற்பட்டிருக்கிறது.

சண்டை நடந்த பகுதிகளில் வாழ்விடங்களைப் பார்க்கச் செல்வோர் வெடிக்காத ஷெல்கள், கிரனேட்டுக்கள், மிதிவெடிகள் இன்னும் வெடிக்கக் கூடிய பல பொருள்களைத் தாராளமாகக் கண்டுள்ளனர். சிலர் தங்கள் உடைமைகளுடன் சேர்த்து இத்தகைய ஆபத்தான பொருள்களையும் மீட்டு வந்திருப்பதாகத் தகவல் கிட்டியிருக்கிறது.




காவலரண்கள், பதுங்கு குழிகள் அமைந்திருந்த இடங்களில் காணப்பட்ட வெடிக் கக் கூடிய பொருள்களை அண்மையில் கைதடி, நாவற்குழிப் பகுதிகளுக்குப் பொருள்களை மீட்டுவரச் சென்ற சிலர் எடுத்து வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வீடுகளைப் பார்வையிடும் சாக்கில் பொருள்களைத் திருடச் சென்ற கும்பல்களின் கைகளிலும் இத்தகைய ஆபத்தான பொருள்கள் சிக்கியிருப்பதாகவும் தகவல்கள் அடிபடுகின்றன.

வீடுகளைப் பார்க்கச் சென்ற வேளை சில கிரனேட்டுக்களை எடுத்து வந்ததாகக் கூறப்படும் இளைஞர்கள் சிலர் நல்லூர் பகுதியில் சீருடையினரிடம் சிக்கியதாகவும் தெரியவருகிறது.

கிரனேட்டுக்கள் போன்ற ஆபத்தான வெடி பொருள்கள் சாதாரண மக்களின் கைகளில் கிடைப்பது பாரதூரமான, பயங்கரமான பின்விளைவுகளை ஏற்படுத்தி விடலாம் என்ற அச்சம் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

உள்ளூரில் மக்கள் மத்தியில் ஏற்படும் சண்டை சச்சரவுகளின் போதும் கோஷ்டி மோதல்களின் போதும் இத்தகைய இராணுவ வெடி பொருள்கள் தாக்கும் கருவிகளாக மாறிவிட்டால் பேராபத்து ஏற்படலாம் என்று சில சாரார் சுட்டிக் காட்டுகின்றனர்.

அண்மையில் துன்னாலை, வேம்படிப் பகுதிகளில் இடம்பெற்ற ஒரு சம்பவம் இத்தகைய ஆபத்துகளுக்கு முன்னுதாரண நிகழ்வாக அமைந்துள்ளது.

இப்பகுதியில் உள்ள தனது கடையைத் திறப்பதற்காகக் காலையில் சென்ற கடை உரிமையாளர் ஒருவர் கடை வாசலில் புதைக்கப்பட்டிருந்த மிதி வெடியில் சிக்கித் தனது கால் ஒன்றை இழந்தார். இது தனிப்பட்ட பகைமை காரணமாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக சிவிலியன்கள் ஐவர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

வெடிக்கக்கூடிய பொருள்கள், இராணுவ சாதனங்கள் பொதுமக்களின் கைகளுக்கு இலகுவில் எட்டக் கூடிய நிலைமையை உருவாக்குவது இத்தகைய சம்பவங்கள் பெருமளவில் அதிகரிப்பதற்கு வழிசெய்துவிடக்கூடும்.

### சில்லறைப் பிரச்சினை

குடாநாட்டில் சில்லறை நாணயங்களுக்கான தட்டுப்பாடு வெறும் சில்லறைப் பிரச்சினை என்ற நிலையில் இருந்து பூதாகரமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பொதுவாக சித்திரைப் புத்தாண்டு காலத்தில்தான் திடீரெனச் சில்லறை நாணயங்களுக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்படுவது வழக்கம். ஆனால் யாழ்ப்பாணத்தில் ஆண்டு முழுவதும் சில்லறைக்குத் தட்டுப்பாடு தொடர்கிறது.

நாளாந்தப் பணப் புழக்கத்தில் - கொடுக்கல் வாங்கல்களில் - சாதாரண மக்களை இந்தச் சில்லறைப் பற்றாக்குறை எந்தளவுக்குப் பாதிக்கிறது என்பதை அவதானித்தால் நிலைமை புரியும்.

சந்தைகளில், கடைகளில், பஸ் வண்டிகளில், சைக்கிள் தரிப்பிடங்களில் சில்லறைகளைப் பரிமாறிக் கொள்வது தினந்தோறும் திண்டாட்டம்தான். இதனால் சண்டை, சச்சரவுகளும் ஏற்படுகின்றன.

மிகுதிக் காசு சில்லறையில் இருந்தால் அது கிடைக்காது.

சில்லறைக்குப் பதிலாக ரொபி அல்லது வேறு ஏதாவது சிறு பொருள் கிடைக்கும். மிகுதிப் பணத்தை வாங்கிக் கொள்ளாமலேயே பஸ்களில் இருந்து இறங்கிவிடும் பயணிகள் ஏராளம்.

இந்தச் சில்லறைப் பிரச்சினைக்குக் காரணம் என்ன?

குடாநாட்டிலுள்ள வங்கிகளுக்கு விமானம் மூலம் பணம் எடுத்து வரப்படுகிறது. சில்லறைகளை விட தாள் நோட்டுக்களே இலகுவில் எடுத்து வரக்கூடியவை. அவற்றின் எடையும் குறைவு. எனவே தாள் காசு தாமதமின்றித் தாராளமாக வந்து சேருகின்றன. ஆனால் சில்லறை நாணயப் பொதிகள் மிகவும் எடை கூடியனவாக இருப்பதால் விமானத்தில் அவற்றை ஏற்றிவர பின்னடிப்பதாகத் தகவல்.

கடந்த சில ஆண்டுகளாகச் சில்லறைக்குப் பற்றாக்குறை நிலவுவதற்கு இதுவே முக்கிய காரணம் எனத் தெரிய வருகிறது.

இந்த சில்லறைப் பிரச்சினையை வங்கி அதிகாரிகள் ஒரு சில்லறையான பிரச்சினையாகவே நினைக்கின்றனர். ஆனால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பாதிப்புகள் சில்லறைப் பாதிப்புகள் அல்ல.

ஆலய உண்டியல்களில் பெருந்தொகையில் சில்லறை நாணயங்கள் தேங்கிக் கிடப்பதே சில்லறைத் தட்டுப்பாட்டுக்கு மற்றொரு காரணம் என்கின்றனர் சில வங்கி அதிகாரிகள்.

''உண்டியல்களை உடைத்து சில்லறைகளை வெளியே எடுங்கள்'' என்று வேறு அவர்கள் ஆலோசனை கூறியிருக்கின்றனர்.

தேர்தல் சமயத்தில் தங்கள் பிரசுர நோட்டீஸுகளையும் வண்ணப் பிரசுரங்களையும் விமானம் மூலம் தொன் கணக்கில் கொண்டு வந்து குவித்த அரசியல் கட்சிக்காரர்கள் (இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள்) இந்தச் சில்லறை நாணயங்களை விமானம் மூலம் போதிய அளவு தருவிக்க ஏற்பாடு செய்ய முடியாதா?

இந்தச் சில்லறைப் பிரச்சினை அவர்களுக்கு சீரியஸாகப் படவில்லை போலும்!

### மனித உரிமைகளுக்கு பல்கலைத் தலைமைத்துவம்

யாழ். பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகள் அமைப்பு ஒன்றை உருவாக்கி குடாநாட்டு மக்களின் மனித உரிமைகளைப் பேணும் நடவடிக்கைகளுக்கு பல்கலைக்கழக சமூகம் தலைமைத்துவம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் 'மனித உரிமைகளும் ஆயுத முரண்பாடும்' என்ற தலைப்பில் உரையாற்றிய மனித உரிமைகள் ஆர்வலரும் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி முதல்வருமான வணபிதா ஏ.ஜே.பேணாட் அடிகளே இந்தக் கோரிக்கையைப் பகிரங்கமாக விடுத்தார்.

குடாநாட்டில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நீண்ட கால நோக்கிலான மதிப்பீடுகள், ஆய்வுகளைப் பல்கலைக்கழகம் மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் தர்க்க ரீதியான கருத்துக்கள் பல்கலைக்கழகத்திலிருந்து காத்திரமாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கோரினார்.

மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படும் ஒரு பிரதேசத்தில் இயங்கும் யாழ். பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகள் தொடர்பான ஆய்வு ரீதியான எந்தப் பணிகளும் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

கல்வி ரீதியில் கூட இது தொடர்பான கற்கைகள் ஆவணப்படுத்தல்கள், நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்புகளின் செயற்பாடுகள் அங்கு இடம் பெறவில்லை.

கடந்த காலங்களில் இடம்பெற்ற சில கசப்பான சம்பவங்கள் மனித உரிமைகள் பற்றிப் பேசுவதற்குத் தயங்கும் ஒரு நிலையை ஏற்படுத்தியிருந்தாலும் கூட இது விடயத்தில் யாழ். பல்கலைக் கழக சமூகத்துக்கு தவிர்க்க முடியாத பொறுப்பும் கடமையும் உண்டு.

— வலிகாமத்தான்


பாலியல் பலவீனத்திற்கு ரிஷி அஜமாமிச லேகியம்

தேவையில்லை வைகரா நம்பிக்கையுடன் பாலியல் பலவீனத்திற்கும் உடல் சக்திக்கும் ஆண்மைக்கும், வீரிய விருத்திக்கும்

**ரிஷி அஜ மாமிச லேகியம்**

ரூ. 195/- 360/-

**தங்க பஸ்பம் கலந்தது ரூ. 1360/-**

மூல வியாதியா! ரிஷி லேகியம் பாவியுங்கள் உள்மூலம், வெளிமூலம் இவற்றை சுகப்படுத்தும் ரூ. 195/-

ஞானசுந்தர வைத்தியசாலை

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி இலக்கம் : 421398

# மலையகத் தமிழர் நலனுக்கு பொதுக் கூட்டமைப்பு உதயம்

## ஆறுமுகம் மட்டும் வெளியில்; அவரையும் இணைக்க முயற்சி

மலையகத் தொழிலாளர்களினதும் இந்திய வம்சாவளித் தமிழர்களினதும் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவும் அவர்களின் நலன்களைக் காக்கவும் கூட்டுத் தலைமைத்துவம் உதயமாகியிருக்கிறது.

இந்தத் தலைமைத்துவத்துக்கு மலையக தேசிய கூட்டமைப்பு என்று பெயரிடப்பட்டுள்ளது.

பிரதான மலையக தொழிற்சங்கங்களும் சமூக நல அமைப்புக்களும், மாணவர் அமைப்புக்களும் இதில் இணைந்துள்ளன. மலையகக் கல்விமான்களும் இந்த அமைப்பில் இடம் பெற்றுள்ளார்கள்.

ஆனால், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் எம்.பியுமான ஆறுமுகம் தொண்டமான் இந்த அமைப்பில் சேராது வெளியில் நிற்கிறார். அவரையும் இணைத்துக் கொள்ள முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன.

சுந்திரசேகரனுக்கு எதிராக வழக்குத் தொடுத்த காதரும், மயில் சின்னப் பிரச்சினையால் முறுகல் நிலையில் இருக்கும் அய்யாத்துரையும், மனோகணேசனும் மற்றும் எதிர்மாறான கருத்துக்களைக் கொண்ட பல தொழிற் சங்கங்களும் ஒரே கூட்டமைப்பில் இருப்பது மலையகத்தில் நடந்துள்ள ஓர் அதிசயம் என்று வர்ணிக்கப்படுகிறது.

எதிர்மாறான அரசியல் கொள்கைகளையும் போட்டித் தொழிற்சங்கப் போக்குகளையும் கொண்டவர்கள் சமுதாய உணர்வுடன் ஒன்றுபட்டுள்ளனர். ஆறுமுகம் தொண்டமானும் அவ்வாறு செய்ய முன் வருவார் என்றே பலரும் நம்புகிறார்கள்.

மலையக அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றிடையே அதிகரித்து வரும் போட்டா போட்டிகள், பிணக்குகள், பிளவுகள் ஆகியவற்றால் மலையக மக்கள் சார்பாக பேரம் பேசும் சக்தியும் பலமும் இழக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆபத்தான நிலைமைகளைத் தவிர்க்கவே கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.


டி.அய்யாத்துரை

இதை அமைப்பதற்கு முன்னின்று உழைத்து வந்த ஏற்பாட்டுக் குழு உறுப்பினர்களில் ஒருவரான இளம் அரசியல்வாதியும் மேல் மாகாணசபை உறுப்பினரும், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான மனோ கணேசனிடம் கூட்டமைப்புப் பற்றிக் கேட்டோம்:

''தலைமைத்துவப் போட்டியும், தனிமனித ஆதிக்கமும் இன்று மலையகத்தில் பிரிவினை வாதத்தையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்தி உள்ளன. இதனால் இப்போது அமைக்கப்பட்டுள்ள தேசியக் கூட்டமைப்பை வழிநடத்தும் பொறுப்பை தனி ஒருவரிடம் ஒப்படைக்காமல் சக்திமிக்க ஒரு நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பை உருவாக்குவதற்காக இரண்டு ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

முதலாவது கூட்டத்தைத் தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் அய்யாத்துரையும், அகில இலங்கை ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எஸ்.முருகையாவும் கூட்டினர்.

இரண்டாவது கூட்டத்தை மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் எம்.பி. கூட்டினார்.

இந்த ஏற்பாடுகள் கூட சுழற்சி முறையிலேயே செய்யப்பட்டன. இதனால் யார் கூட்டுவது யார் தலைமையில் கூட்டுவது என்ற வாதத்திற்கே இடமில்லாமலாக்கப்பட்டது. இப்படி மனோ கணேசன் தெரிவித்தார்.


மனோ கணேசன்

நல்ல நோக்குடன் மேற்கொள்ளப் பட்டிருக்கும் இம்முயற் சிக்கு எவரும் முட்டுக்கட்டையாக இருக்காமல் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். சந்திரசேகர னிடம் இது பற்றிக் கேட்டோம். அவர் பின்வருமாறு சொன்னார்:-

''அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் இப்படியான ஒரு அமைப்பை உருவாக்கு வதற்கு அழைப்பு விடுப்பார் என்று எதிர் பார்த்து அவருக்கு ஆதரவு வழங்கக் காத்திருந்தோம். நேரம்வரும் போது அழைப்பு விடுக்கப்படும் என அவர் பத்திரிகைகள் மூலம் கூறி இருந்தார்.

அவர் தாம் கூறிபடி அழைப்பு விடுவதற்கான நேரம் வந்து விட்டது. அரசியல் நெருக்கடியும், வறுமையும் மலையகத்தில் தாண்டவமாடுகின்றன. இவற்றிற்கு உடனடியாக ஏதாவது செய்தே ஆக வேண்டும் ஆனால் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் எதுவும் செய்யாமல் இருக்கிறார்.

எல்லோரும் அப்படியே இருந்துவிட்டால் என்ன ஆகும் ? மலையக சமூகத்தின் நலன் காப்பதற்காக பல முரண்பாடு களைக் கொண்ட அமைப்புகள் பலவும் ஒன்று கூடி உள்ளன. ஆறுமுகம் தொண்டமானும் வந்து சேரவேண்டும். கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கி அதன் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளவேண்டும். தனித்து நின்று எதையும் சாதிக்க முடியாது. இது பலரும் கண்ட அனுபவம். உண்மை.

எவரையும் தனிமைப் படுத்தாமல் அனைவரையும் பங்கேற்க வைக்க வேண்டும் என்ற நோக்குடனேயே செயற்குழு அமைப்பது மார்ச் மாதம் வரை பின்போடப்பட்டுள்ளது'' இப்படிச் சந்திரசேகரன் கூறினார்.

தொழிலாளர்தேசிய சங்கத்தலைவர் டி. அய்யாத்துரையிடம் கேட்டபோது அவர் என்ன சொன்னார் தெரியுமா?.

''இந்தியவம்சாவளிப் பேரணி உருவாக்கப்பட்டபோது அதற்கான ஒரு தேர்தல் சின்னத்தைப் பதிவு செய்ய முடியாமல் போய் விட்டது. அதனால் பேரணி சார்பில் போட்டியிட்டோர் தொழிலாளர்தேசிய சங்கத்தின் மயில் சின்னத்தில் போட்டியிட்டனர்.

மயில் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் பின்னர் வந்த நாடாளுமன்றத் தேர்தலில் வேறு கட்சிகளின் சின்னங்களில் போட்டியிட்டனர். இதனால் அவர்கள் தொடர்ந்து எமது மயில் சின்னத்தின் மூலம் கிடைத்த பதவிகளில் இருக்க முடியாது என வாதிடுகிறோம்.

இது தனிப்பட்ட பிரச்சினை ஆனாலும் இப்படிப்பொது நோக் குடன் ஒரு அமைப்பை ஏற்படுத்தும் போது அதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு மனம் விட்டுப் பேசுகிறோம் அதுதான் உண்மையான சமுதாயப்பற்று என்றார் அய்யாத்துரை.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுடன் தொடர்புகொள்ளப் பல முறை முயற்சி செய்தும் முடியவில்லை. அமைச்சரின் செயலாளர்களும், அந்தரங்கச் செயலாளர்களும் அமைச்சர் கூட்டத்தில் இருக்கிறார். பேச்சு வார்த்தையில் இருக்கிறார் என்றே தொலைபேசியில் பதில் அளித்தார்கள். அமைச்சரின் நேரடித் தொலைபேசியோ நெரிசல் காரணமாக தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை என்று பதில் ஒலி தந்தது.

எது எப்படி இருந்த போதிலும் இப்போது கூட்டமைப்பதற்கு அடித்தளம் இடப்பட்டுவிட்டது. இனி உருப்படியாகக் கட்டடத்தை எழுப்ப வேண்டியது மலையக சமுதாயத்தின் மீது பற்றும் பாசமும் உள்ள அனைவரதும் கடமை என்று கூட்டமைப்பு ஏற்பாட்டாளர்கள் ஒட்டுமொத்தமாகக் கூறுகிறார்கள்.

கூட்டமைப்பை உருவாக்குவது சம்பந்தமாக நுவரெலியாவில் 27.01.2001 நடைபெற்ற இரண்டாவது கூட்டத்தில் கலந்து கொண்ட பிரமுகர்களும் அவர்கள் சார்ந்த தொழிற்சங்கங்களும் வருமாறு:-

டி.அய்யாத்துரை - தொழிலாளர் தேசிய சங்கம்;
பெ. சந்திரசேகரன் - மலையக மக்கள் முன்னணி;
எம். சிவலிங்கம் - மலையக தொழிலாளர் முன்னணி;
ஆர்.எம். கிருஷ்ணசாமி - விவசாயத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ்;
ஏ.முத்துலிங்கம் - ஐக்கிய தோட்டத் தொழிலாளர் யூனியன்;
எஸ். முருகையா - அகில இலங்கை ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ்;
ஆர். தங்கவேல் - இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ்;
எம்.எஸ். ஜெகநாதன் - அகில இலங்கை ஐக்கிய சேவையாளர் காங்கிரஸ்;
மனோகணேசன் - ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்;
ஆர். தர்மலிங்கம் - அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்;
ஏ.அருளப்பன் - தொழிலாளர் முன்னணி;


ஆறுமுகம்

வி. புத்திரசிகாமணி- இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம்;
இராஜகுலேந்திரன் - மத்திய மாகாணசபை உறுப்பினர் - சட்டத்தரணி;
எஸ். பிரபாகரன் - மலையக மாணவர் / இளைஞர் பொது மன்றம்;
விஜயசந்திரன் - விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம்;
பி. இராஜதுரை - சட்டத்தரணி;
செல்வி.ஆர் பரிமளா - ஐக்கிய சேமநல நிறுவனம்;
ஏ.கே.வேலவன் - ஊவா தொழிலாளர் உதவி நிறுவனம்;
பிலிப் இராமையா - அட்டன் சமூகநல நிறுவனம்;
என். கருணாகரன் - பிரிட்டோ நிறுவனம்;
கௌரி பழனியப்பா - பல்கலைக்கழக விரிவுரையாளர்;
ஏ. பிரான்சிஸ் - கொட்டகலை சமூக சேவைகள் மன்றம்;
எஸ். மோகன் - ஐக்கிய தொழிலாளர் அமைப்பு;

— இரா.புத்திரசிகாமணி

**மலையகக் கண்ணோட்டம்**

# ஆள் மாறாட்டத்தால் நட்டஈடு பெற முடியாமல் திண்டாட்டம்!

இடைத்தரகர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி ஆள்மாறாட்டம் செய்து குவைத் சென்ற மலையக இளம் பெண்கள் தமக்குரிய நஷ்ட ஈட்டைப் பெற முடியாமல் தவிக்கின்றனர்.

மோசடி கண்டுபிடிக்கப்பட்டதால் அவர்களுக்கு வழங்குவதற்கு என்று வைக்கப்பட்டிருக்கும் சுமார் ஒன்பது கோடி ரூபா மீண்டும் திருப்பி அனுப்பப்படவுள்ளது.

தொழில் அமைச்சின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக உயர்அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

சிறிது காலத்துக்கு முன்னர் குவைத் மீது ஈராக் இராணுவத் தாக்குதல் மேற்கொண்டதன் எதிரொலியாக, அங்கு பணிப்பெண்களாக கடமையாற்றிய பல்லாயிரம் இலங்கை யுவதிகள் உழைப்பையும் ஊதியத்தையும் இழந்து உடுத்த உடையுடன் நாடு திரும்பினர்.

பாதிக்கப்பட்ட நபர்களுக்கு என ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஒதுக்கிய உதவிப்பணத்தில் தலா ஒரு லட்சம் ரூபா முதல் 2 1/2 லட்சம் ரூபா வரை நஷ்ட ஈடாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் வழங்கியுள்ளது.

நஷ்ட ஈடு பெற உரிமையுள்ளவர்களின் பெயர், பாஸ்போர்ட் இலக்கம் முதலானவை தேசியப் பத்திரிகைகளில் பலமுறை விளம்பரப்படுத்தப்பட்டன. சம்பந்தப் பட்ட நபர்கள் தமது தேசிய அடையாள அட்டை, பாஸ்போர்ட், கிராமசேவகரும் பிரதேச செயலாளரும் உறுதிப்படுத்திய அத்தாட்சிச் சான்றிதழ் என்பவற்றுடன் வந்து நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ளும் படி கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

சுமார் 450 பேருக்கு மேல் இன்று வரை வந்து நஷ்ட ஈட்டைப் பெறாமல் இருக்கின்றனர். இவர்களுக்குரிய பணம் திருப்பி அனுப்பப்படவுள்ளது என்றும் அந்த அதிகாரி கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக வெளிநாட்டு முகவர் நிறுவனங்கள் சிலவற்றுடன் தொடர்பு கொண்டபோது பல திடுக்கிடும் உண்மைகள் வெளிவந்துள்ளன.

கிராமப் புறங்களிலும், பெருந்தோட்டங்களிலும் இருந்து வெளிநாடு செல்வதற்குப் பெருந்தொகையான இளம் பெண்கள் இங்கு வருகின்றனர். இவர்களிடம் தேசிய அடையாள அட்டையோ, பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களோ இருப்பதில்லை. இதனால் இவர்களை நாம் திருப்பி அனுப்பிவிடுகின்றோம்.

கொழும்பிலும் வெளி இடங்களிலும் உபமுகவர்களாக செயல்படுபவர்கள் தோட்டப் புறத் தமிழ் யுவதிகளையும் கிராமப்புற சிங்கள யுவதிகளையும், தமக்குத் தெரிந்தவர்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் பிறப்புச் சான்றிதழ் தேசிய அடையாள அட்டை என்பனவற்றைப்பயன்படுத்தி முஸ்லிம் பெயர்களில் பாஸ்போர்ட் எடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்பிவிடுகின்றனர்.

இவ்வாறு ஆள் மாறாட்டம் செய்து வேறு பெயர்களில் குவைத் சென்ற அப்பாவித் தமிழ், சிங்கள யுவதிகளே இந்த நஷ்ட ஈட்டைப் பெறமுடியாமல் இருக்கின்றனர்.

வெளிநாடு செல்லும் ஆசையில் 6000/— ரூபா முதல் 15,000/— ரூபா வரை தரகர்களுக்குக் கொடுத்து விட்டுக் குவைத் சென்ற இவர்கள் வெறுங்கையுடன் தான் வந்தனர்.

இவர்களின் உழைப்பை நம்பி இங்கே இருப்பவர்களும் ஆயிரக்கணக்கில் கடன் பட்டு உள்ளனர்.

இப்படிக் கஷ்டமான நிலையில் உள்ள பெண்களுக்கு தோட்ட நிர்வாகங்களும் மீண்டும் வேலை வழங்க மறுத்து விடுகின்றன.

காரணம் என்ன?

கம்பனிகளின் அறிவித்தலின் படி தொடர்ந்து முப்பது நாட்களுக்கு மேல் எந்த விதமான முன் அறிவித்தலுமின்றி வேலைக்கு வராவிட்டால் அவர்களுக்கு மீண்டும் தொழில் வழங்கக் கூடாது என தோட்ட நிர்வாகங்களும் கைவிரித்து விடுகின்றன.

வெளிநாடு செல்பவர்கள் தமது பிரயாண ஏற்பாடு கள் பற்றி எவருடனும் கலந்து ஆலோசிப்பதில்லை. தரகர்களின் உபதேசத்தின் படி மிகவும் இரகசியமாகவே வைத்துக் கொள்கின்றனர். அதனால் இன்று அவர்களின் கைக்கு எட்டியது வாய்க்கு கிட்டவில்லை.

இவர்களுக்கு சரியான வழிகாட்டல் இல்லை. தெரியாத விடயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆர்வமும் இல்லை. தான் செல்வது தெரிந்தால் பக்கத்து வீட்டுக்காரியும் சென்று பணக்காரியாகி விடுவாளோ என்ற பொறாமைக் குணம் வேறு. படித்தவர்களினதும் விடயம் தெரிந்தவர்களினதும் வார்த்தைகளை விட தரகர்களின் பேச்சையே பெரிதும் நம்பிவிடுகிறார்கள். அதன் விளைவை இப்போது அனுபவிக்கிறார்கள்.



# தாராள கவர்ச்சிக்கு மும்தாஜ் கூறும் காரணம்

டி. ராஜேந்தரின் 'மோனிஷா என் மோனாலிஸா'வில் அறிமுகமாகியவர் மும்தாஜ். காதலுக்கு பரிசாக தாஜ்மஹாலையே தந்த சாஜஹானின் காதலி மும்தாஜின் பெயர் இவருக்கு.

அதுமட்டுமல்ல டி.ராஜேந்தர் என்ற மோதிரக் கையால் குட்டுப்பட்டவர். அவரின் அறிமுகம்.

இதனால் மும்தாஜ் அறிமுகமாகும் போதே பெரிதாக விளம்பரப் படுத்தப்பட்டது.

தனது தாராள மயமாக்கல் கொள்கையினால் ரசிகர்களை மட்டுமல்ல தயாரிப்பாளர்களே பாராட்டும் அளவுக்கு கவர்ச்சியை அள்ளி வீசக்கூடியவர்.

'குஷி' படத்தில் இடம்பெற்ற 'கட்டிப்புடிடா கட்டிப்புடிடா' என்ற ஒரே பாடல் மூலம் உலகத் தமிழ் பேசும் இளைஞர்களின் தூக்கத்தைக் கெடுத்தவர் மும்தாஜ்.

சமீபத்திய படங்களின் மூலம் விரகதாப காட்சியா கூப்பிடு மும்தாஜை என்ற அளவுக்கு மும்தாஜின் கவர்ச்சிப் புகழ் பரவியிருக்கிறது.

இரண்டு ஹீரோயின் சப்ஜெக்டில் கவர்ச்சிக்காக மும்தாஜ் கட்டாயம் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்.

கவர்ச்சி நாயகியாக தொட்டுக் கொள்ள ஊறுகாயாக நடித்து வந்த மும்தாஜ் 'பட்ஜெட் பத்மநாபன்' மூலம் நடிக்கவும் தெரிந்தவர், டி.ராஜேந்தரின் அறிமுகம் சோடை போகாது என்று நிரூபித்தார்.

இவர் நடித்த 'லூட்டி' தாராளமான கவர்ச்சிகளை உள்ளடக்கி பொங்கல் ரிலீஸாகியிருக்கிறது.

'லூட்டி' படத்தில் கவர்ச்சிக்கெனவே இன்னொரு நாயகியாக்கப்பட்டிருக்கிறார்.

படம் முழுக்க ஆடைக்குறைப்பு செய்து ஒரு பாடல் காட்சியில் ஓவர் அக்டிங் செய்திருக்கிறார். இதில் நீச்சல் உடைக்காட்சிகளும் உள்ளடக்கம். ஆனால் இன்றைய நிலையில் அந்த பணியை கதாநாயகிகளே செய்து விடுகின்றனர். கதாநாயகிகள் கவர்ச்சிக்கு அளவு கோல் வைத்தே வெளிப்படுத்து வதுண்டு. ஆனால் இதற்கு விதிவிலக்காக மும்தாஜ் திகழ்கிறார்.

**'சரி இப்படி நடிப்பதில் இவர் கவலைப் படவில்லையா? சிணுங்கலில் 'சின்ன சிலுக்கு' என்று சொல்கிறார்களே!'' இதைப் பற்றி மும்தாஜ் என்ன சொல்கிறார்? கேட்போமா!**

'' இல்லை நான் கவலைப் படவில்லை. இது என் தொழில். நான் அப்படி நடிக்க மறுத்தால் அதில் வேறு ஒரு நடிகை நிச்சயம் நடிப்பார். நான் மும்பைக்காரி தமிழ் ரசிகர்களைப் பொறுத்தவரை இப்போதைக்கு என் முகவரி 'கட்டிப்புடிடா..... கட்டிப்புடிடா' தான்.

'மோனிஷா என் மோனாலிஸா' மூலம் என்னைத் தமிழிற்குக் கொண்டுவந்தவர் டி.ராஜேந்தர் ஸார்.

இந்தப்படத்திற்குப் பிறகு வந்தது 'மலபார் போலீஸ்' இதற்குப் பிறகு வாய்ப்புகள் வரவில்லை. மும்பைக்கு விமானம் ஏற நினைத்த போது தான் சுந்தர்.சியின் 'உனக்காக எல்லாம் உனக்காக' படத்தில் ஒரு பாடலுக்கு ஆடும் படி கேட்டனர்.

ஒத்துக் கொண்டு நடித்தேன். பின்னர் சூர்யா ஸார் 'குஷி' பாடல் காட்சியைப் பற்றிச் சொன்னார். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தினேன். ஒரே பாட்டு என் வாழ்க்கையையே மாற்றி விட்டது. இப்போது எனக்கு வலுவாக வாழ்வளித்துக் கொண்டிருக்கிறது தமிழ்த்திரையுலகம்.

'ஸ்டார்', 'மிஸ்டர் நாரதர்' என்றுபிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறேன்''

**கே: ஆனாலும் உங்களுடைய கரெக்டரில் ஓவரான கவர்ச்சி இருப்பதாகப் பேசப்படுகிறதே.**

ப: எனக்கும் கரெக்டர் ஆர்ட்டிஸ்ட் என்று பெயரெடுக்கணும் என்று தான் ஆசை. ஆனால் என்ன செய்வது வரும் வாய்ப்புகளையும் தவறவிட முடியாதே. 'குஷி' படத்தில் நெருக்கமாக நடித்ததனால் கண்டபடி எழுதுவதற்கும் பேசுவதற்கும் ஆளாகி விட்டேன். ஆபாசம் என்பது பார்க்கும் விதத்தைப் பொறுத்து இருக்கிறது. இப்படி விமர்சனம் செய்வதைப் போலிருந்தால் சென்ஸார் போர்ட் எப்படி அனுமதித்திருக்கும் சொல்லுங்க. அந்தப் படத்தைப் பொறுத்த வரைக்கும் நான் இளமையான, துள்ளல் நிறைந்த துடிப்பான பெண் அதற்கேற்றாற்போலத் தான் காட்சி அமைக்கப்பட்டிருந்தது. நானும் டைரக்டர் சொல்வது போல் நடித்தேன்.

**கே: பாடல் காட்சிகளில் உங்களது அதிக சிணுங்கல் விரசத்தை உண்டு பண்ணுவதாக குற்றச்சாட்டு உள்ளதே?**

ப: சிணுங்குவதும் முணங்குவதும் பொண்ணுங்க ஸ்பெஷலாச்சே. நானும் பொண்ணுதானே!

**கே: உங்களுக்குப் போட்டி ராதிகா சௌத்ரி என்று ஒரு செய்தி நிலவுகிறது அது பற்றி...?**

ப: அதைப்பற்றி நான் சிந்திக்கவில்லை. எனது கவனம் எனது தொழிலில் மாத்திரமே.

**கே: உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வு எது?**

ப: ஷாப்பிங்சென்டர், ஏர்போர்ட்டுகளில் என்னைப் பார்க்கும் ரசிகர்கள் 'கட்டிப்புடிடா கட்டிப்புடிடா' என்று சொல்வது.

**கே: எதற்காவது கவலைப்படுவதுண்டா?**

ப: என்னுடைய முடி நீளமானது. நடிக்க வந்த சமயத்தில் மேக்கப் டெஸ்ட் எடுக்கும் போது அப்படியே வெட்டித் தள்ளி விட்டார்கள். அதை இப்போது நினைத்தாலும் கவலையாக இருக்கிறது.

**கே: நெருக்கமான காட்சிகளில் நடிக்கும் போது என்ன நினைக்கிறீர்கள்?**

ப: எதுவுமில்லை. பத்துப்பேர் முன்னிலை யில் காதல் செய்யும் போது டைரக்டர் சொல்வதன்படி சரியாகச் செய்யவே நினைப்பேன்.

**கே: எதிர்கால இலட்சியம்?**

ப: பெரிதாக எதுவுமில்லை. இப்போதைக்கு ரசிகர்களை மகிழ்விப்பது தான் முக்கியம். என் முகத்தை போஸ்டரில் பார்த்து விட்டு தியேட்டருக்கு வரும் ரசிகர்களை ஏமாற்ற முடியுமா?

**கே: நீங்கள் இன்னும் ஹீரோயினாக எந்தப்படத்திலும் நடிக்க வில்லையே. இரண்டாவது ஹீரோயினாகத்தானே நடித்துக் கொண்டிருக்கிறீர்கள்?**

ப: இதற்கு நான் என்ன செய்ய முடியும். எனக்கு வரும் வாய்ப்புக்கள் அப்படித்தான் வருகிறது. வரும் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்கிறேன். நான் மட்டுமா? சில நம்பர் வன் நடிகைகள் கூட இரண்டாவது கதாநாயகியாக நடிக்கிறார்களே. இப்பொழுது அப்படிப்பட்ட கதைகள் தான் ஹிட்டாகிறது.

ஷாம்



பிரசாந்த் - மும்தாஜ்
படம் - ஸ்டார்



## விருதா? விருந்தா!

1999 ஆம் ஆண்டுக்கான விருதுப் பட்டியலை தமிழ் நாட்டரசு அறிவித்துள்ளது.

ஆனால் இந்த விருதுப் பட்டியல் சந்தோஷத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக பலருக்கு அதிருப்தியை அளித்துள்ளதாம்.

விருது தகுதியினடிப்படையில் தான் வழங்கப்பட்டதா? அல்லது.... எதனடிப் படையில் வழங்கப்பட்டது என்பதை யாராலும் கூறமுடியாதுள்ளது.

சிறந்த நடிகர் விருது 'படையப்பா' படத்தில் நடித்ததற்காக ரஜினிகாந்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ரஜினி சிறந்த நடிகர் அதை ஒப்புக் கொள்கிறோம். ஆனால் 'படையப்பா' வணிகரீதியான படம். இதில் நடித்தமைக்கு விருது கொடுத்தமையைத்தான் சகிக்க முடியாதிருக்கிறது என்கின்றனர் அதிருப் தியாளர்கள்.

ரம்யா கிருஷ்ணனுக்குச் சிறப்பு விருது கொடுக்கப்பட்டுள்ளது. வில்லன் நடிகர் -ரகுவரன், நகைச்சுவை நடிகர் - விவேக், கதாசிரியர் - ராஜகுமாரன், இசையமைப்பாளர் - ரஹுமான், பாடலாசிரியர் - வைரமுத்து தெரிவுகள் ஓகே.

நடிகர் திலகம் விருது- கமல்ஹாசனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. தரமான தெரிவுதான்.

ஆனால் எம்.ஜி.ஆர். விருது விஜய்க்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. கமலோடு ஒப்பிடும்போது விஜய் நேற்று முளைத்த காளான் அப்படியிருக்க விஜய் இந்த விருதுக்கு தகுதியானவரா? என்ற கேள்வி எழுகிறது. நாலைந்து வெற்றிப்படங்கள் கொடுத்தால் அவர் எம்.ஜி.ஆர் ஆகிவிடுவாரா? என்று பல கேள்விகள் எழுந்துள்ளன.

விருது என்பது அவரவர் தகுதியைப் பொறுத்து வழங்கப்பட வேண்டியதே. விருது விருந்தல்ல உதவிகளைத்தான் சலுகை அடிப்படையில் வழங்க முடியும். விருதுகளை அல்ல. இனிவரும் காலங்களிலாவது தமிழக அரசு இதனைக் கவனத்தில் கொள்ளுமா?என்று கேட்கின்றனர். அரசு பதில் கூறுமா?



## விந்தியா-மணிமோகன் காதல் அம்பலம்

'சங்கமம்' படத்தில் அறிமுகமாகி 'கண்ணுக்கு கண்ணாக', 'பூங்குயிலே' ஆகிய படங்களில் நடித்தவர் விந்தியா.

கலை நிகழ்ச்சிக்கென அடிக்கடி சிங்கப்பூர் பறந்தார் விந்தியா. சிங்கப்பூர் ஏர்போர்ட்டில் பார்க்கிங் கண்ட்ராக்ட் எடுத்திருப்பவர் மணிமோகன்.

ஏர்போர்ட்டில் இருவரது கண்களும் சந்திக்கவே காதல் மலர்ந்திருக்கிறது. சென்னை வந்தால் விந்தியா நடிக்கும் ஷூட்டிங்குகளுக்கு அழைப்பிதழ் இல்லாம லேயே ஆஜராகி விடுவாராம் மணிமோகன்.



## அழகிய லைலா சேலையில் ஸ்டைலா?

இதுவரை மாடர்ன் டிரஸ்களில் நடித்து வந்தவர் லைலா. இப்போது முரளியுடன் ஜோடி சேரும் 'காமராசு' படத்தில் 'கண்டாங்கி' எனப்படும் கிராமத்துச் சேலை கட்டுகின்றார்.

"என்னை 'ஷாக்லெட் பேபி' என்று எல்லோரும் கிண்டல் பண்றாங்க. ஆனா 'காமராசு' படம் வெளிவந்ததும் இனி ஷாக்லெட் பேபின்னு சொல்ல மாட்டாங்க. ஏன்னா சேலையில் நான் பெரிய பொண்ணாத் தெரிகிறேனாம்" என்று சிரித்துக் கொண்டே கூறுகிறார்.




'ப்ரெண்ட்ஸ்' படத்தில் தேவயானி மாடர்ன் டிரஸ் அணிந்து நடித்திருக்கிறார்.

தேவயானி என்றாலே ஹோம்லியான நடிகை தான் என்ற முத்திரை விழுந்து விட்டது.

இயற்கையில் மாடர்ன் டிரஸ்களில் காஷுவலாக இருப்பவர்தான். ஆனாலும் படங்களில் கிடைத்த கரெக்டர்கள் ஒரே மாதிரியானவை.

எப்போதோ தன்னை வேறுபடுத்திக் காட்ட அவர் நினைத்தாலும் 'ப்ரெண்ட்ஸ்' படத்தில் தான் அது கைகூடியிருக்கிறது.

இந்த முயற்சிக்கு வரவேற்பு கிட்டுமா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

## மண் வாசனை போய் மீன் வாசனை வந்தது



உமா - மனோஜ்

மண் மணம் கமழும் கதைகளை இயக்குவதில் வல்ல பாரதி ராஜா தந்த பொங்கல் பரிசு 'கடல் பூக்கள்'

முரளியுடன் தன் மகன் மனோஜையும் சேர்த்து களமிறக்கி விட்டிருக்கிறார்.

இப்படத்தில் பிரதிக்ஷா, உமா (சுமித்ராவின் மகள்) சிந்து என்று மூன்று நடிகைகளை அறிமுகப்படுத்தியுள்ளார்.

முழுக்கமுழுக்க கடலும் கடல்சார்ந்த பகுதிகளும் படமாக்கப்பட்டுள்ளன. மண்வாசனையை விட்டுவிட்டு இம்முறை மீன் வாசனையைக் கொண்டு வந்திருக்கிறார் பாரதிராஜா.

(ம்.... பூ விற்ற காசு மணக்குமா? மீன் விற்ற காசு நாறுமா? பணம் வந்தால் சரி)

## திரைத் துணுக்குகள்

* சேரனின் உதவியாளரான பாலு 'சப்தம்' என்ற படத்தை இயக்குகிறார். அம்சவர்தன், ஸ்ரீமன், ரமேஷ்கன்னா ஆகியோர் நடிக்கிறார்கள்.

* பெண் தேடுகிறார் வையாபுரி என்று எமது கடற்ரொளி சினிமா பகுதியில் செய்தி வெளியிட்டிருந்தோம் அல்லவா? இப்போது வையாபுரிக்கு பெண் கிடைத்து விட்டார். மணப் பெண்ணின் பெயர் — ஆனந்தி.

* மாதவன் — ஸ்நேகா இணைந்து நடிக்கும் படம் 'பார்த்தாலே பரவசம்' இதில் ரஜினி, கமல் இருவரும் கௌரவ வேடத்தில் நடிக்கப் போகின்றனர்.

* இரண்டு அக்காமார், தங்கை, அப்பா — அம்மா. விந்தியாவின் குடும்பம் பெரியது.

## கலக்கல் கவர்ச்சியுடன் வருகிறது குருக்ஷேத்திரம்



ரகுவரன் - நாகார்ஜுன்

ஸ்ரீ ராகவேந்திரா மூவி இன்டர் நேஷனல் என்ற நிறுவனம் சுந்தரத் தெலுங்கில் 'ஆசாத்' என்ற பெயரில் தயாரித்து ஆந்திராவில் வெற்றி நடைபோட்ட படம் விரைவில் தமிழ்பேச வருகிறது.

இதற்கு 'குருக்ஷேத்திரம்' என்று பெயரிட்டிருக்கிறார்கள். வெங்கடேஷ் — ரம்பா நடிப்பில் 'கணேஷ்' என்ற வெற்றிப் படத்தைத் தந்த திருப்பதி சாமி டைரக்ட் செய்கிறார்.

நாகார்ஜுன், சௌந்தர்யா ஜோடி சேர்கிறார்கள்.

குஷியில் 'மெக்கரீனா' பாடலுக்கு ஆடிய மும்பை நெட்டைக்கால் அழகி ஷில்பா ஷெட்டியும் இப்படத்தில் இரண்டாவது ஹீரோயினாக நடிக்கிறார்.

இதில் தேவா என்ற முக்கியமான வில்லன் கரெக்டரில் ரகுவரன் தோன்றி நடிப்பில் அசத்தியிருக்கிறார்.

தேவா — இந்து முன்னணித் தலைவர் என்ற வேடத்திடி உலவும் பாகிஸ்தானின் பயங்கரமான உளவாளி தாவுத் என்பவன்.

இதைக் கண்டுபிடிக்க வருகிறார். ஹீரோ நாகார்ஜுன் இவருக்கு பத்திரிகை நிருபர் சௌந்தர்யா உதவுகிறார். அதிரடி சண்டைக் காட்சிகளும் இடம் பெறுகிறது. தெலுங்கில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்ற இப்படம் தமிழிலும் வெற்றி பெறும் என்று நம்புகின்றனர்.



நாகார்ஜுன் - சௌந்தர்யா



## திரை மறைவில்



ஆயுதத்தை படையாகக்கொண்ட படத்தில் அறிமுகமாகியிருக்கிறார் சூப்பரான 'ஜா' நடிகை. வந்த வேகத்திலேயே வாய்ப்பு வேட்டையில் இறங்கிவிட்ட அம்மணி கீ போர்ட் வாசிக்கத் தெரியும், நடனம் தெரியும் என்று ஏகப்பட்ட 'தெரியும்'களை சேமிப்பில் வைத்திருக்கிறார். ஆனால் முத்தம் கொடுக்கமட்டும் தெரியாதாம். முத்தக் காட்சியில் நடிக்கமாட்டேன் என்று கூறியிருக்கிறார். (ஒரு படம் தானே நடித்திருக்கிறார். உடைகளின் தாராள மயக்கொள்கையை விரைவில் அறிவிப்பார்)

**

கதாநாயகனாக நடித்துக் கொண்டே கலை நிகழ்ச்சிகளும் செய்து பணம் சம்பாதித்துக் கொண்டிருப்பவர் மலையூர் மம்பெட்டியான தந்தைக்குலம். வெளிநாட்டுத் தமிழர்களின் இதயங்களில் இருக்கைகள் செய்து மகனை அமரவைத்தவர். இப்போது கங்காரு தேசத்துக்கும் வழக்கம் போல் மகனை மடியில் கட்டிக் கொண்டு பறக்க இருக்கிறார்.

அதுமட்டுமா? ஜோதிகா, தேவயானி, ரம்யாகிருஷ்ணன், கௌசல்யா, சுவலட்சுமி, மகேஸ்வரி, மந்த்ரா என்று முன்னணி கதாநாயகிகளைக் கட்டிப்பிடித்து மேடையில் பாடி ரசிகர்களின் வயிற்றெரிச்சலை வேறு கொட்டிக் கொள்ளப்போகிறார் மகனான இளவரசன்.

**

கனமான பாத்திரங்களில் நடிக்கா விட்டாலும் ரசிகர்களின் இதயத்தில் இனிமையான இடத்தைப் பெற்றவர் மந்தார நடிகை.

கம்பியூட்டர் கற்றுவரும் கையோடு சினிமா வாய்ப்பும் தேடி வருகிறார். எல்லோரும் அம்மன் வேடங்களில் நடிக்கிறார்கள் என்பதால் மந்தாரத்துக்கும் ஆசை ஏற்படவே, பக்திப்படங்களுக்குப்பெயர் பெற்ற நாராயண டைரக்டரிடம் வாய்ப்புக் கேட்டுத்தூது அனுப்பியிருக்கிறார். ஆனாலும் பலனில்லை. "வாய்ப்பு தராவிட்டாலும் பரவாயில்லை. காரணம் சொல்லுங்கள்" என்று மந்தாரம் கெஞ்சியிருக்கிறார்.

வஞ்சியொருத்தி கெஞ்சினால் டைரக்டர் மிஞ்சுவாரா? அவரது உடல்வாகு அம்மன் வேடத்திற்குப் பொருத்தமில்லை என்றும் வேறு படத்தில் வாய்ப்புத் தருவதாகவும் கூறி அனுப்பி வைத்திருக்கிறார்.

**

தொங்கு தோட்டத்தின் பெயரைத் தன் பெயராகக் கொண்ட கவர்ச்சி நடிகைக்கு சென்ற ஆண்டு சுக்கிரதிசை. ஒரு பாடலுக்கு கவர்ச்சி ஆட்டம் போட்டே கல்லாவை நிறைத்து விட்டார்.

**

ஸ்லிம் 'ரன்' தொப்புள் காட்டாமல் நடித்த ஒரே ஒரு படமென்றால் அது வெற்றி நடிகருடன் ஜோடி சேர்ந்த ப்ரியத்துக்குரிய படம் தான்.

படத்தின் ஆரம்பத்திலேயே இயக்குனரிடம் அம்மணி போட்ட அன்புக் கட்டளை ஒரு இடத்திலும் அதிக கிளாமராக காட்டக்கூடாது என்பது தானாம்.

இனி படங்களில் தொப்புள் காட்டி ஆடுவதில்லை என்று முடிவுக்கு வந்திருக்கிறார்.

# சிவப்பு நிறப் பூச்சட்டை

அவள் பெயர்?

தெரியாது.

அவள் முகவரி?

தெரியாது. ஆனால் புத்தூர் பஸ்தரிப்பு நிலையத்தில் நின்று பஸ் ஏறுவாள்.

அவள் தோற்றம்?

வசீகரமான தோற்றம். பொது நிறம். என்னை வெகுவாகக் கவர்ந்த நிறம்.

அநேகமாக சிவப்பு நிறப் பூக்கள் மஞ்சள் பின்னணியில் அமைந்திருக்கும் சட்டையை அணிவாள்.

அது அவளுக்கு மிகவும் விருப்பமான நிறமுள்ள சட்டையாக இருக்கலாம் அல்லது பிரயாணத்திற்கு வசதியான சட்டையாக இருக்கலாம்.

உயரம் சாதாரண பெண்களின் உயரத்தை ஒத்தது. என்னை மட்டுமல்ல எவரையும் கவர்ந்துவிடும் தோற்றம்.

பஸ் புத்தூர் பஸ் தரிப்பிடத்தில் வேகத்தைக் குறைக்க அவள் ஏறிக்கொண்டாள். என்மனம் நிறைவடைந்ததனை உணர முடிந்தது. ஆனால், ஏன் என்பது புரியவில்லை.

நான் அவளைக் காதலிக்கிறேனா? இல்லை. நிச்சயமாக இல்லை. நான் அவள் அழகை ரசிக்கிறேனா? அப்படித்தான் இருக்கவேண்டும். திடமாகப் பதில் சொல்ல என்னால் முடியவில்லை.

நான் அமர்ந்திருந்த இருக்கையில் இன்னுமொரு ஆள் அமரலாம். ஆனால், அவள் எனக்கருகே வந்து அமராமல் கைப்பிடியை பிடித்தபடி நின்றிருந்தாள்.

ஏன் அவள் என்னருகே அமரவில்லை? வெட்கமா? இருக்கலாம்.

என்னருகில் அமர்ந்துகொள்ள இடமிருப்பதை அவள் கவனிக்க வில்லையா? இருக்கலாம். ஆனால் அவள் என்னருகே அமர வேண்டுமென என் மனம் எதிர்பார்த்தது. காரணம் மட்டும் தெரியவில்லை.

நீர்வேலியில் பஸ் நின்ற போது ஏறிய ஒரு கிழவி எனக்கருகே இருந்த இடத்தை அபகரித்துக் கொண்டாள். அந்தக் கிழவி மீது எனக்கு அளவுகடந்த வெறுப்பு ஏற்பட்டது. அதற்கும் காரணம் தெரியவில்லை.

அழகி பஸ் கண்ணாடிக்கு வெளியே பார்வையைச் செலுத்தினாள், நான் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். பஸ் வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது.

நான் ஏன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தேன்? எனக்குத் தெரியாமல் என் மனம் அவளை விரும்புகிறதா? அல்லது ஒவ்வொரு சாதாரண ஆண் பிறப்புக்களுக்குமுரிய காம உந்துதலா? விடைகாண முடியாத வினா. வினாவுக்கான விடைகளே வினாவாகி நிற்கின்ற புதிர்.

அவள் முகவரியைத் தேடி ஏன் நான் போகவில்லை?

ஏன் நான் போக வேண்டும்? அவள் வேலை செய்கிறாளா? அப்படியாயின் எங்கே? அவள் வேலை செய்கிறாள் என்பதைப் பற்றியோ அவள் வேலை செய்யும் இடத்தைப் பற்றியோ நான் அறிந்துக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன? எனக்கேன் தேவையற்ற வேலை? நானே எனக்குள் முரண்பட்டுக்கொண்டேன்.

அவள் ஏன் கடைசி பஸ்ஸிலேயே வதிவிடம் திரும்புகிறாள்? எவ்வளவு ஆபத்துக்கள் காத்திருக்கின்றன? கோரப்பற்களுடன் கடித்துக் குதறிவிடக் காத்திருக்கும் இரத்தக் காட்டேறிகள், எறிமாடன்கள், சுடலைமாடன்கள் இன்ன பிற துர் தேவதைகள்.

அவள் ஏன் இவற்றினால் வரக்கூடிய ஆபத்துக்களை அறிந்திருக்கவில்லை? எனக்குள் மீண்டும் மீண்டும் வினாக்கள் அவள் பற்றியவையாக எழுந்தவண்ணமிருந்தன.

"முத்திரைச் சந்தி டிக்கெட் எல்லாம் இறங்குங்கோ" நடத்துநரின் குரல் என் கவனத்தை கட்டாயப் படுத்தி திசைதிருப் பியது. நான் அவளை மீண்டும் கண்களில் நிரப்பியபடியே இறங்கிக்கொண்டேன்.

***

ஞாயிற்றுக் கிழமை ஓய்வாக இருந்தேன். என் பார்வை ஜன்னலுக்கு வெளியே சென்றது. அது வேலியில்லாத நிலம். அந்த நிலத்தில் இப்போது ஒரேயொரு மாமரமும் ஒரு கட்டடத்தின் இடிபாடுகளும் மட்டுமே எஞ்சியிருந்தன.

அந்த நிலம் செல்லப்பா என்பவருக்குச் சொந்தமானதாக இருந்ததாம். அந்த வளவினுள் பெரிய வீடும் பூங்கனிச் சோலையும் இருந்ததாம்.

செல்லப்பா தாத்தா (இப்படித்தான் அம்மா அவரை அழைத்துக்கொள்வாள்) வசித்து வந்த வளவுக்கு பக்கத்து வளவுக்காரன் தாத்தாவின் வளமான நிலத்தை அடாத்துப்பண்ணி அபகரித்திருந்தானாம்.

தாத்தா சட்ட நுணுக்கம் தெரிந்தவராம். அதுவும் காணி விடயங்களில் எக்ஸ்பேர்ட்டாம். அதனால் பக்கத்துக் காணிக்காரனால தாத்தா இருக்கும்வரைக்கும் ஒண்டும் செய்யேலாமப் போச்சுதாம்.

தாத்தா செத்த பிறகு தாத்தாவின் வழித்தோன்றல்கள்

**சுடர் ஒளி சிறுகதை**

கனபேர் காணி தங்களுடைய சொத்து எண்டு பக்கத்துவீட்டுக்காரனுக்கு எதிராநிண்டினம். கடைசியில அவையும் தோத்துத்தான் போச்சினம்.

பக்கத்துக் காணிக்காரன் தாத்தாவின்ர வழித்தோன்றல்களில ஒருத்தரைத் தவிர எல்லாரையும் விலைக்கு வாங்கிப்போட்டான். ஆனால் அந்த ஒருத்தர் மட்டும் அந்தளவுக்கு தனக்கும் தன்னைச் சார்ந்திருக்கிறவைக்கும் சொந்தமெண்டு இப்பவும் சொல்லிக்கொண்டு நிற்கிறார்.

அந்த ஒருவரால பக்கத்துக் காணிக்காரனுக்கு பெரிய தலையிடி. கடைசியில இப்ப அந்த ஒருவரும்



கண்காணாத இடத்தில காணியும் கவனிப்பாரில்லாமல் வந்தவன் போனவனுக்கெல்லாம் சொந்தமாப்போச்சு" இவ்வளவும் அம்மா சொன்ன தகவல்கள்.

செல்லப்பா தாத்தாவின் காணியினுள் நின்ற மாமரம் நிறையக் காய்த்திருந்தது. அவர்கள் வரிசையாக வீதியிலிருந்த குப்பை கூழங்களைக் கிளறி முடித்துவிட்டு தாத்தாவின் வளவினுள் நுழைந்தனர். மாமரத்தின் மாங்காய்களைக் காட்டி தமக்குள் ஏதோ பேச ஆரம்பித்தனர்.

பின்னர் மாங்காய்களை ஆளுக்கொன்றாய் பறித்துக் கொண்டனர். அடுத்து சிலர் மாங்காய்களைத் தங்கள் கோரப் பற்களால் கடித்தும் சிலர் கற்களால் சப்பிழித்தும் சப்பிக்கொண்டிருந்தனர்.

"அறுவார்! வெறும் பிஞ்சுகளை நாசமாக்கிறாங்கள்" அம்மா ஆதங்கப்பட்டாள். நான் அமைதியாக அவர்களை அவதானித்துக்கொண்டிருந்தேன்.

"அந்தக் காலத்தில் நியாயத்தைச் கதைச்சதுக்காக அந்த அப்பாவி மனுசன் செல்லப்பா தாத்தாவை அடிச்சு நொருக்கினவங்கள். இப்ப நியாயங் கதைக்கிறதுக்கு ஆளில்லாமல் போச்சு. ஆர் என்ன செய்தாலும் கேட்க ஒருத்தருமில்லை" அம்மா தொடர்ந்து முணுமுணுத்துக்கொண்டிருந்தாள்.

இப்போது அவர்கள் எல்லோரும் கலைந்துவிட்டிருந்தனர். மாமரம் ஆடாமல் அசையாமல் நின்றது. நான் எதையும் சிந்திக்க முடியாதவனாக இருந்தேன்.

தாத்தாவின் வழித்தோன்றல்கள் எல்லாம் அந்த ஒருவர் மாதிரி கொண்ட கொள்கையை மாற்றாமல் ஒற்றுமையாய் நின்றிருந்தால் அந்த நிலமும் கட்டடமும் எவ்வளவு நன்றாகப் பராமரிக்கப்பட்டிருக்கும்.

கட்டடங்கள் இடிபட்டிருக்காது. பூங்கனிச்சோலைகள் பட்டுப்போயிருக்காது. வளமான நிலம் சுவர்நிலமாக செம்மண்ணாக மாறியிருக்காது. இவ்விதமும் எழுந்த எண்ண ஓட்டம் என் மன ஓரத்தில் வேதனை ரேகைகளைப் படரவிட்டுச் சென்றது.

***

இப்போது சில நாட்களாய் அவள் என் கண்களில் தென்படவில்லை. அவள் வழமையாக நின்று பஸ் ஏறும் இடம் வெறுமையாக இருந்தது.

சில நேரம் எனக்கு முன்பாகவே அவள் பஸ் ஏறிப் போயிருக்கலாம் என்று என் மனம் ஊகித்தது. அதேபோல் அவள் வழமையாகத் திரும்பிவரும் பஸ் கூட அவள் இல்லாமலேயிருப்பாள் என ஊகம் செய்தது.

ஆனால் மனம் என்னதான் ஊகம் செய்து கொண்டிருந்தாலும் என்நெஞ்சின் ஓரத்தில் இனம்புரியாத வேதனை படர்ந்திருந்தது மட்டும் உண்மை. இந்த வேதனைக்கான காரணத்துக்குக் கூட என்னால் காரணம் சொல்ல முடியவில்லை.

அவள் இல்லாமலே பிரயாணம் நடந்து கொண்டிருந்தது. நான் உற்சாகமிழந்தவனாய் பிராயாணித்துக் கொண்டிருந்தேன். அன்றைய தினமும் அவள் வரவை எதிர்பார்த்துப் பிரயாணித்துக் கொண்டிருந்தேன். என் அவதானமும் வெகு உன்னிப்பானதாய் இருந்தது.

அந்த வெகு உன்னிப்பான என் அவதானத்தில் அந்தப் பொருள் சிக்கியது. பஸ் நிறுத்தப்பட்ட போது அந்தப் பொருள் என் பார்வையில் சிக்கியது.

புல் பூண்டுகள், புதர்கள் வெவ்வேறு செடிகள் சூழ்ந்திருந்த பாழ்மனை. அதன் ஜன்னல் வழியாக சிவப்பு நிறப்பூக்கள் மஞ்சள் பின்னணியில் அமைந்த அணி அங்காங்கே கிீறக்கிழிக்கப் பட்டதைப் போல தோற்றத்தை ஏற்படுத்தக்கொண்டு தொங்கியதை அவதானிக்க முடிந்தது.

சிறிது நேரமே அந்த அவதானம் நிலைத்தது, அதற்கிடையில் பஸ் வேகமெடுத்துப் புறப்பட்டுவிட்டது. அந்த அவதானம் என்னை வெகுவாகப் பாதித்தது. எனக்கு எதையும் சிந்திக்கத் தோன்றவில்லை. எதையோ இழந்துவிட்டது போல உணர்ந்தேன்.

ஒரு வேளை அவள் நேரங்கெட்ட நேரத்தில் வந்து அவர்களிடம் மாட்டிக் கொண்டு..........'' கடவுளே! அப்படி நடந்திருந்தால், இல்லை. ஒரு முடிவுக்கு என்னால் வர முடியவில்லை. அப்படி எதுவும் நடந்திராவிட்டால் அவள் ஏன் இன்னும் என் கண்களுக்குப் புலப்படவில்லை?

ஒரு வேளை என் கண்களுக்குப் புலப்படாத இடத்தில் அவள் செயற்பட்டுக்கொண்டிருக்கக்கூடும். அப்படித்தான் இருக்க வேண்டும்.

இல்லையென்றால் இது தொடர்பாக கவனத்தை ஈர்க்கக்கூடிய செய்தி ஏதாவது பத்திரிகையில் வந்திருக்கும். இதுவரை அத்தகைய செய்தி எதுவும் வரவில்லை. எனவே பாரதூரமான எதுவும் நடந்திருக்க நியாயமில்லை. எனக்கு நானே சமாதானம் செய்துகொண்டு அமைதியடைந்தேன்.

***

மீண்டும் செல்லப்பா தாத்தாவின் வளவிலுள்ள மாமரம் காய்த்திருந்தது. காய்களில் அநேகமாக எல்லாம் புளிமுத்தல்கள். அவற்றைப் பாதுகாப்பதில் யாருக்கும் அக்கறையில்லை.

எங்கோ தூரத்தில் நாய்கள் குரைக்கின்றன. அது அவர்கள் வருவதற்கான அடையாளம். அவர்கள் எப்படியும் வருவார்கள். புளிமுத்தல் மாங்காய்கள் பறிக்கப்படும். கோரப்பற்களால் கடித்துக் குதறப்படும். யாரும் எதுவும் கேட்கமாட்டார்கள். நான் ஜன்னல் வழியாக அவர்களை அவதானிப்பேன். அம்மா ஆதங்கப்படுவாள். ஆனால் எங்களால் எதுவும் செய்யமுடியாது.

நான் இப்போதெல்லாம் அவளைப் பற்றி அதிகம் சிந்திப்பதில்லை. பஸ் புத்தூரில் நிற்கும்போது மட்டும் அவள் நினைவு வரும். அதுவும் சிலநேரங்களில் மறந்துபோகும்.

பஸ் தனது வேகமான ஓட்டத்தை நிறுத்தி சிறுப்பிட்டியில் நிற்கிறது. ஒரு இளநங்கை ஏறிக்கொள்கிறாள். அவள் தோற்றம் மனதைக் கவர்வதாய் உள்ளது. காரணம் தெரியவில்லை.

என் மனதில் ஒரு தீர்மானம் "இவளுக்கு கட்டாயமாக இரத்தக்காட்டேறிகள், சுடலைமாடன்கள், எறிமாடன்கள், பிசாசுகள் பற்றி வலுவாக எச்சரிக்க வேண்டும்.

— சுதாரஞ்சன்

# மொரீஷியஸ் தமிழர்களின் தமிழுணர்வுக்கு ஈடு ஏது?

''இந்தாங்கோ ..... சாப்பிடுங்கோ.... லோகனுடன் தேரடிக்கு வந்த டானியல் எல்லாருக்கும் ஒவ்வொரு சிறிய பொட்டலத்தைக் கொடுத்துவிட்டு தானும் ஒன்றுடன் அமர்ந்தான்.

பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்த விநாசியர், என்ன தம்பி விசேஷம், லட்டு, மிக்ஸ்சர் தாறீர் என்று கேட்டார்.

''செக்கியூரிட்டியாய் இருந்த டானியலுக்கு பதவி உயர்வு கிடைச்சு மேற்பார்வையாளராயிட்டார். அந்த சந்தோஷத்துக்குத்தான் இது.'' நண்பனின் சார்பில் கொம்னிகேஷன் லோகன் பதில் சொன்னான்.

''டானியலின்ரை நல்ல குணத்துக்கும், கெட்டித்தனத்துக்கும் நல்லது நடக்கும்'' வாழ்த்தினாள் சின்னாச்சி.

புன்சிரிப்புடன் வாழ்த்தை டானியல் ஏற்றுக்கொண்டான்.

அப்ப இனிப் பதவி உயர்வோட டானியலுக்கு சம்பளமும் ஏறும். கையிலை தாராளமாகக் காசு பிளங்கும் என்று வஞ்சகம் இல்லாமல் சொன்னார் விநாசியர்.

காசுக் கதையே சொல்லுறியள்? மொரீஷியஸிலை காசுக்கு என்ன நடந்தது தெரியுமே என்று தொடங்கினார் மாஸ்டர்.

சஸ்பென்ஸை விட்டுட்டு சொல்லுங்கோ மாஸ்டர் என்று துரிதப் படுத்தினான் டானியல்.

மாஸ்டர் தொடர்ந்தார்-

''மொரீஷியஸ் நாட்டு தாள்காசிலை 'கிரிலோ' என்ற தேசிய மொழியில் பணத்தின் பெறுமதி அச்சிடப்பட்டிருந்தது. அதனை அடுத்து இரண்டாம் இடத்திலை தமிழிலையும், மூன்றாம் இடத்திலை ஹிந்தியிலையும் பெறுமதி இருந்ததாம்.

அங்கை இருக்கிற ஹிந்திக்காரர்கள் முயற்சி எடுத்து இரண்டாம் இடத்திலை ஹிந்தியைக் கொண்டுவந்தினமாம்.

தாள் காசிலை தமிழ் மூன்றாம் இடத்துக்குப் போட்டுதாம்.

இதனாலை மொரீஷியஸ் தமிழர்கள் கொதித்தெழுந்து போராடினதாலே ஹிந்தியைக் கீழே கொண்டு வந்து பழையபடி தமிழை மேலை கொண்டுபோய் புதுத்தாள் காசுகளை அரசாங்கம் வெளியிட்டிருக்காம்.

மொரீஷியஸ்ஸிலை வாழுற தமிழர்கள் கரும்புத் தோட்டங்களிலை வேலை செய்ய தமிழ் நாட்டிலை இருந்து போனவர்களின் வம்சாவளியினர். ஆனால் இப்ப தங்களை தமிழர்கள் என்று பெருமையுடன் சொன்னாலும் அவர்களுக்குத் தமிழ் தெரியாதாம். ஆனாலும் தங்களுக்கு பேசத் தெரியா விட்டாலும் தாய் மொழியான தமிழ் இருந்த இடத்தை விட்டு கீழை இறங்கினது பொறுக்க முடியாமல் போராடினது பாராட்ட வேண்டிய விஷயம்.



## தேரடி அரட்டை

''தமிழ் பேசியும் மானங்கெட்டு வால் பிடிச்சு வாழுற ஜென்மங்கள், மொரீஷியஸ் தமிழரின்ரை காலைக் கழுவிக் குடிக்க வேணும்'' எரிச்சலின் உச்சத்தை சின்னாச்சியின் குரல் காட்டியது.

மொரீஷியஸ் தமிழர்கள் தமிழ் படிக்க ஆர்வமாக இருக்கினமாம். இதுக்கு தமிழ்நாடு உதவி செய்யும் என்று அவர்கள் நம்பவில்லையாம். ஏனென்றால் தமிழ் நாட்டிலை ஆங்கிலம் கலந்து போனதால் சுத்தமான தமிழ் மறைஞ்சு வருகுதாம்.

அதனால் ஈழத்தமிழர் தான் சுத்தமான தமிழ் கற்க தங்களுக்கு உதவ முடியும் என்று அவர்கள் திடமாய் நம்புகினமாம். சொல்லி முடித்த மாஸ்டர் மூச்சு வாங்கினார்.

யாழ் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை வெளி நாடுகளில் இருக்கும் எங்கடை குழந்தைகள் படிக்க வசதியாக தமிழ் பாடத்திட்டம் ஒன்றைத் தயாரித்து அறிமுகப் படுத்தினால் பிரயோசனமாக இருக்கும்.

அரிச்சுவடி படிக்கிற பிள்ளையளுக்கு மட்டுமல்லாது வளர்ந்தவைக்கும் வெவ்வேறு தரத்திலை பாடத்திட்டங்கள் தயாரிச்சு அனுப்ப தமிழ்த் துறை முன் வந்தால் நல்லது என்று ஏக்கத்துடன் கூறினார் விநாசியர்.

''மணி விழாக்களுக்கு செலவிடுற நேரத்திலை கொஞ்சத்தை இந்த மாதிரி நல்ல விஷயங்களுக்கு செலவழிச்சா நல்லதுதான்'' குத்திக் காட்டினாள் சின்னாச்சி.

ஒரு விஷயம் சொல்ல மறந்து போனேன் என்ற மாஸ்டர் தொடர்ந்தார்.

''மொரீஷியஸ்ஸிலை உலகத் தமிழ் சைவப் பண்பாட்டு மாநாடு என்ற பெயரிலை உலக அறிஞர்கள் பலரும் கலந்துகொள்ளும் விழா நடக்க இருக்குதாம், ஆனால் அதை நடக்க விடாமல் தடுக்க 'கதிர்காம' கந்தன் காவடி எடுக்கிறாராம். மாஸ்டர் சொன்னார்.

''ஒரு நாளைக்கு தூக்குக் காவடி எடுக்கேக்கை தான் உவைக்குத் தெரியும்'' என்று கடுகடுப்பாகச் சொன்னாள் சின்னாச்சி.

கதிர்காம ''கந்தன்'' காவடி எடுக்கிறதைச் சொல்லுறியள். எங்கட பொடியள் நாடுவிட்டு நாடு போய் என்ன செய்யுதுகள் தெரியுமே...? என்று இழுத்தார் விநாசியர்.

'இந்த ஆள் ஒண்டையும் உடனை சொல்லாது!' புறு புறுத்தாள் சின்னாச்சி.

சின்னாச்சியின் பொய்க் கோபத்தைக் கண்டு சிரித்தபடி விநாசியர் விளக்கினார்.

''எங்கடை சோமன் இளைய மகனை வெளிநாட்டுக்கு அனுப்புறதுக்காக சென்னையிலை கொண்டு போய் விட்டுட்டு வந்தவர்.

சோமன்ரை மூத்தவனும் வெளிநாட்டுக்கு வாற அலுவல்களைப் பார்க்கச் சொல்லி தம்பியாருக்கு காசு அனுப்பினவன்ாம். ஆனால் இந்தப் பொடியன் தமையன் கஷ்டப்பட்டு உழைச்சு அனுப்பின காசை படத்திலை நடிக்க சான்ஸ் வாங்கித் தாரன் என்று சொன்ன ஒரு ஆளை நம்பிக் கரியாக்கிப் போட்டுதாம்.''

''எங்கடை ஆக்கள் வருவினம், ஏமாத்துவம் என்றுதான் நிறையப் பேர் அங்கே அலையினம் போலை'' என்றாள் சின்னாச்சி.

''அப்பிடியில்லை சின்னாச்சி, தமிழ் நாட்டிலை சினிமாப் படத்திலை நடிக்க வைக்கிறோம் என்று சொல்லி ஏமாத்திறது கனகாலத்துக்கு முந்தியே நடந்து வருகிறது''

தன்க்குத் தெரிந்த விஷயம் என்பதால் உற்சாகமாய்ப் பேசினான் லோகன்.

''சினிமாக்கதை எண்டால் லோகனுக்கு வாயெல்லாம் பல்லாய்ப் போடும்!'' கடித்தாள் சின்னாச்சி.

கடிக்குக் காது கொடுக்காமல் லோகன் தொடரவே; லோகனின் கதையைக் கேட்கத் தொடங்கினால் இப்ப போக முடியாது என்று சிரித்தபடியே கடலைக் கடையைக் கட்டத் தொடங்கினாள் சின்னாச்சி.

சரி அடுத்த வாரம் அதைச் சொல்லுறன் என்று லோகன் கூறவே எல்லோரும் கலைந்தனர்.

-ஏகலைவன்

# பித்தன் பதில்கள்

**ஆர். வஹாப்**, உலப்பனை

**கே : குதிரைக்குக் கொம்பு இருந்தால் எப்படி இருக்கும்?**

ப : குதிரையின் வேகம் குன்றிவிடும். ஏனென்றால் பெரிய பெரிய கொம்பன்கள் எல்லாம் இன்று செல்லாக்காசாகிவிட்டார்களே!

**ஆர். வேலாயுதன்**, கண்டி

**கே : மதப் பிரசாரகர்கள் எப்படி இருக்க வேண்டும்?**

ப : மதம் பிடிக்காதவர்களாக இருக்க வேண்டும்.

**பி. அகமது**, கல்முனை


**கே : பெண்கள் உதட்டுச் சாயம் பூசுவது எதற்காக?**

ப : தங்களுடைய வாய் ஆபத்தானது என்பதை எடுத்துக்காட்டுவதற்காக.

**டி.மதிவதனி**, கொழும்பு-5

**கே : விலைவாசிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதிலிருந்து என்ன தெரிகிறது?**

ப : மக்களின் நல்வாழ்வில் அரசுக்கு அக்கறை இல்லை என்பது புரிகிறது.



**எஸ். சந்திரன்**, நல்லூர்

**கே : நடிகைகள் ஆபாசமாக நடிக்கிறார்களே, அவர்களுக்கு வெட்கம் வருவதில்லையா?**

ப : வெட்கம் வந்தாலும் அதனைப் படத் தயாரிப்பாளர்களின் பணத்தால் துடைத்து விடுகிறார்கள்.

**ஆர். ராதா**, நாவலப்பிட்டி

**கே : அதிக நாட்கள் உயிரோடு இருப்பவர்கள் யார்?**

ப : அதிகம் உழைப்பவர்கள் அதிக நாள் வாழ்வார்கள். சோம்பேறிகளுக்குச் சொற்ப நாட்கள் தான் வாழ்வு.

**டி.எம்.பாத்திமா**, புத்தளம்

**கே : மாமியார் மெச்சும் மருமகளாக வாழ்வது எப்படி?**

ப : இந்தக் காலத்து மாமியார்கள் தமது நரைத்த தலைமயிரை மைபூசி மறைத்து, உதட்டுச் சாயம் பூசி, முகத்துக்குப் பவுடர் பூசி நாகரிகமாக இருக்க விரும்புகிறார்கள். இதைக் கண்டும் காணாதவாறு இருக்கும் மருமகளையே அவர்கள் மெச்சுகிறார்கள். அதிலும் இந்தப் பொருள்களை அவர்களுக்குச் ''சப்ளை'' செய்தால் மாமியார் போற்றும் மருமகளாகக்கூட வாழலாம்.



**எஸ். செல்வம்**, வத்தளை


**கே : புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கம் என்று பிரிட்டிஷ் அரசு தடை செய்யுமா?**

ப : அப்படிச் செய்வது சரியல்ல என்ற கருத்து பிரிட்டனில் இப்போது ஓங்கி நிற்கிறது. பிரிட்டன் இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட போது நிர்வாக வசதிக்காக இலங்கையின் எல்லாப் பகுதிகளையும் ஒன்றாக்கினாலும் 1948இல் நாட்டுக்கு சுதந்திரம் வழங்கிய போது அதைக் கருத்தில் கொண்டு எல்லாப் பகுதிகளிலும் உள்ள எல்லா மக்களும் சுதந்திரத்தை அனுபவிக்க வழி செய்திருக்க வேண்டும். அதைச் செய்ய பிரிட்டிஷ் அரசு தவறிவிட்டது என்று இன்றைய பிரிட்டிஷ் மக்கள் உணர்கிறார்கள். அந்தத் தவறுக்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்றும் விரும்புகிறார்கள். மக்கள் கருத்தை உதாசீனப்படுத்தினால் பிரிட்டிஷ் அரசு நிலைத்திருக்க முடியாது. பொதுத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் தான் உள்ளன.

**வி.ரமணன்**, மட்டக்குளி

**கே : நாட்டில் திருடர்கள் அதிகரிப்பதன் காரணம் என்ன?**

ப : காரணங்கள் இரண்டு. ஒன்று தாங்க முடியாத வறுமை. மற்றது உழைக்காமல் உண்ண வேண்டும், உடுக்க வேண்டும், திடீர்ப் பணக்காரன் ஆகவேண்டும் என்ற மனோ பாவம். இந்த மனோபாவத்தை வளர்த்த குற்றம் அரசாங்கத்தினுடையது தான். கல்வி, மருத்துவம் என்று பல இலவசங்கள். இவற்றால் தான் உழைக்காமல் உண்ணும், உடுத்தும் மனோபாவம் முனையிட்டு வளர்ந்தது. குபேர நாடான அமெரிக்காவில் கூட இப்படி இல்லை. அங்கே எல்லோரும் உழைத்துத்தான் வாழ வேண்டியிருக்கிறது. பிச்சை எடுக்கும் இந்த நாட்டு நிலைமை வேறாக இருக்கிறது.



**கே.செல்வபூபதி**, கல்லாறு

**கே: விஞ்ஞானிக்கும் பக்தனுக்கும் வித்தியாசம் என்ன?**

ப : விஞ்ஞானி எதிலும் சந்தேகப்படுவான். அவனுடைய சந்தேகமே புதிய புதிய விஷயங்களை அவன் கண்டு பிடிப்பதற்குத் துணையாக இருக்கிறது. பக்தன் எதையும் சந்தேகிக்கமாட்டான். நம்பவேண்டியதை அப்படியே நம்பிவிடுவான். இந்த நம்பிக்கை தான் அவனுக்கு மனச் சாந்தியைத் தருகிறது. விஞ்ஞானிக்குச் சந்தேகம் அவசியம். பக்தனுக்கு சந்தேகமின்மை அவசியம்.

**கே.எம்.ஷரிபு**, கல்முனை

**கே : அன்புக்கும் ஆசைக்கும் வித்தியாசம் என்ன?**

ப : அன்பு பிரதிபலனைக் கருதாத ஆசை. ஆசை பிரதிபலனைக் கருதும் அன்பு.

**டி.என்.சாம்சன்**, மன்னார்

**கே : பசியை விட அதிகம் வயிற்றை வாட்டுவது?**

ப : இது தெரியாதா? வயிற்று வலிதான்!

**எஸ். முகம்மது**, முறாவோடை

**கே : வாழ்க்கையில் வெற்றி அடைவதற்கு வழி என்ன?**

ப : வாழ்க்கையில் வெற்றி அடைவதற்கு வழி, தன்னை நாணல் புல் போல் ஆக்கிக் கொள்வதுதான். புயல் வந்தாலும், மழை வந்தாலும், வெள்ளம் வந்தாலும் நாணல் வளைந்து கொடுத்து பின் தலையை உயர்த்திக் கொள்கிறது. விறைப்பாக நிற்பவர்கள் விரைவில் முறிந்து விடுவார்கள்.

**ஆர்.ஜோசப்**, தெஹிவளை

**கே: ஏழையின் வாழ்க்கையா, பணக்காரனின் வாழ்க்கையா கவலை யற்றது?**

ப : இரண்டுமே கவலையானது தான். பணம் இல்லையே என்று கவலைப் படுகிறான் ஏழை. இவ்வளவு பணத்தையும் கட்டிக்காப்பது எப்படி, விட்டு விட்டுச் சாவது எப்படி என்று சதா கலங்குகிறான் பணக்காரன். தேவையைப் போக்கும் அளவுக்குப் பொருள் படைத்தவனே நிம்மதியாக வாழ முடியும்.

**ஏ.குமுதினி**, வவுனியா

**கே : காதலும் பாசமும் மோதினால் எது வெற்றி பெறும்?**

ப : காதலும் பாசமும் மோத வேண்டிய அவசியம் இல்லையே. அன்பின் அடிப்படையில் பிறந்த இரண்டும் ஒன்று தானே. ஆற்று நீரும் குளத்து நீரும் மோதினால் என்ன சம்பவிக்கும்?

**பி.துட்சணாமூர்த்தி**, பதுளை

**கே : ஒரு கணவன் தன் மனைவியிடம் எதை எதிர்பார்க்கிறான்?**

ப : பணிவை, அடக்கத்தை, அன்பை, ஆதரவை, இன்பத்தை, இரக்கத்தை இவ்வளவையும் ஆரம்பத்தில் எதிர் பார்க்கிறான். ஆனால் போகப் போக பாவம் அவனே பணிவையும் அடக்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டியவனாகிறான்.



# ஏற்றாலும் உதைத்தாலும் ராமதாஸ் ஜெயலலிதா பக்கம்


ராமதாஸ்

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் இந்திய மத்திய அரசில் அங்கம் வகித்த தமது இரு அமைச்சர்களைப் பதவிவிலகச் செய்திருக்கிறார். அத்துடன் ஜெயலலிதாவின் அ.தி.மு.கவுடன் தேர்தல் கூட்டு மேற்கொள்ளவும் முடிவு செய்திருக்கிறார்.

பா.ம.க வின் இந்தத் திடீர் நடவடிக்கையினால் வாஜ்பாய் அரசுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்று அறிவிக்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் புதிய தேர்தலை எதிர்நோக்கும் தி.மு.க அரசுக்குச் சில சிக்கல்கள் ஏற்படக் கூடும்.

தமிழகத்தின் சில மாவட்டங்களில் பரந்து வாழும் வன்னியர் குலத்தவர்களின் வாக்கு வங்கியைக் கொண்டது பா.ம.க. வன்னியர் குலத்தின் முதன்மைத் தலைவர் என்று தம்மையே வரித்துக் கொண்டிருக்கிறார் ராமதாஸ்.

தமிழக ஆட்சியைக் கைப்பற்றும் வலு ராமதாஸுக்கு இல்லை. ஆயினும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய பக்க பலம் இருக்கிறது. ''பாண்டிச்சேரியில் பா.ம.க ஆட்சியைப் பிடிக்கும். தமிழகத்தில் பா.ம.க தான் பங்குகொள்ளும் அணிக்கு வெற்றியைத் தேடித்தரும்'' என்பது ராமதாஸின் அண்மைக்கால பிரகடனம் ஆகும்.

பாண்டிச்சேரியில் தி.மு.க ஆதரவுக் கூட்டணி பதவியில் இருந்தது. பா.ம.க உறுப்பினர் கட்சி மாறியதால் அங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆயினும் குத்து வெட்டு குறையவில்லை. பாண்டிச்சேரியில் நிலையான ஆட்சி குலைந்து தினமும் அரசியல் குளறுபடியாகவே இருக்கிறது. எல்லாம் பா.ம.க வின் அன்பளிப்புதான்.

இந்நிலையில் தமிழக அரசியலிலும் தமக்கென ஒரு ஸ்திரமான பிடியை ஏற்படுத்திக்கொள்ள ராமதாஸ் முயலுகிறார் என்பதையே அவரது தற்போதைய நடவடிக்கை எடுத்துக் காட்டுகிறது.

கருணாநிதியைப் பதவியில் இருந்து அகற்றிவிட்டு ஜெயலலிதாவை ஆட்சியில் இருத்த வேண்டும் என்ற துடிப்புடன் ராமதாஸ் இவ்விதம் குத்துக்கரணம் அடிக்கிறாரா? இவ்வாறு அரசியல் ஆய்வாளர்கள் கேட்கிறார்கள்.

வன்னியர் குலத்தின் ஏக தலைவன் தானே என்ற உணர்வு ராமதாஸுக்கு இருப்பதால் அவர் கட்சியில் அவருடைய தரத்துக்கு நிகரான ஒரு தலைவர் உருவாகவில்லை. அவ்விதம் உருவாகக் கூடியவர்களை அவர் விட்டு வைக்கவும் இல்லை. ஆனால், படிப்படியாகத் தமது மகனைத் தமது வாரிசாக உருவாக்கி வருகிறார். இது கட்சியில் சிலருக்குப் பிடிக்கவில்லை சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

பா.ம.கவில் வன்னியர் குலத்திற்கென புதிய தலைவர்கள் உருவாகாமல் விட்டாலும் வெளியில் ஒரு சிலர் இருக்கவே செய்கிறார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் வாழப்பாடி ராமமூர்த்தி ஆவார். அவர் வன்னியர் குலத் தலைவர் என்று தம்மைப் பெருமைப் படுத்தாமல் ''தமிழக ராஜீவ் காங்கிரஸ்'' தலைவராக இருக்கிறார்.

இருந்த போதிலும் தமிழகத்தில் வன்னியர் குலத்தவர்களில் சில பகுதியினர் வாழப்பாடிக்கு ஆதரவு தருபவர்களாக இருக்கிறார்கள். இந்நிலையில் வாழப்பாடியைத் தலையெடுக்க விடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார் ராமதாஸ்.

கடந்த லோக சபைத் தேர்தலில் தி.மு.க கூட்டணியில் பா.ம.க இணைந்து போட்டியிட்ட போது வாழப்பாடியும் அந்தக் கூட்டணியிலேயே இருந்தார். தி.மு.க கூட்டணி அமோகவெற்றி பெற்றது. ஆயினும் சேலம் தொகுதியில் வாழப்பாடி மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார்.

வன்னியர் வாக்குகளை ராமதாஸ் தமக்கு விழாமல் தடுத்து விட்டதாலேயே தமக்குத் தோல்வி ஏற்பட்டது என்று வாழப்பாடி ராமமூர்த்தி குற்றம் சாட்டினார்.

வாழப்பாடி வெற்றி பெற்று வந்தால் மந்திரிப்பதவி தருவதற்கு வாஜ்பாய் காத்திருந்தார். ஆனால் அதனை ராமதாஸ் தடுத்து விட்டார் என்பது அரசியல் அவதானிகளின் கணிப்பு ஆகும்.

இருந்த போதிலும் கருணாநிதியின் நண்பராக வாழப்பாடி இன்னும் இருக்கிறார். அவரைத் தி.மு.க கூட்டணியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று ராமதாஸ் வற்புறுத்தி வந்தார். அதனைத் தி.மு.க ஏற்றுக்கொள்ளவில்லை.

ராமதாஸுக்கு வன்னியர் குலத்தில் இருக்கும் செல்வாக்கைக் குறைத்து விட வேண்டும் என்ற ஆவல் கருணாநிதிக்கு இருக்கிறது. வாழப்பாடியின் கையைப் பலப்படுத்துவதன் மூலமே அது சாத்தியமாகும் என்று அவர் எண்ணியிருக்கக்கூடும். வாழப்பாடியை வெளியேற்ற கருணாநிதி இறுதிவரை இணங்கவில்லை.

அண்மைக்காலமாக ராமதாஸ் தி.மு.க வுக்கு விநோதமான கருத்துக்களையே வெளியிட்டு வந்தார். அவர் அ.தி.மு.க வுக்கு ஆதரவாளராக மாறி விடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும் பா.ம.க மத்திய அரசில் அங்கம் வகிக்கிறது. எனவே தி.மு.க அணியிலிருந்து வெளியேறாது என்றே அனைவரும் எண்ணியிருந்தனர்.

ஆயினும் எதிர்பாராத ஒரு சூழ்நிலையில் ராமதாஸ் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமது கட்சியின் இரு அமைச்சர்களை வாபஸ் பெற்றிருக்கிறார். அதுவும் புதுடில்லியில் மத்திய அரசுக்கூட்டணிக்கட்சித் தலைவர்களின் மாநாடு நடைபெற்ற போது இந்த அதிர்ச்சி வைத்தியத்தை நடத்தியிருக்கிறார். இந்தக் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் கருணாநிதியும் கலந்து கொண்டார்.

கருணாநிதிக்கு எதுவும் கூறாமலே இந்தக் குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார் ராமதாஸ். பா.ம.க எம்.பிக்கள் இருவருக்கும் கபினெட் மந்திரிப் பதவி தரப்படவில்லை. ராஜாங்க அமைச்சர்களாகவே அவர்கள் இருந்தார்கள். அவர்களின் ராஜினாமாக் கடிதங்களைப் பிரதமர் வாஜ்பாய் ஏற்றுக்கொள்ளவில்லை.

ராமதாஸை மறுதினம் அழைத்துப் பேசி ஒரு சமாதானத்தை ஏற்படுத்த முயன்றார் பிரதமர் வாஜ்பாய். ஆனால் ராமதாஸ் அன்று இரவே சென்னைக்குத் திரும்புகிறார். மறுதினம் ஜெயலலிதாவைச் சந்திக்கிறார் என்று அறிவிக்கப்பட்டது. எனவே சமாதான முயற்சி கைவிடப்பட்டது.


ஜெயலலிதா

ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைத்துக் கொள்வதால் ராம்தாஸுக்கோ அல்லது ஜெயலலிதாவுக்கோ எத்தகைய நன்மைகள் கிடைக்கப் போகின்றன? காலம்தான் பதில்சொல்ல வேண்டும்.

ஜெயலலிதாவுக்கு தமிழக ஆட்சி கிடைக்குமோ தெரியாது . ஆனால் ராமதாஸுக்கு அதிக தொகுதிகளை அவர் விட்டுக் கொடுக்க வேண்டிவரலாம். ஜெயலலிதா ராமதாஸை ஏற்றுக் கொண்டாலும் சரி, எட்டி உதைத்தாலும் சரி இனி ராமதாஸ் ஜெயலலிதா பக்கம் தான்.

மூப்பனாரும் தமது கையைப் பலப்படுத்திக் கொண்டு அதிக தொகுதிகளைப் பெற முயலலாம். ஜெயலலிதா தமது பிடிவாதத்தைத் தளர்த்த வேண்டி யிருக்கும். தேர்தலில் மாத்திரமல்ல கூட்டணி வெற்றி பெற்றால் கூட்டணி ஆட்சியை அமைக்கலாம் என்ற உறுதிப்பாட்டிற்கு வர வேண்டியிருக்கக்கூடும்.

இதே வேளையில் சுகவீனம் காரணமாகத் தளர்வடைந்துள்ள கருணாநிதி மிகவும் பிரயத்தனம் எடுத்து மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மூப்பனாரைச் சேர்த்துக்கொள்ள அவர் முயலக்கூடும்.

தமிழக அரசு தேர்தல் மோதல் குறித்து சதுரங்கக்காய்கள் நகர்த்தப்படும் போது மேலும் சுவையான பல சம்பவங்கள் நடைபெறப்போகின்றன.

**க.தா.சி**

# யானைக்குக் காதல் வந்தால் காடே அதிர்ந்து விடும்

*காதலுக்காகப் போராடிய யானை காயம் பட்டு இறந்தது.*

*இந்தியாவின் மிட்னாபூர் சந்திரா வனப் பகுதியில் யானைகள் கும்பல் கும்பலாக வாழ்கின்றன. இவை பீகாரில் உள்ள டால்மா ஹில்ஸ் பகுதிக்குச் சென்று திரும்புவது வழக்கம்.*

*அப்போது கூட்டமாக வந்த யானைகளில் ஒரு ஆண் யானை மட்டும் தங்கிவிட்டது. அப்பகுதிக்கு மற்றொரு யானைக் கூட்டம் வந்தது. தனியாக இருந்த ஆண் யானையைத் தங்களது கூட்டத்தில் சேர்த்துக் கொண்டன.*

*ஆனால், விளைவு விபரீதமானது. யானைக் கூட்டத் தலைவரின் ஆசை நாயகியை விரும்பிப் பின்தொடர்ந்தது அந்தத் தனி யானை.*

*கூட்டத் தலைவன் யானை இந்தக் கொம்பன் யானையைத் துரத்தி அடித்தது. ஆனால் விடாப்பிடியாக பெண் யானையைப் பின்தொடர்ந்தது தனி யானை.*

*ஆத்திரம் அடைந்த கூட்டத் தலைவன் யானை தனி யானையைச் சண்டைக்கு இழுத்தது. இரு யானைகளும் ஆக்ரோஷமாகச் சண்டைபோட்டன. அந்த வனப் பகுதியே அதிர்ந்தது.*

*சண்டை மூன்று நாட்கள் நீடித்தது. அருகில் இருந்த கிராம மக்கள் இந்தச் சத்தத்தினால் தூங்கவேயில்லை. கடைசியில் கால் ஒடிந்து தோற்றுப்போனது கொம்பன் யானை. வெற்றி பெற்ற யானை தனது குடும்பத்துடன் வேறிடம் சென்றது.*

*சந்திரா வனப்பகுதியில் முடங்கிக் கிடந்த கொம்பன் யானைக்கு மிருக டாக்டர்கள் வந்து மயக்க மருந்து அளித்து சிகிச்சை செய்தனர். ஆனால், பயனின்றி யானை இறந்தது.*

# வாசகர் இதயம் பேசுகிறது

*இலங்கை ரூபாவை மிதக்க விடுவதால் நன்மையை விடத் தீமை அதிகம் என்று விளக்கம் தந்த கட்டுரை அருமை.*

***—எம்.எம்.ஷகீர், மாத்தளை***

*''சுடர் ஒளி''யின் அத்தனை விடயங்களும் என் மனதில் இடம் பிடித்து விட்டன. மென்மேலும் சிறப்புப் பெற என் வாழ்த்துக்கள்.*

***— பா.கோபிகிருஷ்ணா, நமுனுகுல***

*எனது வாழ்வின் ஒளியான ''சுடர் ஒளி''யே உனது படைப்புக்களை தொடர்ந்து படித்து பயன் அடைந்து வருகிறேன்.*

***— கே.ராதிகா, பசறை***

*''மிஸ்டர் க்றோ'' எங்கு எல்லாமோ பறந்து சென்று கண்டறியும் தகவல்கள் பரபரப்பாக இருக்கின்றன.*

***—பி.ஆர்.அசோக்குமார், டிக்கோயா***

*மூலை முடுக்குகளில் நடைபெறும் தில்லு முல்லுகளைத் துணிவாக எடுத்துக் கூறுகிறீர்கள். பாராட்டுக்கள்.*

***—அ.அரசரெத்தினம், சேனையூர் —06***

*நடிகர் அஜித் ஒரே படத்தில் ஒன்பது வேடங்களில் நடிப்பது பற்றி சினிமாப்பக்கத்தில் சிறப்பாகத் தந்திருந்தீர்கள்.*

***—செ.மாரிமுத்து, கண்டி***

*இந்திய குடியரசு தினத்தில் பூகம்பம் ஏற்பட்ட கொடுமையை நீங்கள் தந்திருந்த விதம் நெஞ்சத்தைத் தொட்டுவிட்டது.*

***—எம்.சி.எம்.அன்வர், கேகாலை***

*மலையகத்துக்கு நவீன கேபிள் கார் சேவை வருகிறது என்ற தகவல் இனிப்பாக இருந்தது.*

***—சி.மதிவதனி, நுவரெலியா***

*நடுவரைத் தாக்கிய கால்பந்தாட்ட வீரர்களுக்கு ஆயுட்காலத் தடைவிதிப்பது பற்றி 'விளையாட்டுச் செய்திகள்' பகுதியில் படித்தேன். இது விடயத்தில் ஒரு சமாதான நிலைப்பாடு வந்தால் நல்லது.*

***—ஆ.நற்குணம், மட்டக்குளி***

*''சிங்களத் தேசிய வாதத்தைக் கைவிட்டு விடுங்கள்'' என்று சிங்களப் பத்திரிகையாளர் விக்டர் ஐவன் கேட்டிருப்பது சிறப்பு.*

***—ம.தேவராஜ், தெஹிவளை***

*அவதூறு செய்தவர்களுக்கு சாயிபாபா அளித்த பதில் மனதில் நன்கு பதிந்து விட்டது.*

***—த.சிவசுப்பிரமணியம், வவுனியா***

# புதிய தேர்தல் முறைக்கு பதில் பழையது வருகிறது

தற்போதைய தேர்தல் முறை நாட்டுக்கு உகந்ததா, இல்லையா? என்பது குறித்த விவாதம் இப்பொழுதும் நடைபெற்று வருகிறது. உகந்ததல்ல என்பதே பெரும்பாலான அரசியல்வாதிகள் ஏற்கனவே தெரிவித்துள்ள கருத்தாகும்.

இன்றைய தேர்தல் முறை 1978ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டதாகும். 'விகிதாசாரத் தேர்தல்' என அழைக்கப்படும் இத்தேர்தல் முறை ஆரம்பத்தில் வரவேற்பைப் பெற்றிருந்தது. ஆனால் காலம் செல்லச் செல்ல புதிய பிரச்சினைகளை அது தோற்றுவித்தது. இறுதியில் இத்தேர்தல் முறை நாட்டுக்கு வேண்டுமா என்ற கேள்வி எழுப்பப்பட்டு ஒரு பெரும் விவாதமே அது குறித்து நடத்தப்பட்டுள்ளது.

முன்னைய தொகுதிகள் - வட்டாரங்கள் அடிப்படையிலான தேர்தலில் மொத்த வாக்காளர்களின் எண்ணம் பிரதிபலிக்க வில்லை என்ற அடிப்படையிலேயே விகிதாசாரத் தேர்தல் முறை கொண்டு வரப்பட்டது. நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்தையும் ஒரு தொகுதியாகக் கணித்து அம்மாவட்டத்தில் ஒவ்வொரு கட்சியும் பெறும் மொத்த வாக்குகளின்படி உறுப்பினர்களின் தொகையைப் பங்கிடும் இத்தேர்தல் முறையை எவ்வாறு மாற்றியமைப்பது என்பதை கட்சிகள் இப்பொழுது ஆராய்ந்து வருகின்றன.

விகிதாசாரத் தேர்தல் முறை ஒரே கட்சிக்குள்ளும் வெட்டுக் குத்துக்களை ஏற்படுத்தியதைக் கடந்த பொதுத் தேர்தலில் நாடு தெளிவாகக் கண்டது. இதனால் எப்படியாவது இத்தேர்தல் முறையை மாற்ற வேண்டும் என்ற குரல்கள் மேலோங்கின. எதிர்வரும் மார்ச் மாதத்தில் பதவிக்காலம் முடிவடையவிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான 'குட்டிப் பொதுத் தேர்தல்' அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

புதிய தேர்தல் முறை உருவாக்கப்படும் வரை மார்ச் மாதத்தில் பதவிக்காலம் முடிவடையும் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல்கள் அரசாங்கத்தினால் பின்போடப்பட்டுள்ளன. மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் இவற்றில் அடங்கும். இம் மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெற வேண்டிய முறையைத் தீர்மானிக்கும் வரை 'குட்டிப் பொதுத் தேர்தலை'ப் பின்போடுமாறு புதிய தேர்தல் முறை குறித்து தீர்மானங்களை உருவாக்க நியமிக்கப்பட்ட பொது ஜன ஐக்கிய முன்னணிக் குழு அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது.

இக்குழு கூடி ஆராய்ந்து புதிய தேர்தல் முறை குறித்து சில தீர்மானங்களை மேற்கொண்டிருப்பதாகப் பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜயரத்ன அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்திருக்கும் விவரங்களின்படி புதிய தேர்தல் முறை பின்வரும் முறைப்படி அமையலாம்.

முன்னைய கிராமசபை அமைப்பின் கீழ் இருந்த வட்டாரங்கள் அடிப்படையிலேயே தேர்தல் நடைபெறும். ஒவ்வொரு வட்டாரத்திலும் கூடுதலான வாக்குகளைப் பெறும் அபேட்சகர் தெரிவு செய்யப்படுவார்.

ஒரு உள்ளூராட்சிசபைப் பிரதேசத்துக்குள் ஒவ்வொரு கட்சியும் பெறும் மொத்த வாக்குகள் விகிதத்தின்படி போனஸ் உறுப்பினர்கள் வழங்கப்படுவர். இதன்மூலம் சிறிய கட்சிகளுக்கும் சிறுபான்மையினருக்கும் பிரதிநிதித்துவம் கிட்டும்.

தேர்தலின் முடிவில் குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றத்தின் ஆட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காக இரு மேலதிக உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் ஆட்சியமைக்கும் கட்சிக்கு வழங்கப்படும்.

பொது ஜன ஐக்கிய முன்னணிக் குழு மேற்கொண்டுள்ள இத்தீர்மானங்களுக்குப் புறம்பாக ஐக்கிய தேசியக் கட்சி உட்பட வேறு பல கட்சிகளும் தங்கள் யோசனைகளைத் தெரிவித்துள்ளன. இந்தத் தீர்மானங்கள், யோசனைகள், எல்லாவற்றையும் ஆராய நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமிக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் தெரிவுக்குழுவே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான இறுதிப் பரிந்துரைகளைத் தெரிவிக்கும். அவற்றை அரசாங்கம் சட்டமாக்கியதும் தேர்தல்கள் நடத்தப்படும்.

வட்டாரங்கள் அடிப்படையிலும் விகிதாசார முறையின் கீழும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட ஐக்கிய தேசியக் கட்சி இணக்கம் தெரிவித்துள்ளது. ஆனால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு முன் நான்கு ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட வேண்டுமென அக்கட்சி அரசை வலியுறுத்துகிறது.

தேர்தல் - பொலிஸ் - அரசாங்க சேவை, நீதி ஆணைக் குழுக்கள் என்பனவே இந்த நான்குமாகும். இந்த நான்கு குழுக்களும் நியமிக்கப்பட முஸ்லிம் காங்கிரஸ் இணைத் தலைவர்களில் ஒருவரும் அமைச்சருமான ரஊப் ஹக்கீம் அரசுக்கு முன்னர் காலக்கெடு விதித்திருந்தது தெரிந்ததே.

அமைச்சர் ஹக்கீமுடன் ஜனாதிபதி சந்திரிகா பேச்சுவார்த்தை நடத்தி ஆணைக் குழுக்கள் நியமிப்பது குறித்து ஆராய ஹக்கீம் தலைமையிலேயே ஒரு குழுவை நியமித்ததும் அந்த விவகாரம் முடிவுற்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறையை மாற்றியமைக்க அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவு நிச்சயம் தேவை. ஆனால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவதைத் தான் ஆதரிக்கவில்லையென ஐ.தே.க.கூறுகிறது. தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவதை ஜே.வி.பி கண்டித்துள்ளது.

*- எஸ்.எட்வேர்ட்*

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | குட்டிச் சுட்டி காலைக்கதிர் (நேரடி ஒளிபரப்பு) |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | இசைக்கோலம் |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | வசந்த நிலா |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | அரட்டை அரங்கம் | ஸ்டார் ஷோ |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ணா தாசி | கிருஷ்ணா தாசி | கிருஷ்ணா தாசி | கிருஷ்ணா தாசி | கிருஷ்ணா தாசி | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகனே | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாவித்ரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்... | ஜன்னல் |

# விடுதி வாழ்க்கை படு ஜாலி!



இன்றைய உலகில் குடும்பம் என்ற வளையத்தை விட்டு "விடுதி வாழ்க்கை" என்பது சாதாரணமாகி விட்டது.

உயர் கல்விக்காகவும், தொழில் புரிவதற்காகவும், வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகவும் பல பெண்கள் வெளி மாவட்டங்களிலிருந்து நகரங்களுக்கு வருகின்றனர்.

இவ்வாறு வரும் பெண்களுக்கு விடுதி வாழ்க்கை பாதுகாப்பானதும் சிறப்பானதுமாகும். பல பெண்கள் விடுதி வாழ்க்கையை விரும்புவதற்கு இதுதான் காரணம்.

பலதரப்பட்ட மனநிலை உள்ளவர்களின் உணர்வுகள் சங்கமிக்கும் இடமான விடுதி, வீட்டில் கற்றுக் கொள்ள முடியாத பல சிறந்த விடயங்களைக் கற்றுக் கொடுக்கின்றது. எடுத்ததற்கு எல்லாம் சண்டை பிடிக்கும் குணத்தை அடியோடு மாற்றி விடுகிறது. எல்லோருடனும் அனுசரித்துப் போக வேண்டும் என்பதை அனுபவத்தில் அறிய வைக்கிறது.

* உணவுப் பொருட்களையும், பிறபொருட்களையும் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மையை ஏற்படுத்துகின்றது.
* சேர்ந்து படிப்பதற்கும், பாடங்களில் ஏற்படுகின்ற சந்தேகங்களை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் விடுதி வாழ்க்கை உதவுகின்றது.
* பல மதங்களைப் பின்பற்றுபவர்களும் ஒன்றாக இருப்பதால் பிற சமயங்களையும் மதிக்க வேண்டும் என்ற பண்பு வளர்கின்றது.

  இறைவழிபாடும், கூட்டுப் பிரார்த்தனையும் இடம் பெறுவதால் அது மனதை மேல் நிலைக்கு உயர்த்துகின்றது. தமது மன உணர்வுகளையும், கஷ்ட — நஷ்டங்களையும் நண்பிகளுடன் பகிர்ந்து மன அமைதியைப் பெற வழிசெய்கின்றது.
* நம்மால் தனித்து எதையும் செய்ய முடியும் என்ற மன உறுதி ஏற்படுகின்றது.
* சுகவீனம் ஏற்பட்டுவிட்டால் தனது எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்து விட்டுப் பரிவுடன் கவனித்துக் கொள்ளும் தோழியில் பெற்றதாயின் பரிவைக் காண முடிகின்றது.

  மற்றவர்களின் இன்ப துன்பங்களில் நாமும் பங்கெடுக்க வேண்டும் என்ற பண்பை நமக்கு கற்றுத் தருகிறது.
* விடுதி நிர்வாகியிடத்தில் கனிவையும், தாய்மையையும், கண்டிப்பையும் பெற முடிகின்றது.

இவ்வாறு வாழ்க்கைக்குப் பல நல்ல விடயங்களைக் கற்றுத் தரும் விடுதி வாழ்க்கையில் சில விடயங்களில் கொஞ்சம் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

தோழிகளைத் தெரிவு செய்வதில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். நம்மைத் தவறான வழியில் இட்டுச் செல்கிறார்கள் என்று தெரிந்தால் உடனே விலகி விட வேண்டும்.

நமது பெற்றோர் எத்தனை கஷ்டங்களுக்கு மத்தியில் எங்களை விடுதிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

நாம் எத்தனை இலட்சியங்களை அடைவதற்காக விடுதியில் தங்கியிருக்கின்றோம் என்பதை எப்போதும் மனதில் நிலை நிறுத்தி நாம் எடுத்துக் கொண்ட விடயத்தில் முழுக்கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

## பெண்

பிரதீபா — பசீனா

# உஷ்.... இது ரகசியம்



பெண்கள் அடுத்தவர் விடயத்தில் தலையிடுபவர்கள். இரகசியங்களை பாதுகாக்கத் தெரியாதவர்கள் எனக் குற்றம் சாட்டப்படுவது வழமை.

இப்படிச் சொற்களைக் கேட்கும் போது பெண்களுக்கு எரிச்சல் ஏற்படுவது உண்டு.

இப்பழக்கங்கள் பெண்களுடன் பிறந்தவை எனக் கூறுபவர்களும் உள்ளனர்

ஆனால் ஆழமாக யோசிப்போமாயின் அப் பழக்கங்களைப் பெண்களே வளர்த்துக் கொண்டுள்ளனர். அவற்றி லிருந்து விடுபட அவர்கள் முயற்சிப்பதும் இல்லை.

பிறர் விடயங்களில் தலையிடும் போது, நாம் மற்றவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் எமது செல்வாக்கைச் செலுத்துகிறோம்.

ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கை என்பது, அவரது விருப்பு வெறுப்புகள், ஆசா பாசங்கள், கருத்துக்கள், தெரிவுகள் என்பவற்றை உள்ளடக்கியது.

அவை அவருக்கே உரித்தானவை. அவற்றில் மற்றவர்கள் தலையிடுவதும், விமர்சிப்பதும் உரிமைக்கு அப்பாற்பட்டது.

அதே போன்றதே இரகசியங்களும். ஒருவரின் இரகசியம் என்பது அவரின் வாழ்க்கையுடன் பிணைந்து காணப்படும் ஒன்று.

அதனை வெளியில் பிறிதொருவரிடம் கூறுகின்றார் என்றால் எந்தளவிற்கு நம்பிக்கை வைத்திருக்க வேண்டும்?

பெண்கள் மீது சுமத்தப்படும் பல குற்றச்சாட்டுகளை இலகுவாக சமுதாயத்தை விட்டு ஒழிக்கலாம்.

அதற்கு மற்றவர்கள் உங்களுக்கு எதைச் செய்யக் கூடாது என நினைக்கிறீர்களோ, அதை நீங்கள் மற்றவர்களுக்குச் செய்யாதீர்கள்.

# படித்ததில் பிடித்தது!

* நல்ல தாம்பத்தியம் தைரியத்தையும், சந்தோசத்தையும் தருகின்றது. "என்னவர்" என்கின்ற கர்வத்தைத் தடுக்கின்றது. வாழ வேண்டும் என்கிற ஆசையைத் தருகின்றது.
* நிஜமான அன்புள்ளம் கொண்டவர் களிடமிருந்து ஆறுதல் தேடுங்கள்! அயர்ச்சியை எதிர்க்கத் தேவையான பலத்தை அது தருகின்றது.
* உங்களது ஒவ்வொரு செயலும், பிரச்சினைகள் நிறைந்ததாக இருக்கும் என்று பயந்து அஞ்சாதீர்கள். நம்பிக்கையுடன் அடி எடுத்து வையுங்கள்.
* உங்களால் எது முடியும்? எது முடியாது? என்பதைத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். குழப்பமான சூழ்நிலையை எதிர்கொள்ளும் போது - மனதையும், சிந்தனையையும் தெளிவாக வைத்திருங்கள். மலை போல் வரும் துன்பம் பனிபோல் விலகிவிடும்.

# அழகோடு ஆபத்தும் அல்லவா வருகிறது!

அழகு சாதனப் பொருட்களில் அதிகளவில் சேர்க்கப்பட்டுள்ள "டிபிபி" என்றழைக்கப்படும் "டிபியூடைல் ஃபீதா லேட்" என்ற இரசாயனப் பொருளினால் தாய்மையடையும் பெண்களுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அபாயம் உள்ளதாக "அமெரிக்க சுற்றுச் சூழல் அமைப்பு" வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

அமெரிக்க நோய்த் தடுப்பு மையம் பெண்களிடம் நடத்திய சோதனையில் ஒவ்வொருவர் உடலிலும் "டிபிபி" என்ற இரசாயனப் பொருள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து "சுற்றுச் சூழல் அமைப்பு" பெண்கள் உபயோகிக்கும் பொருட்களை ஆராயத் தொடங்கியது. அழகுக்காக முதற் கட்டமாக, அமெரிக்காவில் இதுவரை வழங்கப்பட்டுள்ள "பேடன்ட்" உரிமை சம்பந்தமான பதிவுகளை ஆராய்ந்தது.

இவ்வாறு ஆராயப்பட்ட 100 நுகர் பொருட்களில், அதிகபட்சமாக "Proctor and Camble" நிறுவனத்திற்குரிய 37 பொருட்களிலும் "டிபிபி" இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

* நகப் பூச்சுகள், ஷாம்பூக்கள், உடலிற்குப் பயன்படுத்தப்படும் லோஷன் வகைகளில் "டிபிபி" இருப்பது தெரியவந்துள்ளது.

நகப் பூச்சுக்களில், அதன் பூச்சு அதிக நாட்கள் நகத்தில் இருப்பதற்கு உதவியாக "டிபிபி" பயன் படுத்தப்படுகிறது. கிறீம் வகைகள் தோல்களுக்குள் ஊடுருவிச் செல்வதற்கு "டிபிபி" துணை புரிகிறது.

இத்தகைய காரணங்களினால் அழகு சாதனப் பொருட்களில் "டிபிபி" அதிகளவில் சேர்க்கப்படுகின்றது.

அமெரிக்கச் சட்டப்படி நேரடியாக உட்கொள்ளப்படும் பொருட்கள் மீது மட்டுமே இரசாயனப் பாதுகாப்புப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

இதனால் அழகு சாதனப் பொருட்களில் "டிபிபி" போன்ற தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருட்கள் இடம் பெற்று விடுகின்றன.



# வீட்டில் முதலிடம் முதலுதவிப் பெட்டிக்குத்தான்!

ஒருவருக்கு எந்த நேரம் வைத்தியம் தேவைப்படும் என நாம் கூறமுடியாது.

ஒரு வருத்தம் ஏற்பட்ட உடனே, வைத்தியரிடம் கொண்டு செல்லும் முன் முதலுதவி செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுவது அதிகம்.

அதற்காக எப்போதும் வீட்டில் ஒரு முதலுதவிப் பெட்டி இருக்க வேண்டும்.

இலகுவாக எடுக்கக் கூடிய இடத்தில் முதலுதவிப் பெட்டியை வைத்திருங்கள்.

அதனுள் உங்கள் குடும்ப வைத்தியரின் தொலைபேசி இலக்கம், அருகில் உள்ள மருத்துவமனையின் அவசர சேவை இலக்கம் என்பவற்றைப் பெரிய எழுத்தில் எழுதி ஒட்டவும்.

முதலுதவிப் பெட்டிகளைக் கடையில் வாங்கலாம், அல்லது நீங்களே ஒன்றைத் தயாரிக்கலாம்.

முதலுதவிப் பெட்டியில் பின்வரும் மருந்துகளும், உபகரணங்களும் கட்டாயம் இருக்க வேண்டும்.

* கட்டுப் போடும் துணி
* பாதுகாப்பு ஊசி
* பஞ்சு
* உடல் வெப்பமானி
* கத்தரிக்கோல்
* பிளாஸ்டர்
* மருந்து அளவுக் கோப்பை
* பொட்டாசியம் பரமங் கனேற்று
* பரசிட்டமால்
* டெட்டோல்
* சவ்லோன்
* சேர்ஜிகல் ஸ்பிரிட்
* வின்டோ ஜின்



# பாராட்டு விழாவில் சிவத்தம்பி வெளியிட்ட இறுதி ஆசை!

தம்மைப் பெற்றவர்கள் மீதும், தாம் பிறந்து தவழ்ந்த மண்மீதும், தம்மை ஆளாக்கிய கல்வி நிலையத்தின் மீதும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி. இதை அவர் கொழும்பில் தமக்கு நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் நிதர்சனம் காட்டிவிட்டார்.

''எனது சாம்பல் எனது பெற்றோரின் கரவெட்டி மண்ணில் விக்னேஸ்வராக் கல்லூரியின் நினைவுகளோடு இரண்டறக் கலக்க வேண்டும். இது என் உணர்வுகளுடன் உறைந்துபோன எனது இறுதி ஆசை'' என்று சிவத்தம்பி பகிரங்கமாகக் கூறினார்.

தமிழியல் ஆய்வுக்கென தமிழக அரசு வழங்கும் திரு.வி.க.விருதினை பேராசிரியர் கா.சிவத்தம்பி பெற்றிருக்கிறார்.



விழாவில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்.
— படங்கள்: பிரபாகரன்

இதற்கென ஒரு பாராட்டு விழா கடந்த மூன்றாம் திகதி வெள்ளவத்தை இராம கிருஷ்ண மிஷன் சிறிய மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவினை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளை ஏற்பாடு செய்திருந்தது.

கல்லூரி மாணவர்கள், பேராசிரியரின் இளமைக் கால நண்பர்கள், இலக்கிய வாதிகள் என பல்வேறு துறையினரும் விழாவில் கூடியிருந்தனர்.

பேராசிரியருக்கு மிகவும் பொருத்தமான புகழுரைகள், ஆய்வுரைகள் நிகழ்த்தப்பட்டன. விருதும் வழங்கப்பட்டது. பேராசிரியர் பற்றிய 'கரவையூற்று' எனும் மலரொன்றும் வெளியிடப்பட்டது.

விழாவின் இறுதி அம்சமாக இடம் பெற்றது பேராசிரியரின் ஏற்புரை. அந்த உரை சபையோரின் இதயங்களை நெகிழ வைத்தது.

பால பாடம் படித்த நாள் முதல் பல்கலைக்கழகம் சென்ற காலம் வரை தனக்குக் கல்வி உணவினை வழங்கியவர்களைப் பேராசிரியர் நினைவு கூர்ந்தார்.

விக்னேஸ்வராக் கல்லூரியையும் அந்த மண்ணையும் கொழும்பு சாஹிராக் கல்லூரியையும் கொழும்பு வீதிகளையும், நண்பர்களையும் அவர்களுடன் கூடிக் குலாவி மகிழ்ந்த இன்பமான நினைவுகளையும் பேராசிரியர் மீட்டினார். அப்போது அவர் கண்மணிகள் நீரில் மிதந்தன. அது நெஞ்சை உருக்குவதாகவிருந்தது.

'தமிழக அரசு தனக்கு அளித்த விருது ஈழத் தமிழியல் துறைக்கு அளிக்கப்பட்ட விருதாக தான் கருதுவதாக' பேராசிரியர் கூறினார்.

எனக்கு பாராட்டு விழா நடைபெறும் இச்சந்தர்ப்பம் என்னை என் வேர்களுக்கு இட்டுச் செல்கிறது. பழைய நினைவுகளை ஊதி ஊதிப் பார்ப்பதற்கான வாய்ப்பாக இது மலர்ந்துள்ளது.

ஒரு யாத்திரையின் மீள் திரும்பல் எனக்கும் நமது நாட்டிற்கும் அவசியம்.

வறுமையில் செழுமை காணும் படி என் அம்மா வள்ளியம்மை சொல்வார். கொலுசு காலுக்கு வெறுங்கால் அடிமை அல்ல என்பதும் அவர் தந்த அரும் பதம் தான்.

வள்ளியம்மை என்ற தாய் என்னைப் பெற்றார். விக்னேஸ் வரா என்ற தாய் எனக்குக் கல்வி அமுதம் ஊட்டினார்.

வி.க. விருது கிடைத்தது எனக்கு அல்ல. ஈழத் தமிழியல் துறைக்கு. அதன் பாரம்பரியத்திற்கு என் உறுதியான எண்ணம் இது.

எனது சாம்பல் எனது பெற்றோரின், கரவெட்டி மண்ணில், விக்னேஸ்வராக் கல்லூரியின் நினைவு களோடு இரண்டறக் கலக்க வேண்டும் என்பது என் உணவர்வுகளுடன் உறைந்து போன இறுதி ஆசையாகும். இப்படிச் சிவத்தம்பி கூறினார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ஜே.பி. திசாநாயக்கா பேராசிரியர் சிவத்தம்பி குறித்து கருத்துரை வழங்கிய போது அறிவும் ஆய்வுத் திறமும் ஒருங்கே பெற்ற ஓர் அற்புதமான பேராசிரியர். இத்தகையோர் கிடைப்பது அரிதிலும் அரிது என்றார்.

கலாநிதி மௌனகுரு தமது உரையில் 'மூப்பிலும் வினையுள்ள செயல்புரிவோம் சாதல் எய்துழன் மேன்மைகள் பல புரிவோம்' என்ற ஒடிசி காவியம் வழங்கும் வார்த்தைகள் போல், தனது துறையில் ஆழமான புலமையும், ஏனைய துறைகளில் சிறந்த அறிவும் பெற்றவர் பேராசிரியர் என்றார்.

முன்னாள் தினகரன் ஆசிரியர் ஆர்.சிவகுருநாதன் பேசுகையில் நாடகத்துறையை பிரதானமாகக் கொண்டவொரு நடமாடும் களஞ்சியம் சிவத்தம்பி என்றார்.



''கரவையூற்று'' மலரை சுவாமி ஆத்ம கணானந்தஜீக்கு சிவத்தம்பி வழங்குகிறார்

நாடாளுமன்ற உறுப்பினர் பி.பி.தேவராஜ் பேசுகையில் நம் நாட்டின் சிறந்தவொரு கல்விமான். தமிழ் மொழிக்கு மட்டுமல்ல, மொழிமூலம் இன உறவுக்கும் பாலமாகத் திகழ்ந்தவர் சிவத்தம்பி என்றார்.

கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ் உரை நிகழ்த்துகையில் மார்க்ஸிஸம் பேராசிரியரின் சிந்தனைத் தளம். அவருடைய ஆய்வுகள் அனைத்தும் அக்கோட்பாட்டினையே

**கலையமுதம்**
கே.விஜயன்

அடித்தளமாகக் கொண்டு மலர்ந்தவை என்றார்.

சுவாமி ஆத்மகணானந்தஜீ பேசுகையில் மக்கள் சமுதாயம் மேன்மையடைவதற்கான தூண்டு கோல்களாக விளங்குபவர்கள் புலமை சார்ந்த அறிஞர்கள். பேராசிரியர் அத்தகைய தொரு நல்லறிஞர். அவர் முழு தமிழ்ச் சமுதாயத்திற்கும் உரித்தான சொத்தாவார் என்றார்.

விழாவினை மிகவும் சிறப்புற ஒழுங்கு செய்திருந்த வீ.ஏ.திரு ஞானசுந்தரம் ''கரவையூற்று'' நூல் பதிப்புரை சம்பந்தமான விவரங்களை வழங்கினார். நன்றியுரையும் கூறினார்.

# மானுடத்துக்கு மேன்மை அளித்தவர் மகாகவி பாரதி



நடனசிகாமணி நன்றி தெரிவிக்கின்றார். அருகில் கம்பவாரிதி இ.ஜெயராஜ்

கிட்டத்தட்ட 13 நூற்றாண்டு காலம் நிலவி வந்த ஒரு கவிதை மரபினை பாரதியின் கவிதைகள் மீறின. அதேவேளை புதிய மரபினை உருவாக்கின. அதுவரை கடவுளர்களைப் பாடுவதே மரபாகவிருந்தது. அதனை, மனிதனைப் பாடும் மரபாகப் பாரதி மாற்றினான். இப்படித் தமிழக அரசு இலக்கியப் பேரவையின் தலைவர் பேராசிரியர் இரா.செல்வக்கணபதி கூறினார்.

இலங்கை மக்கள் பொதுப்பணிமன்றம் கடந்த மாதம் 31ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடாத்திய பாரதி விழாவில் கலந்து உரை நிகழ்த்திய வேளையிலேயே பேராசிரியர் இரா.செல்வகணபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேராசிரியர் சோ.சந்திரசேகரம் தலைமையில் விழா நடைபெற்றது. இவ் விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பி.பி.தேவராஜ், மாவை சேனாதிராஜா, மற்றும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

'புதிய வார்ப்புக்கள்' எனும் தலைப்பில் பேசிய பேராசிரியர் இரா.செல்வக்கணபதி தமது உரையில் மேலும் கூறியதாவது.

கி.பி.7ஆம் நூற்றாண்டுக் காலம் வரையிலான தமிழ்க் கவிதை இலக்கியத்தை எடுத்துக் கொண்டால், 'இன்னாருக்காக இன்னார் பாடினார்' என்பதைத் தான் காணமுடியும்.

வசதி படைத்த மன்னர்களை, அல்லது சமூகப் பெரியார்களைக் கல்வியில் புலமை பெற்ற ஏழைக் கவிஞன் போற்றிப் புகழ்ந்து பாடியவையே இலக்கியமாகத் திகழ்கின்றன.

தமிழ்க் கவிஞன் மனித மேன்மைகளை எடுத்துரைப்பதையே பாடு பொருளாகக் கொண்டிருந்தான்.

7ஆம் நூற்றாண்டு வரை இந்நிலை நீடித்தது. அதன் பிறகு 19ஆம் நூற்றாண்டின் இறுதி வரை இலக்கியத்தின் பாடுபொருள் கடவுளர்களைப் பற்றியதாகத் திசை மாறியது.



பி.பி. தேவராஜ் பாரதிக்கு மாலை சூட்டி வணக்கம்

இக்காலக்கட்டத்தில் முக்கியத்துவம் பெற்ற சமய போர்களே இதற்கு அடிப்படைக் காரணிகளாக அமைந்தன.

சங்க காலத்தில் இன்னாருக்காக இன்னார் பாடினார் என்பவைகள் தான் கவிதை இலக்கியங்களாகத் திகழ்ந்த போதும் பாடு பொருள் மானிடமாக இருந்தது. அதன் பிறகு ஆண்டவன் முதன்மை பெற்று, மானிடம் பின் தள்ளப்பட்டது.

13 நூற்றாண்டுகள் நிலவி வந்த இந் நிலையை மாற்றியமைத்து மீண்டும் கவிதையில் மானிடத்தை முதன்மைப் படுத்தியவன் மகாகவி பாரதியாவான்.

பாரதி 39 ஆண்டுகளே இவ்வுலகில் வாழ்ந்தான். இக்குறுகிய காலத்தில் தமிழ் இலக்கியத்தில் பாரதி ஏற்படுத்திய மாற்றம் மாபெரும் புரட்சி ஆகும்.

மானிடத்தை மேம்படுத்திய பாரதி பழைமைக்கும் புதுமைக்கும் பாலமாகத் திகழ்கிறான் என்பது அதன் இன்னொரு சிறப்பாகும்.

நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல், இமைப் பொழுதும் சோராதிருத்தல் என்ற அறைகூவல் பாரதிக்கு முன்னர் எந்தக் கொம்பனாலும் முன்வைக்கப்படாத சிறப்புக்குரிய ஒன்றாகும். இப்படி அவர் கூறினார்.

கம்பவாரிதி இ.ஜெயராஜ் தமது உரையில் கூறியதாவது:

மனித சமூகத்திற்குத் தேவையானவற்றை எல்லாம் பாரதி எளிமையாகப் பாடினான். தமிழை எளிமைப்படுத்துவதாகச் சொல்லி அதனை மலினப்படுத்துபவர்கள் அதிகரித்து விட்டார்கள். பாரதியின் எளிமை சிறந்த கவிதைகள் தமிழ் மொழியை வளப்படுத்துகின்றன என்றார்.





செல்வகணபதி உரை நிகழ்த்துகின்றார்

பி.பி.தேவராஜ் எம்.பி தமதுரையில் கூறியதாவது

இந்திய சுதந்திரப் போரவை பல மகான்களை உருவாக்கியது. கவிஞன் பாரதியும் அந்த மகான்களின் வரிசையில் இடம் பெறுகிறான் என்றார்.

மன்றச் செயலாளர் நடன சிகாமணி நன்றி கூறினார்.

செல்வி திருமறைச்செல்வி தமிழ் வாழ்த்தும் பாரதி பாடல்களும் பாட, பாரதியார் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை சூட்டப்பட்டது.

# ஒரு ஷங்கர்!....




சினிமா டைரக்டர் ஷங்கரின் வீடு. வாசலில் பொருத்தியிருந்த காலிங் பெல்லை அழுத்தினார் 'யூனிவேர்ஷல் ஹீரோ' என்ற புதுப்பட்டத்தைத் தன் பெயருடன் புதிதாக இணைத்துக்கொண்டிருக்கும் கமல்ஹாசன்.

ஷங்கரின் அடுத்தபடமான ''ரோபோ''வின் கதாநாயகனான கமல், படத்தின் கதையைப்பற்றி விவாதிக்க ஷங்கரைச் சந்திப்பதற்குப் பல நாட்களாக முயன்றும் முடியாமல் போய்விட்டது.

''முதல்வனின்'' இந்தித் தயாரிப்புக்காக ஷங்கர் வட இந்தியாவிலேயே தங்கியிருந்ததால் - குழந்தைகளைக் குறிவைத்து அவர்களைக் குஷிப்படுத்திப் பணம் பண்ணும் நோக்கோடு தயாராகவிருக்கும் 'ரோபோ' வின் கதைபற்றி விவாதிக்க சரியான சந்தர்ப்பம் அமையாமல் போய்விட்டது.

புதுவருட விடுமுறையையொட்டி வீடு திரும்பியிருந்த ஷங்கரை எப்படியாவது சந்தித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் அவருக்குப் 'போன்' கூடப் பண்ணாமல் நேராகவே வந்து வீட்டுகாலிங் பெல்லையும் அழுத்திவிட்டுக் காத்திருக்கிறார் கமல்.

''யெஸ், கமின்!'' என்று உள்ளிருந்து குரல்வரவே கதவைத்திறந்துகொண்டு உள்ளே நுழைந்த கமலுக்கு பலத்த அதிர்ச்சி!

குழந்தைகள் அணியும் அரைக்கால்சட்டைமற்றும் கையில்லாத பனியனை அணிந்து கொண்டு பொம்மைகளையும் கிலுகிலுப்பைகளையும் வைத்து விளையாடிக்கொண்டிருந்தார் 'பிரபல சினிமா டைரக்டர் ஷங்கர்.

கமலை இன்முகத்துடன் வரவேற்றவர், ப்ரிட்ஜைத்திறந்து ஐஸ்கிறீமையும் சொக்லேற்றுக்களையும் எடுத்துக் கமலுக்குக் கொடுத்தார்.

''என்னரொம்ப அதிர்ச்சியாகிட்டீங்க போலிருக்கே...?'' கமல் கேட்டார்.

வேறொண்ணுமில்லே,குழந்தைகளுக்காகப்படம் பண்ணுகிறபோது அவங்கமாதிரியேமாறினாத்தான் அவங்களதிர்பார்ப்புகள்,கனவுகளைத்தெரிஞ்சுக்க முடியும்கிறதாலஇப்படி மாறிட்டேன்.இனிப்படம் முடியறவரைக்கும்இதே'செட்-அப்'தான்!' என்றுசர்வசாதாரணமாகச் சொன்னார்ஷங்கர்.

''ஷூட்டிங்கின் போதும் இதே கோலம் தானா?'' என்றார் கமல் கவலையுடன்.

''நோ! நோ! இந்த 'செட்-அப்'ல நான் இருக்கிறபோது பல ஆங்கிள்ள இருந்தும் போட்டோ எடுத்து வைச்சுக்கிட்டு ஷூட்டிங்கின் போது அடிக்கடி எடுத்துப் பார்த்துக்கிட்டேன்னா 'மூட்' தானாகவே வந்துடும்!'' என்றவர் பிரத்தியேகமாகத் தான் எடுத்து வைத்திருந்த புகைப்படங்களை எடுத்துக் கொடுத்தார்.

அந்தப் போட்டோக்களைப் பார்த்த கமலுக்குப் பயங்கர ஷாக்!

'முதல்வனில்' மனீஷாவின் குழந்தைத்தனமான ஆக்ஷன்களை ரகசியமாக 'ஸ்டில்ஸ்' எடுத்துவைக்கும் அர்ஜூன், அவற்றை மனீஷாவிடம் காட்டும்போதும் மனீஷாவுக்கு ஏற்படும் அதிர்ச்சியையும் வெட்கத்தையும் போல பல மடங்கு உணர்வுகள் கமலை வந்து தாக்கின.

கால் சராயை மட்டும் அணிந்து தரையில் தவழும் ஷங்கர் - வாயில் சூப்பியை வைத்தபடி சிணுங்கும் ஷங்கர் - அடம்பிடிக்கும் ஷங்கர் - இன்னும் - அழுது ஆர்ப்பாட்டம் பண்ணும் - மண்ணில் உருண்டு புரளும் - சிலேட்டில் கிறுக்கும் - பொருட்களை உடைத்துத்தள்ளும் - என்று விதம்விதமான ஆக்ஷன்களில் போட்டோக்களை எடுத்துத் தள்ளியிருக்கும் ஷங்கரைப் பார்க்கப் பார்க்க இனம் புரியாத பயமொன்று கமலின் அடிவயிற்றிலிருந்து கிளம்பி துரித கதியில் மூளையை வந்தடைந்தது.

ஷங்கரின் 'செட்-அப்' புகளில் தன்னைக் கற்பனை பண்ணிப் பார்த்தார் கமல். ஒரு நிமிடம் உலகமே சுற்றுவது போலிருந்தது.

என்னதான் படத்துக்குப் படம் வித்தியாசமான வேடங்களில்தான் நடித்தாலும் அதற்காக இப்படியுமா நடிக்க முடியும்? ஏதோ 'ரோபோ' சமாச்சாரம் மொடேர்ன் டெக்னாலஜியுடன் தயாராகிறது போன்ற சமாச்சாரங்களால் கவரப்பட்டு நடிப்பதற்கு ஒப்புக்கொண்டாலும் இப்படியெல்லாமா நடிக்கச் சொல்வார் ஷங்கர்? அப்புறம் குழந்தை நட்சத்திரம் - 'பேபி' கமல் என்றல்லவா பட்டம் கொடுத்துவிடுவார்கள்!

கமலின் எண்ணவோட்டத்தைப் புரிந்து கொண்ட ஷங்கர், ''பயப்படாதீங்க. இது உங்க வேஷத்துக்கான 'திங்கிங்' இல்லை, ஒருசின்னப்பையனா இருந்து அவன் என்ன எதிர்பார்ப்பான் என்பதைப்பத்திதிட்டம் போடத்தான்இந்த விளையாட்டெல்லாம். உங்களுக்குப்படத்தில 'ரோபோ' வேஷம்தான்!''

''ரோபோ''ன்னா, நிஜமான ரோபோவா? இல்லே படத்தோட ஆரம்பத்திலேயே எனக்குக் கல்யாணம் ஆயிடுதுங்கறதை 'சிம்பாலிக்கா' சொல்றீங்களா?''

''ஏன் அப்படிக் கேட்கிறீங்க?''

''திருமணமாயிடுச்சுன்னா

# ஒரு கமல்!!!....

மனைவியோட கண்ட்ரோல்ல அவ மாவாட்டுன்னா ஆட்டணும்; துணி துவைக்கணும் ; காலைப் புடிச்சுவிடணும்னு 'ரோபோ' மாதிரி சொல்றதையெல்லாம் செய்யணுமில்லை, அதான் கேட்டேன்!''

'தெனாலி' யில் கிளைமாக்ஸில் ஜெயராம் சிரிக்கும் சிரிப்புப் போல 'ஹா...ஹா...ஹி!'' என்று பெரிதாகச் சிரித்த ஷங்கர் ''நல்ல தமாஷ் போங்க! இந்த ஐடியாவை என்னோட அடுத்த படத்துல 'யூஸ்' பண்ணிக்கிறேன்'' என்றார்.

''சரி, நிஜ 'ரோபோ'ன்னா லவ் ஸீனெல்லாம் இருக்காதே?'' என்று கவலையுடன் கமல் கேட்க.

''தாராளமாக இருக்கு! ஆனா அது உங்களுக்கில்லே. பார்க்ல, பீச்ல நடக்கிற காதல் காட்சிகளைச் சும்மா பார்த்துக்கிட்டு கம்முனு நிற்கவேண்டியதுதான்!''

''அம்மாடி! டீவில கிரிக்கெட் மாட்ச் பார்க்கும்போது நாமளும் விளையாடுற மாதிரி கற்பனை பண்ணிப்போமே, அதுபோல கற்பனை பண்ணிக்க வேண்டியதுதானா?''

''ஆமா, வழக்கமா உங்க படங்களில் நீங்க லவ் பண்ணும் போது ரசிகர்கள் 'ஆ'ன்னு பார்க்கறதுபோல 'ரோபோ'ல நீங்க பார்க்க வேண்டியதுதான்''

''அட்லீஸ்ட் ஒரு முத்தக்காட்சி கூட இல்லையா எனக்கு?

''இருக்கே! உங்களை ரோபோவாக வடிவமைக்கிற கிழட்டு விஞ்ஞானி சந்தோஷத்துல அடிக்கடி உங்களுக்கு முத்தம் கொடுத்துட்டே இருப்பாரு!''

''ஐயோடா! அந்த ஆசாமியை வாயை நன்னா கழுவிட்டு நடிக்கச் சொல்லுங்க. அப்புறம் ஸ்பாட்டிலேயே நான் மயக்கம் போட்டுடப் போறேன்.''

''அதவுடுங்க கமல். உங்களுக் குத் தான் பாட்டு ஸீனெல்லாம் தாராளமா இருக்கே!''

''பாட்டா? டூயட் தானே?''

''அதான் இல்லை. ஏராளமான குழந்தைங்ககூட சேர்ந்து 'டுவிங்கிள் டுவிங்கிள் லிட்டில் ஸ்டார்...', 'ஹப்பி பேர்த்டே டூ யூ....'' அப்படின்னு பாடறமாதிரி படம் பூரா உங்களுக்கு ஒரே பாட்டு பாட்டா இருக்கும். ரஹ்மானும், வைரமுத்துவும் சேர்ந்து ரொம்ப அருமையா பாடல்களை உருவாக்கியிருக்காங்க!''

'அவங்களும் இதே மாதிரி அரை டிரவுஸர், சாக்லெட்டோடதான் அலையறாங்களா' என்றுகேட்க நினைத்த கமல், ஷங்கரைப் பார்த்து விரக்தி தொனிக்கும் குரலில் ''அட ஆண்டவனே! ஒரு சண்டைக் காட்சியாவது உண்டா?'' என்றார்.

''ஆளவந்தானே! உம்ம படத்துல சண்டை இல்லாமலா? தாராளமா இருக்கு. அப்பப்போ சின்னப்பசங்க கும்பல் கும்பலா நின்னு சண்டை போடுவாங்க. உடனே நீங்க அங்கே போய் அவங்களோட சண்டையை நிறுத்தி, அறிவுரை கூறி சமாதானப்படுத்தி வைக்கணும்! இது போன்ற காட்சிகள் படம் நெடுக வந்துகிட்டே இருக்கும். டைட்டில்ல கூட 'பயங்கர சண்டைகள் நிறைந்த படம்'னு போடுவோம்''.

''அட தேவுடா! எனக்கு லவ் இல்லை; கிஸ் இல்லை; டூயட் இல்லை; கேவலம் சண்டைகூட இல்லை.- அப்போ படம்பூரா 'காமெடிதானா?' கமல் கேட்டார்.

'அப்படின்னும் சொல்ல முடியாது. ஆனா அப்பப்போ 'காமெடி' ஸீன் வந்துக்கிட்டே இருக்கும். ஸ்கூல் பசங்களெல்லாம் உங்கமேல கல்லெறிவாங்க; நாயை விரட்டிவிடுவாங்க; சேற்றை வீசுவாங்க; உங்க பின்புறத்துல சரவெடியைக் கட்டி வெடிக்க வைப்பாங்க! அதுக்கு நீங்க படுறபாட்டைப் பாக்கணுமே.... ரொம்ப ரொம்ப தமாஷா இருக்கும். ஹி... ஹி...''

இதுவரை பொறுமையாக தன்னுள் எழுந்த கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டிருந்த கமலால் அதற்கு மேலும் தாங்க முடியவில்லை.

''யோவ் டைரக்டர்! எல்லாப் படமும் 'ஹிட்' கொடுக்கிறீர்னு என்னைவச்சுப் படம் பண்ண ஒரு சான்ஸ் தந்தா, சொதப்பல் வேலை பண்ணுறீரே? உம்ம சந்திச்சு கதைபற்றி 'டிஸ்கஸ்' பண்ணணும்னு எத்தினி நாளா காத்துக் கிடந்து 'ஆளவந்தான்' ஷூட்டிங்கை கூட இடையில் நிறுத்திட்டு ஓடி வந்தேன். இப்படிப் பண்ணிட்டீரே? நீரும் உம்ம படமும், உமக்கு ஒரு கும்பிடு! உம்ம படத்துக்கும் ஒரு கும்பிடு!!....

...வரேன்... இல்ல...

# ஒரு ரோபோ!!....

போறேன்! இனி வரவே மாட்டேன்- கதிர்காமக்கந்தனே காப்பாத்து!''

''சடார்!!'' கதவை அறைந்து பூட்டிவிட்டு காரைக் கிளப்பிக்கொண்டு புறப்படுகிறார் கமல்.

''மனிதர் நடித்துக் கொடுக்க இது மனிதப்படமே அல்ல... அல்ல....'' என்று பின்னால் ஷங்கர் கத்துவது நாராசமாய் கமல் காதில் ஒலிக்கிறது.

ஷங்கரைத் திட்டித்தீர்த்தவாறே சிறிது தொலைவு காரில் போயிருப்பார், திடீரென்று அவரது 'செல்-போன்' அலறுகிறது.

லைனில் ஷங்கர், ''என்ன கமல் ஸார், கோபிச்சுக்கிட்டுப் புறப்பட்டுட்டீங்க? சின்னப்பையன் டிரஸ்ல இருந்தேனா, அதான் கொஞ்சம் குறும்பு பண்ணிட்டேன். அளவோட நிறுத்த முடியாம கொஞ்சம் ஓவராவே குறும்பைக் காட்டிட்டேன் போலிருக்கு.

சின்னப்பையன்கிற நினைப்புல இருந்ததால என்னையே என்னால கண்ட்ரோல் பண்ணமுடியாமப் போச்சு! ப்ளீஸ், மன்னிச்சுட்டு திரும்பி வாங்க, கதை பற்றி டிஸ்கஸ் பண்ணுவோம். இந்தத் தடவை தப்பு நடக்காது. ப்ளீஸ் வாங்க!'' கெஞ்சினார் ஷங்கர்.

''யோவ் ஷங்கர்! இந்தத் தடவை உன்னை மன்னிச்சு திரும்பி வர்றேன். இனிமே ஏதாவது ஏடாகூடம் பண்ணினா தொலைச்சுப்புடுவேன்! தொலைச்சு!!

மொதல்ல அந்த கருமாந்திரம் புடிச்ச டிரஸ்ஸையும் பொம்மைகளையும் தூக்கி எறிஞ்சுட்டு ஒழுங்கா டிரஸ் பண்ணிக்கிட்டு இரும்!'' என்று செல்போனில் மிரட்டி, 'ஆளவந்தான்' ஷூட்டிங்குக்காக இடுப்பில் சொருகியிருந்த கத்தியை ஒரு தடவை தொட்டுப்பார்த்துவிட்டுக் காரைத் திருப்பி ஷங்கரின் வீடு நோக்கிப் பறக்கவிட்டார் கமல்.




-கற்பனை

-ப்ராடி-

எதிர் வரும் 14 ஆம் திகதி காதலர் தினம் வருகிறது. இளமைத் துடிப்புக்குத் தீனிபோடும் காலம் இது. வயதானவர்களும் இளமைக்கால நினைவுகளை மீட்டிப்பார்ப்பார்கள். எல்லோரும் இந்தக் கவிதையைப் படித்துப் பார்ப்போமா?



# தூ(துய)ரத்துப் பச்சை

காதலொடு காலம் களிப்புற்று
இன்ப விளையாட்டிலே
இதயம் பரிமாறி – வடக்கில்
துயரங்கள் மத்தியிலும்
துன்பம் அறியாது
துயில் துறந்து, துடித்து
கணம் எல்லாம் அவர் நினைவில்
வெட்கித் தடுமாறி.......
வெட்டிய கண்களை
மடல்களால் மூடி
கைகளுக்குள் முகம் புதைத்து
விரலிடையால்
வெளி உலகு நோக்கி
கண் சிமிட்டி
கனவு பல கண்ட கணங்களை
நினைக்கும் போது........!

அன்று
அந்தக் காதலர் தினத்தில்.......
ஆதவன் கீழ்வானை நோக்கி
விழும் நேரம் வருவதற்காய்.....
விடியலில் இருந்து.....
வழியெல்லாம் விழிவைத்து
காத்திருப்புப் படலம் தொடங்கி.....!

அந்தி சாய்ந்ததும்
அவரைக்காண
அத்திக்காய் ஓடி, ஆல மரத்தடியில்
'செல்'லடிகள் மத்தியிலும்
'சொல்'லடிகள் பரிமாறி
சொப்பனத்தில் மிதந்து
சொந்தமாய கற்பனைகள் பல கோத்து
கதையளந்து – கால் கிளைந்து
கைவிரல்களில் சொடுக்கெடுத்து
கைகோத்து
'பரா' வெளிச்சத்தை
'நிலா' நிலவெறிப்பதாய் நினைத்து
நினைவிழந்து
'சன்ன' மழை மத்தியிலும்
சின்னதாய் – காதல்த் தூறலிலே நனைந்து
கதையளந்த – அன்றைய அந்தக்
கணங்களை
நினைக்கும் போது.......!

கல்விப் பெறுபேறு வந்து
தொடர் படிப்பிற்காய்
தலைநகர் விரைகையிலே
திடீர் பிரிவுத் திகைப்பும்!
இனம் புரியாப் படபடப்பும்
இளவட்டப் பூச்சியமாய்
இதயப் பரிதவிப்பும்......!

கடல் கடக்கும் கணங்களிலே
கடலோரக் கவிதையாய் – மனம்
கவி மழை சிந்த
கண்கள் கண்ணீர் மழை சிந்த
கணப் பொழுதுகள் எல்லாம்
கனப் பொழுதுகளாகிக்
கரைந்த – அந்தக்
கணங்களை நினைக்கும் போது.......!

நாட்கள் உருண்டோடி
வாரங்கள் பல கடந்து
மாதங்கள் தாண்டி
வருடங்களாகியும்......
வற்றா அருவியாய்....
கண்ணோரம் வழிந்து
கன்னத்தில் கோடேற்றி
கடவாய் தொட்டு
உவர் சுவையூட்டி
தலையணை ஈரநனைந்து கலையும்
இரவுகளை நினைக்கும் போது......!

தூரத்துப் பச்சைக்கா
தொடரும் காத்திருப்பும்..... பரிதவிப்பும்...
மீண்டும்
"காதலர் தின" – சந்திப்பு வரும் நாளுக்காய்
எண்ணத்தை விண்ணுக்கு உயர்த்தி
வெண்ணிலா நோக்கி.....
இன்றும்
அன்றைய நினைவுகளுடன்.......

– தாவை. லோ.து(ள)ஷி




கண்ணுக்குக் குளிர்ச்சியான நிறத்தை விரும்பாமல், ஏதோ ஆசையில் வானுக்கும் கடலுக்கும் பொதுவான நிறமுடைய கட்சியில் அட்டகாசமாகச் சேர்ந்தார் அந்த அரசியல் வாதி.

செய் நன்றிக் கடனாகப் பேரீச்சம் பழத்துக்கும் எண்ணெய்க்கும் பெயர் பெற்ற நாட்டுக்குத் தூது போக நியமிக்கப்பட்டார். அங்கேயும் அவர் தனது தில்லு முல்லு கைவரிசையைக் காட்டியிருக்கிறாராம்.

எல்லா மரங்களையும் கொத்திப் பதம் பார்த்த மரங்கொத்தி வாழை மரத்தைப் பதம் பார்த்து மாட்டிக் கொண்டது போல, இப்போது அவரது நிலை ஆகிவிட்டது.

தன் அருமந்த புத்திர சிகாமணியைப் பற்றித் தாறுமாறான தகவல்களைக் கொடுத்து இலாபம் தேட முயன்றது தான் அவருக்குச் சிக்கலாகி விட்டது.

இது எப்படியோ அம்பலமாகி மேலிடத்துக்கும் போய் விட்டதால் மூட்டை முடிச்சுகளுடன் திரும்பி வர உத்தரவு பறந்துள்ளதாம்.

வருபவர் மீண்டும் இன்னொரு நாட்டுக்குப் போவாரா அல்லது வீட்டுக்குப் போவாரா என்பது பெரிய இடத்து அம்மணி கையில் தான் உள்ளது என்று பறக்கும் அமைச்சரும் கைவிரித்து விட்டாராம்.

****

அதிகாரத்தரப்பார் இரண்டாவது முறையும் பதவிக்கு வரும் முன்னர் அமைச்சர்களின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்று கூறியிருந்தார்கள். அப்படிக் குறைக்கத் தேர்தல் முடிவுகள் இடமளிக்கவில்லை. அதனால் உலகிலேயே அதிகமான அமைச்சர்களைக் கொண்ட நாடு என்று கூறும் அளவுக்கு அமைச்சர்கள் பெரும் எண்ணிக்கையில் நியமிக்கப்பட்டனர். இதனால் அரசாங்கத்துக்கு செலவு பலமடங்காக அதிகரித்தது.

அதே நேரம் அமைச்சர்களுக்கான பாதுகாப்பு அதிகாரிகளும் அதிகரித்து விட்டனர். இது இப்போது அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்குப் பெரும் தலையிடியாகி விட்டதாம்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். காலி வீதியில் உள்ள ஒரு பிரதியமைச்சர் இதுபற்றி இப்படித்தான் கூறினார்.

"ஒரு அமைச்சருக்கோ, பிரதியமைச்சருக்கோ 4-16 பேர் பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவையிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நாங்கள் ஒரு கலியாண வீட்டுக்கோ உறவினர் வீட்டுக்கோ போக முடியாதுள்ளது.

போனால் அத்தனை பேருக்கும் மினரல் வோட்டர், சாப்பாடு, தங்குமிட வசதியெல்லாம் நாமே செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். செய்யாவிட்டால் முதுகுக்குப் பின்னால் சொல்லித்திரிவார்கள். எங்களுக்கும் செலவு, எம்மை அழைப்பவர்களுக்கும் அதிக செலவு.

இத்தனையும் எங்களால் செய்து கொடுக்கப்பட்ட நிலையிலும், உணவு, தங்குமிட வசதி முதலியவற்றுக்காக கணக்குக் காட்டி அவர்கள் தங்கள் பகுதிக்குப் பொறுப்பான அதிகாரிகளிடம் வசூலித்து விடுகிறார்கள்".

****

நடைபயின்று எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒரு கட்சி அது. தலைமைப் பதவியின் இரண்டாம் தரத்தை அலங்கரிக்கும் அவரும் நடைபயின்றார். ஒரு 'தேவாலய' பக்கமாக நடை பயின்று வந்த அவர் 'யாரையோ' நினைத்துத் தேங்காயை உடைத்து விட்டு 'தேவாலய'வுக்குள் போக விரும்பினார்.

ஆனால் காலில் சப்பாத்துடன் உள்ளே போக முடியாத நிலை. நடைபயின்று களைத்துப் போய் விட்ட அவர் குனிந்து சப்பாத்துக்களைக் கழற்றுவதில் சிரமப்பட்டார். அருகில் நின்ற அவரது ஆதரவாளர்கள் உதவி செய்யப் போக விரும்பாதவர்கள் போல நின்றனராம்.

ஆனால் சீருடை அணிந்த ஒருவர் மட்டும் தனது திணைக்களத்துக்கே அவமானம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு சப்பாத்தைக் கழற்றி பத்திரமாக ஒரு ஓரத்தில் வைத்து உதவினாராம். அருகில் நின்ற வேறு சில சீருடையாளர்கள் ஆத்திரத்தால் பொங்கி நின்றனராம்.

****

குழப்ப நிலையில் இருந்த கட்சியின் தலைவர்கள் விவகாரம் இரு தரப்பு இணக்கத்துடன் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு விட்டது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உள்ளுக்குள்ளே புகைச்சலை ஏற்படுத்த உள்ளூர முயற்சி செய்பவர்கள் அந்தரங்கமாகச் செயற்பட்டு வருகிறார்களாம்.

புகைச்சலுக்காக எரியூட்ட முயல்பவர்களில் தாய்க் குலத்தவர்கள் சிலரும் துணை போயிருக்கிறார்களாம்.

ஆண் தலைவர் தனது பதவிகளை ராஜினாமா செய்யப் போகிறார் என்று ஒரு பேச்சு அடிபட்டது. இது மெய்யா பொய்யா என்று அறிய பேனாக்காரர் ஒருவர் முக்கிய புள்ளி ஒருவரிடம் விவரம் கேட்டார்.

அப்படியில்லை என்று காரணகாரியங்களுடன் விளக்கம் அளித்த அவர் வதந்தி பரப்புபவர்கள் பற்றிச் சொன்ன ஒரு குட்டிக் கதை இது.

"மெடம் போலவே பேசி வதந்தி பரப்புபவர்கள் இருக்கிறார்கள். 'சுமுக தீர்வு' காணப்பட்ட அன்று இரவு டிவிகாரர்கள் சிலர் தொலைபேசியில் அந்தத் தரப்பினருடன் பேசினார்கள்.

'லீடர் சிப் பிரச்சினை இலேசில் முடியாது' என்று சொல்லப்பட்டதாம். இதனை உறுதிப் படுத்திக்கொள்ள டிவி காரர்கள் எங்களிடம் இதுபற்றி விசாரித்தார்கள். அப்படிச் சொன்னவர்கள் யார் என்று நாம் டிவி காரர்களைக் கேட்டபோது 'மெடம் தான் சொன்னார்' என்று உறுதியாகக் கூறினார்கள்.

ஆனால் எமக்குத் தெரியும். மெடம் அன்றைய தினம் இரவே அப்படிக் கூறியிருக்க மாட்டார். ஆகவே பத்திரிகைக் காரர்கள் நீங்களும் கவனமாகச் செயற்படுங்கள்"

இப்படிக் கதை சொன்ன அவர் இன்னொன்றையும் கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் தோன்றிய தலைமைத்துவ சச்சரவினைப் பயன்படுத்தி பச்சைக்கட்சியும் நீலக் கட்சியும் ஊடுருவல் செய்ய பெரிய முயற்சி மேற்கொண்டதாம்.

இந்த விவகாரத்தையும், 100 நாள் விவகாரத்தையும் பூதாகரமாக்கிக் காட்ட ஏற்பாடு செய்ததே இக்கட்சியின் சில முக்கிய புள்ளிகள் தான் என்று சாடுகிறார் அந்த முக்கியஸ்தர். அவருடைய கருத்துப்படி-

"அம்பாறையில் முன்னணித் தலைவிக்கு ஆதரவுக் குரல் எழுப்பியவர்களில் பலர் பச்சைக்கட்சியில் இருந்து புதிதாகப் பதவிகளுக்காக பக்கம் மாறி வந்தவர்களே!

நிந்தவூரில் பச்சைக் கட்சிப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் காங்கிரஸ் கொடியுடன் வரவேற்புக் கூட்டத்துக்கு சமுகமளித்திருந்தாராம்.

1985 இல் இருந்து இன்று வரை உறுப்பினர்களாக உள்ள கடும் போக்கு காங்கிரஸ் காரர்கள் பலர் பெண் தலைமைத்துவத்தை அவ்வளவாக விரும்பவில்லை. மொத்தத்தில் 1997 க்குப் பின் காங்கிரஸில் இணைந்து கொண்டவர்கள், தாம் எந்தக் கட்சியில் இருந்து வந்தார்களோ அந்தக் கட்சியின் கைக்கூலிகளாகவே செயற்பட்டிருக்கிறார்கள்" இப்படி அந்த முக்கியஸ்தர் சில விஷயங்களைப் பட்டு வைத்தார்.

## இந்துவின் வீதி உலா

பொன் விழாக் கொண்டாடும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் ஆரம்ப நிகழ்ச்சியாக "இந்துவின் வீதி உலா" ஞாயிற்றுக் கிழமை (11–02–2001) நடைபெறுகிறது.

கல்லூரி அதிபர் த.முத்துக்குமாரசுவாமி தலைமையில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் பங்களிப்புடன் இந்த வீதி உலாவை ஒழுங்கு செய்துள்ளது.

ஞாயிறு காலை 7.30 மணிக்கு கல்லூரியிலிருந்து ஆரம்பமாகும் "இந்துவின் வீதி உலா" வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் சந்திவரை செல்லும். பின்னர் திரும்பி பம்பலப்பிட்டி சந்திக்குச் சென்று ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை ஊடாகமீண்டும் கல்லூரியை வந்தடையும்.

மனோதத்துவ வைத்தியம்

GENERAL PSYCHO THERAPY

நேரடியாக வரமுடியாதவர்கள் அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்கள் வெற்றி கொள்ளவும், தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தவும், மனநிலை பாதிப்பு (ஆரம்ப நிலை) உள்ளவர்களும் பாலியல் குறைபாடுள்ளவர்களும் கடிதமூலம் விளக்கம் பெற்று மனோதத்துவ வைத்தியத்தை Audio Cassette தபாலில் பெற்றுக்கொள்ளலாம். நாடறிந்த பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr. P. ஆறுமுகம் அவர்களை

கொழும்பில் பெப்ரவரி 20-25 திகதி வரை

DR.ARUMUGAM (S.A.M.P) REG. 9492

New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No.10, Reclamation Road, Colombo-11.

T.P 074-713547, 074-715536, செல்லல் - 072 664867

கல்முனையில் மார்ச் 3-4 திகதிகளில்

T.M.M. பாமசி கல்முனை T.P 067-29529

வவுனியாவில் பெப்ரவரி 10-11 திகதிகளில்

(முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்)

Vanni Inn, 2ம் குறுக்குத் தெரு, ... T.P. -024-21405.

கடிதத் தொடர்பு

Residence Tele phone:- 065-24019
Dr.P. Arumugm,
No.51/5, Koolavady Road, Batticaloa, Sri Lanka.

## மரண அறிவித்தல்

### திரு.சிவராசா இராசேந்திரன்

(ஆஸ்பத்திரி வீதி, சங்கானை)

சிவராசா இராசேந்திரன் 6/01/2001 அன்று செவ்வாய்க்கிழமை காலமானார். இவர் ஆஸ்பத்திரி வீதி சங்கானையை பிறப்பிடமாகக் கொண்டவரும், ஜேர்மனி முன்சனில் வசித்து வந்தவரும், காலஞ்சென்ற முன்னாள் வர்த்தகர் வீ.சிவராசா செல்லம்மா ஆகியோரின் புத்திரனும், அம்பனை சுன்னாகம் மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட ராஜினியின் (கனடா) அன்புக் கணவரும், ரஜீனன், ரதுனன், ராஜிந்தா(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு. திருமதி செல்லத்துரை தவமணி ஆகியோரின் மருமகனும், திரு. திருமதி தர்மராசா (சிறீ) சிலோனி (ஆசிரியை யாழ்.இராமநாதன் கல்லூரி சுன்னாகம்), ஈஸ்வரன் (ஜேர்மனி), கிருஸ்னா (டோகா), சிறீக் கணேசா (கனடா), கதிரினி(வவுனியா மகளிர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும்

காலஞ்சென்ற சோமசுந்தரம் கனகம்மா, புஸ்பராணி, செல்வராணி, இந்திராணி, விமலராணி, சுவேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வே.பரமசாமி (இ.போ.ச.காவரை நகர்), வ.தங்கவடிவேல்(பிரதம எழுதுவினைஞர் - பிரதேச சபை சங்கானை) மு.கதிரவேலு (முகாமையாளர் - சீத்தன்ஸ் பான்சி ஹவுஸ், 'சுடர் ஒளி' விநியோகஸ்தர் ஸ்ரேசன் றோட், வவுனியா), க.மகேந்திரன்(டோகா) ஆகியோரின் மைத்துனரும், சசிகலா (சங்கானை), பகீரதன் (உக்ரேன்), பிறேமகலா (ஜேர்மன்), புஸ்பகலா, டுமிகலா(லண்டன்) சுதாகரன்(சுவிஸ்), பத்மலதா, விஜயலதா(வவுனியா), பிரபாகரன்(லண்டன்), இன்பகரன் (மத்திய மகா வித்தியாலயம், வவுனியா) சுகேந்தி (கனடா), கனிஸ்ரிகா, கம்சிகா (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 11.02.2001 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு இல.A/18 சிவன் கோயில் முன் வீதி, சின்னப்புதுக் குளம், வவுனியாவிலுள்ள அன்னாரது இல்லத்தில் ஈமைக்கிரியைகள் நடைபெற்று பூவரசங்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : மு.கதிரவேலு
A/18. சிவன் கோயில் முன்வீதி,
சின்னப்புதுக்குளம், வவுனியா.
தொ.பே.இல. 077 – 323192, 024 – 22939

# ஆஸி வீரர்களுக்கு ஐஸ் அங்கிகள்

இந்தியாவுக்கு செல்லவுள்ள அவுஸ்திரேலிய வீரர்கள் இந்தியாவில் நிலவும் உஷ்ணமான காலநிலையையிட்டு அச்சமடைந்துள்ளனர்.

இவர்களை வெயிலிலிருந்து பாதுகாப்பதற்காக ஐஸினால் தயாரிக்கப்பட்ட உடையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



மெக்ராத்

பெனியன் போன்ற இவ்வாடையை கிரிக்கெட் சீருடைக்கு மேலாக அணிந்து கொள்ளலாம்.

கடந்த 4ஆம் திகதி பேர்த் நகரில் நடைபெற்ற ஸிம்பாப்வேயுடனான போட்டியின் இடைவேளையின்போது பரீட்சார்த்தமாக இதை அவுஸ்திரேலிய வீரர்கள் அணிந்து பார்த்தனர். பேர்த் நகரில் 35 பாகை செல்ஸியஸ் வெப்பநிலை நிலவியமை குறிப்பிடத்தக்கது.

1986ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியொன்றில் ஆஸி வீரர் டீன் ஜோன்ஸ் சுமார் 8 மணி நேரம் ஆடுகளத்தில் நின்று 210 ஓட்டங்களைப் பெற்றார். ஆனால் ஆட்ட முடிவின்போது அவரது எடையில் 4 கிலோ குறைவடைந்திருந்தது. அவசரமாகப் பல போத்தல் சேலைன்கள் ஏற்றப்பட்டு உயிராபத்திலிருந்து அவர் காப்பாற்றப்பட்டார்.

அவுஸ்திரேலிய அதிகாரிகள் இவ்வாறான சம்பவங்களைக் கருத்திற்கொண்டு இந்த ஐஸ் ஆடையைத் தயாரித்துள்ளனர்.

தற்போது கார்ல்ட்டன் சுற்றுப் போட்டியிலும் இதைப் பரிசீலித்துப் பார்த்து அவை பலனளித்தால் இந்தியாவில் அவற்றை உபயோகிப்போம் என அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்டீவ்வோ கூறியுள்ளார்.

இந்தியா மிகவும் வெப்பமான ஒரு நாடு. போட்டியின் போது ஓரிரு ஓவர்களுக்கு இந்த ஐஸ் ஆடையை அணிந்தால் உடலை அவை குளுமைப்படுத்தும் என வேகப்பந்து வீச்சாளர் கிளென் மெக்ராத் கூறுகிறார்.

தொடர்ச்சியாக 15 டெஸ்ட் போட்டிகளில் வெற்றியீட்டிய அவுஸ்திரேலிய அணி இந்தியாவிலும் வெற்றிப் பயணத்தைத் தொடர கங்கணம் கட்டியுள்ளது. ஆனால் 1969க்குப் பின் இந்தியாவில் டெஸ்ட் தொடரில் வெற்றியீட்டியதில்லை. இதை முறியடிக்க சகல விதத்திலும் தன்னைத் தயார்படுத்துகிறது அவுஸ்திரேலியா.

இந்திய- அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இம்மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# பெண்கள் நீச்சல் போட்டி: ஆண்கள் பார்க்கத் தடை

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் தெற்காசிய விளையாட்டு விழா பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டு விழாவில் நடைபெறும் பெண்கள் நீச்சல் போட்டிகளைப் பார்வையிடுவதற்கு ஊடகவியலாளர்களோ ஆண் பார்வையாளர்களோ அனுமதிக்கப்படமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய நாடான பாகிஸ்தானின் மத கலாசாரத்திற்கு இசைவாக இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இதற்கு முன்னர் தெற்காசிய விளையாட்டு விழா நடைபெற்றுள்ள போதிலும் பெண்கள் நீச்சல் போட்டி நடைபெற்றதில்லை.

''பெண்கள் நீச்சல் போட்டிகளைப் பார்வையிட பெண்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். இத்தகைய நிபந்தனையின் கீழாவது இப் போட்டியை நடத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்'' என சாவ் விளையாட்டு விழா ஏற்பாட்டுக் குழு உறுப்பினரும் பாக். ஒலிம்பிக் சங்கத்தின் செயலாளருமான மொஹமட் லத்திப் பட் கூறினார்.

அண்மையில் இலங்கைக்கு வந்த அவர் பத்திரிகையாளர் சந்திப்பொன்றிலேயே இவ்வாறு கூறினார்.

''வேறுநாடுகளில் இருந்து வரும் போட்டியாளர்களும் இவ்விதிக்குட்படுத்தப்படுவது முறையானதா?'' எனக்கேட்டபோது ''இந்நிபந்தனையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அல்லாவிடின் பெண்கள் நீச்சல் போட்டியை ரத்துச்செய்துவிட வேண்டியதுதான்'' என அவர் பதிலளித்துள்ளார்.

இம்முறை சாவ் விளையாட்டு விழாவில் தடகளம், கால்பந்து, கரப்பந்து, பெட்மின்டன், டேபிள் டென்னிஸ், கராத்தே, டேக்வண்டோ, குத்துச்சண்டை, மல்யுத்தம், பாரம் தூக்குதல், துப்பாக்கி சுடுதல், நீச்சல், படகோட்டம், கபடி, ஸ்குவாஸ், ஆகிய 15 விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

ஸ்குவாஸ், படகோட்டம் என்பன முதல்முறையாக இதில் சேர்க்கப்பட்டுள்ளன. கூடைப்பந்தாட்டம் நீக்கப்பட்டு கபடி விளையாட்டு சேர்க்கப்பட்டமை பற்றி தான் ஏமாற்றமடைந்துள்ளதாக லத்திப் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானின் கூடைப்பந்தாட்ட அணி பலமானதாக விளங்குகிறது.

இதற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது பாகிஸ்தான், இந்தியா, இலங்கை நாடுகள் கூடைப்பந்தாட்டத்திற்கு வாக்களித்தன. ஆனால் ஏனைய நாடுகள் கபடிக்கு வாக்களித்ததால் கபடி விளையாட்டு சேர்க்கப்பட்டது.

# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# ரொனால்டோவிடம் கொள்ளை

பிரேஸில் நாட்டின் பிரபல கால்பந்தாட்ட நட்சத்திரம் ரொனால்டோ தனது சொந்த நாட்டிலேயே வழிப்பறிக் கொள்ளையர்களிடம் காரையும் பணத்தையும் பறிகொடுத்த சம்பவம் அண்மையில் நடைபெற்றுள்ளது.

பிரேஸிலின் ஷோ பௌலோ என்னுமிடத்தில் கடற்கரையோர வீதியில் சென்று கொண்டிருந்த ரொனால்டோவின் காரை துப்பாக்கியை நீட்டி பிடிக்கப்பட்டது.

தனது பணப்பையைத் திருப்பித் தருமாறு தொலைக்காட்சி மூலம் கொள்ளையர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார் ரொனால்டோ.

முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக கடந்த ஏப்ரல் முதல் போட்டிகள் எதிலும் ரொனால்டோ பங்குபற்றவில்லை. தனது சொந்த நகரான ரியோ டி ஜெனீரோவில் சிகிச்சை பெற்றுவருகிறார் அவர்.




ரொனால்டோ

வழிமறித்தனர் ஐந்து கொள்ளையர்கள்.

ரொனால்டோவைப் பலவந்தமாகக் காரிலிருந்து வெளியேற்றிவிட்டு காரை கடத்திச் சென்று விட்டனர். அதன்பின் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறையிட்டார் ரொனால்டோ.

ஒரு மணித்தியாலத்தின் பின்னர் அவரது காரை பொலிஸார் கண்டுபிடித்தனர். அந்தக் கார் இருக்குமிடத்தை இலகுவாக அறிந்து கொள்ளக்கூடிய அதிநவீன சாதனங்கள் - குளோபல் பொஸிஸனிங் சிஸ்டம் - காரில் பொருத்தப்பட்டுள்ளன. இதன் உதவியுடனேயே கார் கண்டு

பிரேஸில் நாட்டின் புகழ் பெற்ற கால்பந்தாட்ட நட்சத்திரமான பேலேயின் காரையும் ஒருமுறை கொள்ளையர்கள் வழிமறித்தனர்.

ஆனால் காரிலிருப்பவர் தனது நாட்டிற்கு உலகப் புகழ்பெற்றுத் தந்த பேலே என்பதை அடையாளம் கண்டுகொண்ட கொள்ளையன் பேலே பயணத்தைத் தொடர வழிவிட்டு ஒதுங்கினான். ஒரு வருடத்திற்கு முன் இதே இடத்திலேயே மேற்படி சம்பவமும் நடைபெற்றது.

ஆனால் ரொனால்டோவின் புகழ் கொள்ளையர்களிடம் எடுபடவில்லை.



பங்கஜ் ரோய்

இந்தியாவின் புகழ் பெற்ற முன்னாள் கிரிக்கெட் வீரர்களில் ஒருவரான பங்கஜ் ரோய் கடந்த 4ஆம் திகதி காலமானார். இந்திய அணி சார்பாக இவர் 43 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 2,442 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

1955 இல் நியூஸிலாந்து அணிக்கெதிராக வினு மன்காட்டுடன் இணைந்து பெற்ற 413 ஓட்டங்கள் டெஸ்ட் போட்டியில் 1ஆவது விக்கட்டுக்கான உலகசாதனை இணைப்பாட்டமாக விளங்குகிறது.

அப்போட்டியில் ரோய் 173 ஓட்டங்களையும் மன்காட் 231 ஓட்டங்களையும் பெற்றனர். உலக சாதனை படைத்த வினுமன்காட், பங்கஜ் ரோய் (வலது, உட்படம்) ஜோடியை படத்தில் காணலாம்.

# ஐ.சி.சி கிண்ணத்திற்கு 24 அணிகள் போட்டி

டெஸ்ட் அந்தஸ்து பெறாத அணிகளுக்கிடையிலான ஐ.சி.சி கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் ஜூன் 28ஆம் திகதி முதல் ஜூலை 17ஆம் திகதி வரை கனடாவில் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, அமெரிக்கா உட்பட 24 அணிகள் பங்குபற்றவுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெறும் அணிகள் 2003ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படவுள்ளன.

24 அணிகளும் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இரண்டு ஆரம்பச் சுற்றுப் போட்டிகள் நடத்தப்படும். அதில் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் லீக் ஒன்று அமைக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படும்.

இதில் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் இறுதிப் போட்டியில் பங்குபற்றவுள்ளதோடு உலகக்கிண்ணப் போட்டிகளுக்கான தகுதியையும் பெறும்.

அத்துடன் மூன்றாம் நான்காம் இடங்களைப் பெறும் அணிகளுக்கிடையில் நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் அணியும் உலகக்கிண்ணப் போட்டிகளுக்குத் தகுதி பெறும்.

டொரன்டோ கிரிக்கெட் கழகம், அஜக்ஸ், மால்டன், மேப்பிள் லீஃப், ஜி ரோஸ் லோர்ட், சன்னிபுரூக் ஆகிய இடங்களில் ஆரம்பச் சுற்றுப் போட்டிகள் நடை பெறும்.

டொரன்டோ கி. கழக மைதானத்தில் இறுதிப் போட்டி நடைபெறும். போட்டிகள் நடைபெறவுள்ள சகல மைதானங்களும் டொரன்டோ பிரதேசத்திலேயே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் அணிகளின் விபரம்:

ஆர்ஜென்டீனா, பேர்முடா, கனடா, டென்மார்க், கிழக்கு மற்றும் மத்திய ஆபிரிக்கா (மாலாவி, தான்சானியா, ஸாம்பியா), பிஜி, பிரான்ஸ், ஜேர்மனி, ஜிப்ரால்டர், நெதர்லாந்து, ஹொங்கொங், அயர்லாந்து, இஸ்ரேல், இத்தாலி, மலேஷியா, நமீபியா, நேபாளம், பப்புவா நியூகினியா, ஸ்கொட்லாந்து, சிங்கப்பூர், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், உகண்டா, ஐக்கிய அமெரிக்கா, மேற்கு ஆபிரிக்கக் கூட்டமைப்பு (காம்பியா, கானா, நைஜீரியா, சியரா லியோன்)

# மே.இந்திய அணிக்கு ஹூப்பர் தலைவர்?

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் தொடர்ச்சியான தோல்விகளால் அதன் தலைமைப் பதவி ஜிம்மி அடம்ஸிடமிருந்து பறிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே புதிய தலைவராக கால் ஹூப்பர் நியமிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

மேற்கிந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் உபதலைவரான கால் ஹூப்பர் 1999இல் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார்.

அதன்பின் அவுஸ்திரேலிய பிராந்திய அணியொன்றில் விளையாடிய அவர் தற்போது மீண்டும் டெஸ்ட் போட்டிகளில் விளையாட இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஹூப்பர் 80 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 4,153 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அத்துடன் 192 ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றி 4,012 ஓட்டங்களையும் 163 விக்கட்டுகளையும் பெற்றுள்ளார்.

மீள்வருகையின் முதற்கட்டமாக மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான புஸ்டா கிண்ணச் சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றி வருகிறார். இதில் பார்டோஸ் அணியுடனான போட்டியில் 159 ஓட்டங்களைப் பெற்றதுடன் 4 விக்கட்டுகளையும் அவர் வீழ்த்தித் தனது திறமையை நிரூபித்துள்ளார்.



ஹூப்பர்

அதனையடுத்து மார்ச் மாதம் நடைபெறவுள்ள தென்னாபிரிக்க அணியுடனான டெஸ்ட் தொடரில் ஹூப்பர் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது அவருக்கு 35 வயதாகிறது.

கடந்த சில வருடங்களுக்குள் மேற்கிந்திய அணி தோல்விகளைத் தழுவும் போதெல்லாம் அதன் தலைவர்கள் மாற்றப்பட்டுள்ளனர். ரிச்சி ரிச்சர்ட்ஸன் ஓய்வு பெற்றதன் பின்னர் முறையே கொட்னி வோல்ஸ், பிரையன் லாரா, ஜிம்மி அடம்ஸ் ஆகியோர் தலைவராக நியமிக்கப்பட்டனர்.

அடம்ஸ் தலைமை வகித்த 15 டெஸ்ட் போட்டிகளில் 4 வெற்றிகளையும் 9 தோல்விகளையும் பெற்றுள்ளார்.

இதில் இறுதியாக விளையாடிய 9 போட்டிகளில் 8 போட்டிகளில் தோல்வியுற்றுள்ளார். இங்கிலாந்து அணியுடன் 3-1 விகிதத்திலும் அவுஸ்திரேலியாவுடன் 5-0 விகிதத்திலும் அடம்ஸ் தலைமையிலான மேற்கிந்திய அணி தோல்வியுற்றது.

அத்துடன் தலைமைப் பதவி அடம்ஸின் துடுப்பாட்டத்தையும் பாதித்துள்ளதாகக் கருதப்படுகிறது. இறுதியாகப் பங்குபற்றிய 5 போட்டிகளில் மொத்தமாக 151 ஓட்டங்களை மட்டுமே அவர் பெற்றுள்ளார்.

# ராசி பலன்



**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1**

இராசிநாதன் செவ்வாய் அட்டமஸ் தானத்தில் எட்டாம் வீடான சொந்த வீட்டில் ஆட்சியாக இருப்பது விசேஷம். பணப்பழக்கம் தாராள மாக இருக்கும். கல்வி முன்னேற்றம் உண்டு. தடைப்பட்ட திருமணம் நடக்க வாய்ப்புண்டு. புதிய திருமணப்பேச்சு ஆரம்பமாகும். சகோதரர்கள் சுகமாக இருப்பர். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர்கள் ஒற்றுமையாக இருப்பர். மனச்சஞ்சலம் இருக்கும். இனம் புரியாத பயம் இருக்கும். எதிர்மறையான சிந்தனை தோன்றும். எதிரிகளுக்குள் பிளவு இருப்பதால் உடனடி ஆபத்தில்லை. குடும்ப சுகம் உண்டு. குடும்பத்தில் தோன்றும் பிரச்சினை உடனடியாக மறையும். காதலர்கள் காதல் மயக்கத்தை உணர்வர். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு.



**இடபம்: கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

இராசிநாதன் சுக்கிரன் இலாபத்தான மான பதினோராம் வீட்டில் உச்சம் பெற்று பூரண பலத்துடன் இருப்பது யோகமே. பொருளாதாரத்தில் இடை இடையே சிறு தடை தோன்றினாலும் சமா ளிப்பீர்கள். சகோதரர் நலம். சொந்தக்காரர் விசுவாசமாக இருப்பர். வீடு, வாகனம் இலாபம் தரும். மன அமைதி உண்டு. மனதில் பூரண அமைதி இருக்கும். யதார்த்தமான நல்ல எண்ணங்கள் உதயமாகும். எதிரிகள் புதுப்பலம் பெற்று மனம் மாறி நண்பர் ஆவார்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். குடும்ப விசுவாசம் பாதுகாக்கப்படும். காதலர்கள் சமபலம் பெற்றிருப்பதால் ஒரே சிந்தனையில் செயல்படுவார்கள். தொழில் துறையில் புதிய உத்தியைக் கையாண்டு வெற்றி பெறுவீர்கள். தேக சுகம் சிறிது பாதிக்க வாய்ப்புள்ளது.



**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

இராசிநாதனோ அட்டமத்தானத்தில் இராசியிலோ ராகு, சனியின் பார்வை சற்று சங்கடம் தான். கையில் காசு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்கள் அன்பாய் இருப்பர். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். உறவினர் தாமரை இலைத் தண்ணீர் போல இருப்பர். மனம் இரு நிலையில் செயற்படும். ஒரு கால் ஆனந்தமாயும் மறுகால் துன்பமாயும் இருக்கும். எதிரிகள் வலுப்பெற்று இருக்கிறார்கள் அவதானமாக இருக்கவும். குடும்பத்தில் வாக்குவாதம் இருக்கும். மனதளவில் விலகி இருப்பீர்கள். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். காதலர்கள் காட்டில் மழை இல்லை. தொழில் துறையில் புகழ் பெறுவீர்கள். புதிய தொழில் முயற்சி ஆரம்பிக்கலாம்.



**கடகம்: புனர்பூசம்4, பூசம், ஆயிலியம்**

இராசிநாதன் இரண்டுமுதல் ஐந்தாம் வீடு வரை சஞ்சரிக்கும் போது குரு, சுக்கிரன், சனி ஆகியோரின் பார்வை கிடைப்பது யோகமே. பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்கள் கண்ணை இமை காப்பது போல காப்பர். வீடு வாகனம் இலாபமீட்டும், உறவினர்கள் பட்சமாக இருப்பர். மனத்தைரியம் இருக்கும். எதற்கும் அஞ்சமாட்டீர்கள். புதிய எண்ணங்கள் தோன்றும். மன வைராக்கியத்தால் பல காரியங்கள் சாதிப்பீர்கள். எதிரிகள் வலிமைகெட்டு சரணடைவார்கள். குடும்பத்தில் எச்சரிக்கையுடன் கூடிய அமைதி இருக்கும். காதலர்கள் தங்கள் நட்பை வெளியுலகிற்கு தெரியப்படுத்து வார்கள். தொழில்துறையில் போட்டி இருக்கும்.



**சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1**

இராசிநாதன் சூரியன் இன்பத்தானமான ஏழாம் வீட்டில் இருப்பது நலம். சுக்கிரனின் பார்வை . இராசிக்குக் கிடைப்பது யோகம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்களின் ஆதரவு இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். மனம் தொலைநோக்கோடு செயல்படும். மனதில் தெய்வீக பக்தி உருவாகும். மனம் சில சமயம் கற்பனை சுகத்தில் மூழ்கி இருக்கும். எதிரிகள் சில சமயம் உதவி செய்யவும் கூடும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குடும்ப சுகம் நன்றாக இருக்கும். குடும்ப ஐக்கியம் பலப்படும் . காதலர் வாழ்வு ஆனந்தமயம். காதல் களைகட்டும் .தொழில் விருத்தியுண்டு. பதவி உயர்வு உண்டு.



**கன்னி: உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2**

இராசிநாதன் பூர்வபுண்ணிய ஸ்தானத்தில் இருக்க இராசியை குரு சுக்கிரன் முழுப்பலத்துடன் நோக்குவது சிறப்பைத் தரும். பொருளாதாரம் நன்றாக இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்கள் நல்லாயிருப்பார்கள். வீடு, வாகனம் இலாபம் தரும். பிரயாணம் அமையும். சொந்தக்காரர், அயலார் அன்பு பாராட்டுவர். மனம் கவலையில் தோய்ந்திருக்கும். சில சமயம் வாழ்க்கை வெறுக்கவும்கூடும். மனதின் ஓரத்தில் நம்பிக்கை ஒளி வீசும். எதிரிகள் நலன் கெட்டுவெளியூர் போய் விடுவார்கள். குடும்பசுகம் உண்டு. குடும்ப இரகசியம் பாதுகாக்கப்படும். காதல் வாழ்வு இன்பமயம், அன்புமயம் அதே சமயம் வரம்பு மீறாமலும் இருப்பர். தொழிலில் போட்டி இருந்தாலும் முன்னேறுவீர்கள்.



**துலாம்: சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

இராசிநாதன் சுக்கிரன் பூரணபலம் பெற்று ஆறாம் வீட்டில் உள்ளார். இராசிக்கு சனியின் பார்வை உண்டு. நன்மை தீமை கலந்த பலன்களை எதிர்பார்க்கலாம். கையில் பணம் இருக்கும் . கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரருக்கு உதவ முடியாத நிலை தோன்றலாம். வீடு வாகனங்களால் செலவு ஏற்படும். உறவினர் ஓடும் புளியம்பழமும் போல இருப்பர். மனம் எப்போதும் கீழ்நோக்கியே சிந்தனையில் இருக்கும். வாழ்க்கையின் நல்ல பக்கத்தைப் பாராமல் தீய பக்கத்தையே பார்க்கும் நிலை ஏற்படும் .எதிரிகளின் கோட்டைக்குள் சென்று உங்களால் எதிரிகளைத் தாக்க முடியும். குடும்பத்தில் அமைதியுண்டு. துணைவியிடம் இருந்து பணத்தை எதிர்பார்க்க வேண்டிய சந்தர்ப்பம் உருவாகலாம். காதலர்கள் தங்களுக்குள் எழுதாத உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவார்கள். தொழில் சிறப்புண்டு.



**விருச்சிகம்: விசாகம் 4, அனுஷம், கேட்டை**

இராசிநாதன் செவ்வாய் தன் சொந்த வீட்டில் ஆட்சியாக புதுப்பலம் பெற்று பூரண குருவின் பார்வையோடு இருக்கிறார். இதுவரை இருந்த தொல்லை தீரும். கடன் நீங்கும். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். கல்வியில் முன்னேற்றம் உண்டு. சகோதரர்களுடன் சிறு சச்சரவு ஏற்படலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். உறவினருடன் பனிப்போரில் ஈடுபட வாய்ப்புண்டு. மனம் தன் ஒளிப்படும். சாந்த சொருப நிலையில் இருக்கும். கற்பனையில் சுகம் காணும். எதிரிகள் உங்களோடு நேருக்கு நேர் பொருத வாய்ப்புண்டு. இருசாராரும் சமநிலையில் இருப்பார்கள். குடும்பத்தில் பரஸ்பரம் ஆலோசனை கேட்டு நடப்பீர்கள். காதலர்கள் பாடு கொண்டாட்டம். தொழில் சிறப்புண்டு.



**தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1**

இராசிநாதன் குரு சத்துருதானமான ஆறாம் வீட்டில் இருப்பதும் இராசிக்கு ஒரு புறம் சுபமும் மறுபுறம் அசுபமும் இருப்பது சமபலனில் பொருளாதாரம் தடைப்படும். கடன்பட நேரிடலாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்களுக்கு நீங்கள் உதவ வேண்டி வரும். வீடு வாகனம் இலாபம் ஈட்டும். உற்றார் உறவினர் விசுவாசமாக இருப்பார். மனதில் தீவிர எண்ணங்கள் தோன்றும். சில சமயம் வாழ்க்கையில் விரக்தி நிலைக்குப் போகக் கூடும். எதிரிகள் பலசாலிகளாகத் தெரிகிறார்கள். அவதானமாக விலகி நடப்பது நல்லது. குடும்பத்தில் முறுகல் நிலை இருக்கும். சில சமயம் விலகி இருக்கவும் கூடும். காதலர்கள் சத்திய சோதனைக்குள்ளாகக் கூடும். உடல் நிலை சிறிது பாதிக்கலாம். தொழில் வெற்றி உண்டு.



**மகரம் : உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2**

இராசியில் புதன் குரு பார்வை பெற்றிருப்பது விசேஷம். இராசிநாதன் சுகஸ்தானத்தில் பலவீனமாக இருப்பது நல்லதல்ல. பணத்தட்டுப்பாடு இருக்கும். பிரயாணம் அமையும். கல்வியில் தடை ஏற்படலாம். சகோதரர்கள் சுகம். உற்றார் உறவினர் பழைய பகையை மறந்து நட்புப் பாராட்டுவர். வீடு, வாகனம் இலாபம் பெறும். மனம் சாந்த சொருப நிலையில் இருக்கும். ஆரோக்கியமான நடைமுறை சாத்தியமான எண்ணங்கள் தோன்றும். எதிரிகள் செயலால் மனத்தாக்கம் ஏற்படலாம். குடும்பத்தில் பூரண அமைதியும் விசுவாசமும் இருக்கும். காதலர் வாழ்வோ வண்ணமலைச் சோலையில் தேன்சுனை. தேக ஆரோக்கியம் நன்று. தொழில் யோகம் உண்டு.



**கும்பம் : அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.**

இராசிநாதன் சனி வீரியஸ்தானத்தில் பலக்குறைவு ஆட்சி பெற்ற செவ்வாயின் பார்வை இராசிக்கு கிடைப்பது நலம். கையில் பணம் இருக்கும். பழைய கடன் வசூலாகும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்கள் சுகமாக இருப்பார்கள். உற்றார் உறவினர் விசுவாசமாக இருப்பர். வீடு, வாகனம் இலாபம் தரும். மனச்சஞ்சலம் இருக்கும். அளவுக்குமீறிய கற்பனையில் வாழ்க்கை நடத்த முற்படுவீர். எதிரிகள் நிலைமாறி, திசைமாறி தட்டுத் தடுமாறி அலைந்து திரிவர். குடும்ப அமைதி உண்டு. விசுவாசம் உண்டு. ஆண்கள் குடும்பத்தில் பணிந்து போகும் நிலை உண்டு. காதலர்கள் தங்கள் நிலையில் வலுவாக இருப்பர். தேக சுகம் உண்டு. தொழில் சிறப்புண்டு.



**மீனம் : பூரட்டாதி4, உத்தரட்டாதி, ரேவதி.**

இராசியில் சுக்கிரன் பூரண பலத்துடன் இருப்பது யோகம். ஆனால் இருபுறமும் அசுவர் இருப்பது பின்னடைவு. பொருளாதாரத்தை தட்டுத் தடுமாறி சமாளிப்பீர்கள். கல்வியில் ஆரம்பத்தில் மந்த நிலை இருந்தாலும் போகப் போக ஆர்வம் இருக்கும். சகோதரர்கள் நலம். வீடு, வாகனம் பிரச்சினை கொடுத்தாலும் இலாபம் உண்டு. சொந்தக்காரர் விசுவாசமாக இருப்பர். மன அமைதி உண்டு. புறச் சம்பவங்கள் பாதித்தாலும் தன்னியல்பு நிலையில் அமைதியாய் இருக்கும். எதிரிகள் பலமிழந்து ஊர் மாறிப் போகக் கூடும். குடும்ப அமைதி உண்டு. நட்பும் ஐக்கியமும் பலப்படும். காதலர்கள் இதய பாஷையில் அன்பைப் பரிமாறுவர். தேக சுகம் உண்டு. தொழில் செய்யும் இடத்தில் போட்டி உண்டு.

**பொ.சந்திரன்**

**11–02–2001 இருந்து 17–02–2001 வரை**

# "நோக் அவுட்" முறையில் வெற்றுக்கால் சேவல் சண்டை

எடுத்ததற்கெல்லாம் சண்டைக்கு வருபவரை "சண்டைச் சேவல்" என்கிறார்கள்.

சண்டைக்கும் சேவலுக்கும் அவ்வளவு பொருத்தம். சேவல்களைச் சண்டையிட வைத்து அதைப் பார்த்து ரசிப்பதில் எல்லோருக்கும் அலாதிப்பிரியம்.

இலங்கையை விட இந்தியாவில் சேவல் சண்டை பிரசித்தம்.

தென்மாநில அளவிலான சேவல் சண்டை சமீபத்தில் தமிழகத்தின் தஞ்சையில் நடந்தது.

"வெற்றுக்கால் சேவல் சண்டை"யில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து தமிழகத்தின் சுமார் 500 சேவல்கள் கலந்து கொண்டன.

வழக்கமான சேவல் சண்டையில் சண்டை போடும் சேவல்கள் கால்களில் கத்தி கட்டப்பட்டு இருக்கும். ஆனால் இந்தப் போட்டியில் வெற்றுக் கால்களுடனேயே சேவல்கள் சண்டை போட்டன.

ஒரு மணி நேரம் நடந்த இந்தப் போட்டிகள் நொக் அவுட் முறையில் நடத்தப்பட்டன. கால்மணி நேரத்திற்கு ஒருமுறை இடைவேளை விடப்பட்டு போட்டிகள் மீண்டும் நடந்தன.

இரண்டு சேவல்கள் சண்டை போடும் போது தலையைக் கவிழ்த்து கீழே விழுந்தாலோ அல்லது களத்தை விட்டு ஓடி விட்டாலோ அந்தச் சேவல் தோற்றுப் போய் விட்டதாக அர்த்தம் ஆகும்.

அப்படி இல்லாமல் இரண்டு சேவல்களுமே சரியான முறையில் சண்டை போட்டால் இரண்டு சேவல்களுக்குமே பரிசுகள் வழங்கப்பட்டன.



சண்டைக்காக சேவல் தயார் செய்யப்படும் விதம் குறித்து பயிற்சியாளர் ஒருவர் கூறியதாவது:-

முதன்முதலில் சேவலை அதன் காலில் துணியைக்கட்டி இன்னொரு சேவலுடன் மோத விடுவோம். அப்போது அந்த சேவல் நன்றாக சண்டை போட்டால் அதைச் சண்டைக்காக தயார் செய்வோம்.

போட்டி நடப்பதற்கு 21 நாட்களுக்கு முன்பு காலையில் இரண்டு முட்டை வெள்ளைக்கருவில் மிளகு, சீரகம், மஞ்சள் பொடி, நல்லெண்ணெய் ஆகியவற்றைப் போட்டுக்கலக்கி சேவலுக்கு ஊட்டி விடுவோம்.

பின்னர் 11 மணி அளவில் பாதாம் பருப்பு, பிஸ்தா பருப்பு, சாரா பருப்பு, அக்ரூட், திராட்சைப்பழம், பேரீச்சம்பழம், சூல்கந்து, தேன், வாள் மிளகு ஆகியவற்றைச் சேர்த்து அரைத்து 21 உருண்டைகளாகத் தயார் செய்து ஒவ்வொரு நாளும் ஒரு உருண்டை வீதம் சேவலுக்கு வழங்குவோம்.

மாலை 4.00 மணி அளவில் ரொட்டி, கேழ்வரகு, கோதுமை, உளுந்து, பச்சை அரிசி, வறு கடலை, கொண்டைக்கடலை, மிளகு, சீரகம், ஓமம், சுக்கு ஆகியவை சேர்த்த மாவைக் கொண்டு முட்டையின் வெள்ளைக் கருவோடு கலந்து அடுப்பில் போட்டு ரொட்டி போன்று தயார் செய்வோம்.

பின்னர் அந்த ரொட்டி ஆறியதும் நசுக்கி மீண்டும் உருண்டைகளாகத் தயார் செய்து சேவலுக்கு ஊட்டுவோம்.

இந்தத் தீனியைச் சரியாகக் கொடுத்தால்தான் சேவல் நன்றாக சண்டை போடும்.

போட்டிக்கு 21 நாட்களுக்கு முன்பு தினமும் சேவலுக்கு ஒரு நாள் நீச்சல் பயிற்சியும், ஒரு நாள் ஓட்டப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

# 53 ஆவது சுதந்திர தினம்

## கொழும்பில் கொண்டாட்டம்; கண்டியில் ஆர்ப்பாட்டம்
## வடக்குக் கிழக்கில் யுத்தத்தால் மக்கள் திண்டாட்டம்



ஜனாதிபதி உரை நிகழ்த்துகிறார்


நாட்டின் (53 ஆவது) சுதந்திரதினம் முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு இம்முறை அரசாங்கம் – எதிர்க்கட்சி என இரண்டு துருவங்களாகப் பிரித்துக் கொண்டாடப்பட்டது. ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் அரசாங்கம் கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுர நாடாளுமன்றம் அருகே சுதந்திர தினத்தைக் கொண்டாடியது.

அரசின் கொண்டாட்டங்களில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பங்குபற்றாது கண்டியிலிருந்து சுதந்திரங்களை வெல்வதற்கான "மக்கள் சக்தி" பேரணியை ஆரம்பித்தது.



ஜனாதிபதி தேசியக் கொடியை ஏற்றி வைக்கிறார்

அரசின் சுதந்திர தினக்கொண்டாட்டத்தில் ஜனாதிபதியின் உரையே முக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது. வழமையான இராணுவ அணிவகுப்புக்களோ, கலாசார பவனிகளோ இடம்பெறவில்லை. மிகவும் எளிமையான ஒரு



மாணவிகள் மங்கள கீதம் இசைக்கின்றனர்

கொண்டாட்டமாகவே அது அமைந்தது.

இனப்பிரச்சினையை மையமாக வைத்து, தனது உரையை ஆற்றிய ஜனாதிபதி சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தான் விடுத்த அழைப்புக்கு புலிகள் இயக்கத்திடமிருந்து ஓரளவு திருப்தியான பதில்கள் கிடைத்திருப்பதாகக் கூறினார் அரசின் கொள்கை காரணமாக கிடைத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாதெனவும் குறிப்பிட்டிருப்பது தெரிந்தவையே.

ஜனாதிபதி உரை நிகழ்த்தி முடித்ததை அடுத்து அரசின் சுதந்திரத் தினக் கொண்டாட்டங்கள் முடிவுக்கு வந்தன.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் அன்று காலை கண்டியில் ஆலய வழிபாடுகளில் பங்கு பற்றிய பின்னர் கெட்டம்பேயில் இருந்து ஆரம்பித்த மக்கள் பேரணி பிரமாண்டமானதாக அமைந்தது. கண்டி பாரம்பரிய இசைக்குழு முன்னால் செல்ல தலைவர்களும் பொதுமக்களும் அவர்களின் பின்னால் சென்றனர்.

இந்த ஊர்வலம் ஒரு இடத்தைக் கடந்து செல்ல இரண்டு மணிநேரம் பிடித்ததாகக் கூறப்பட்டது. மக்கள் கூட்டத்தின் காரணமாக கண்டி – கொழும்பு வீதியில் பெரும் வாகனப் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. பெருமளவு பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.



மக்கள் சக்தி பாதயாத்திரைக்குத் தலைமை தாங்கி வருகிறார் ரணில் விக்கிரமசிங்க



கொடும்பாவி ஒன்றும் கொண்டு வரப்படுகிறது

இந்த பாத யாத்திரையை ஆரம்பித்து வைத்து கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில் "இன்றைய அரசினால் பறிக்கப்பட்ட ஜனநாயக, பொருளாதார உரிமைகளை மீண்டும் வென்றெடுக்க மக்கள் ஒன்று திரண்டு விட்டார்கள்" என்றார்.

பேராதனை – பிலிமத்தலாவை, கடுகண்ணாவை வழியாக மாலையில் பாதயாத்திரை மாவனல்லையை வந்தடைய முதல்நாள் யாத்திரை முடிவுற்றது. மக்கள் சக்தியின் மகிமை வெற்றிகரமாக அமைந்தது என்று ரணில் அப்பொழுது புளகாங்கிதம் அடைந்தார்.

ஐ.தே.க. வின் கண்டி ஊர்வலம் ஆரம்பமாவதற்கு முன்னரேயே அந்த ஊர்வலத்துக்கு இடைஞ்சல் எதுவும் ஏற்படுத்தக்கூடாது என்று ஜனாதிபதி தனது கட்சியினரை எச்சரித்திருந்தார். அதே போன்று இடைஞ்சல் எதுவுமின்றி ஊர்வலம் சுமுகமாக நடைபெற்றது.

இதேவேளை ஐ.தே.க வின் ஊர்வலத்தை வரவேற்க கேகாலையிலும் பொலகொட என்னும் இடத்திலும் ஜோடனைகள் செய்து கொண்டிருந்த பலர் தாக்கப்பட்டுள்ளனர். திங்களன்று அதிகாலை நடைபெற்ற இத்தாக்குதல்களில் பலர் காயமடைந்துள்ளனர். வெள்ளை நிற





பலரும் தேசியக் கொடியைத் தாங்கி வந்தனர்

டொல்பின் ரக வான் ஒன்றில் வந்தவர்களே பொலகொட பகுதியில் ஜோடனைக்குப் பயன்படுத்தப்பட்ட டிரக் வண்டி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் டிரக் வண்டி சாரதியான இளைஞர் காயமடைந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு – கிழக்கில் மக்களுக்கு நாட்டின் சுதந்திரத்தைப் பற்றி நினைக்கும் மனநிலை இல்லை. யுத்தத்தின் பிடியில் சிக்கி அவல வாழ்வு வாழும் அவர்கள் தங்களுக்கு எப்போது துன்பங்கள்



பாத யாத்திரையில் கலந்து கொண்ட பெருந்திரளான மக்களில் ஒரு பகுதியினர்

துயரங்களிலிருந்து விடுதலை கிடைக்கும் என்று ஏங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

– ப. பன்னீர்செல்வம்



யுத்த பூமியாக விளங்கும் வடக்கின் இடிபாடுகளில் ஒன்று


நியூ திவ்யா ஜுவலர்ஸ்
கலை நயத்துடன் தங்கம், வைரம்
நவரத்தினம் பதித்த அழகிய
டிசைன்களில் நகைகளை உங்கள்
மனம் கவர் விதத்தில் தெரிவு செய்ய
வெள்ளவத்தையில் ஒரே இடம்
NEW DHIVIYA JEWELLERS
42-C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 508501, 505065
Specialist in 22kt. Gold Jewellery



நியூ திவ்யா ஜுவலர்ஸ்
கலை நயத்துடன் தங்கம், வைரம்
நவரத்தினம் பதித்த அழகிய
டிசைன்களில் நகைகளை உங்கள்
மனம் கவர் விதத்தில் தெரிவு செய்ய
வெள்ளவத்தையில் ஒரே இடம்
NEW DHIVIYA JEWELLERS
42-C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 508501, 505065
Specialist in 22kt. Gold Jewellery



இப்பத்திரிகை கொழும்பு 06, வெள்ளவத்தை பொற்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 பெப்ரவரி 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.